# அல்வாய் சாமணந்தறை
# ஆலடிப்பிள்ளையார் கோயில்



## சித்திரத்தேர் வெள்ளோட்டம்
## 24.04.2010
# சிறப்பு மலர்

அருள்மிகு
அல்லைப் பாமனைநதுறை
ஆலைமுப்பின் வைளயார் கோயில்

தலைப்பு : அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில்
சித்திரத்தேர் வெள்ளோட்டம் - சிறப்பு மலர்

பதிப்புரிமை :© கி.கதிர்காமநாதன், தலைவர், 9 ஆம் திருவிழா


பதிப்பு : 2010 ஏப்ரல் 24

மலராசிரியர் : கலாநிதி த.கலாமணி

நூலாக்கக் குறிப்புகள்: $B_5$
பக்கங்கள்:XXiv+56
12 புள்ளி எழுத்துகள்

வெளியீடு :அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில்
9ஆம் திருவிழா உபயகாரர்
அல்வாய்.

அச்சுப்பதிப்பு : கக்ஸ்ரொன் பிறிண்டேர்ஸ்
பருத்தித்துறை வீதி
3ஆம் கட்டை
கல்வியங்காடு



மூஷிக வாஹந மோதக ஹஸ்த
சாமர கர்ண விளம்பித ஸூத்ர
வாமத ரூப மஹேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாதநமஸ்தே!

## பொருளடக்கம்


அருளாசிச் செய்திகள்

வாழ்த்துச் செய்திகள்

மலராசிரியர் உள்ளத்திலிருந்து...

பெருமையெல்லாம் பால கணபதிக்கே! 1

கட்டுத்தேரிலிருந்து சித்திரத்தேர் வரை... 3

விநாயகர் 5

விநாயகர் வழிபாடு 7

உலகை வலம் வந்த விநாயகர் 10

யாழ்ப்பாணக்குடாநாட்டில் கணபதி வழிபாட்டுமரபினூடாக அறியப்படும் அரச பாரம்பரியம், பிராந்தியத்தொடர்புகள் மற்றும் குலமுறைகள் 13

தேர் அமைப்பின் சிறப்பும் தேர்த்திருவிழாவின் மகிமையும் 24

இந்துப்பண்பாட்டில் தேரின் விளக்கம் 27

மானிடப் பிறவியின் மாண்பு 32


இந்து சமயத்தின் பல்துறை வளர்ச்சியும் பரம்பல் நிலையும் - ஒரு புதிய கண்ணோட்டம் 38

இந்து சமய மரபிலே தெய்வங்களுக்குரிய அணிகலன்கள் 42

ஈழத்தில் சைவ ஆலயங்களும் அறப்போதனைகளும் 45

பால கணபதி தேர்த் திருப்பணிக்கு நிதியுதவி வழங்கியுள்ளோர். 50

கலாநிதி த. கலாமணி
சிரேஷ்ட விரிவுரையாளர்
கல்வியியற்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



## மலராசிரியர் உள்ளத்திலிருந்து...

இந்நாள்...
சித்திர சிற்பமணித் தேர் சிங்காரமாய்ப் பவனி வரும்
வெள்ளோட்ட நந்நாள்!

அன்று-
எங்கள் அல்வாயூர் ஆலடியில்
ஆன்றமர்ந்து
பாலகணபதியாய் அருளாட்சி செய்தவன்
கட்டுத்தேரேறி வந்து
அருட்காட்சி தந்தான்.

சிலகாலம் செல்ல...
பஞ்சமுக கணபதியாய் திருமேனி தாங்கிவர
பாலகணபதியை ஆவாகனம் செய்தோம்.
மேலும் சில வருடங்கள்
கட்டுத்தேரில்
பஞ்சமுக கணபதியாய் எழுந்தருளி வந்தான்.

நீண்ட
இருபத்து மூன்று வருடங்கள்...
கட்டுத்தேர்ப் பவனி!

புதிய சித்திர சிற்பமணித்தேரில்
எம் ஆலடியான்
எழுந்தருளி வரும் நாள் எந்நாளோ?
– அடியார்கள் நெஞ்சம் உருகி இறைஞ்சினர்.

ஒன்பதாம் திருவிழா உபயகாரர்
கிருஷ்ணபிள்ளை கதிர்காமநாதன் தலைமையில்
ஒன்று கூடினர்.
தம் முன்னோர் வழியில் அடியார்கள் எண்ணத்தை
செயலாக்க விழைந்தனர்.

ஆலய பரிபாலன பொதுச் சபை அங்கீகாரம்;
தேர் ஆலோசனைக் குழு அங்குரார்ப்பணம்;
உபயகாரர், ஊரவர், நண்பர்கள்,
புலம் பெயர் நாடுவாழ் உறவினர்
பலரிடமிருந்தும் நிதிசேகரிப்பு;
சித்திர ரத வடிவமைப்புக்கும் தேர் மண்டபத்துக்கும்
பொருத்தமான சிற்பக்கலைஞர், கட்டடக்கலைஞர் தேர்வு;
பொறுப்பு ஒப்படைப்பு...

யாவுமே அவனருளால்
இனிதே நிறைவெய்தின.


இன்று வெள்ளோட்டம் காணும்
புதிய சித்திரத்தேரில் ஆரோகணித்து
எம் பஞ்சமுக கணபதி
ஒன்பதாம் திருவிழாநாளில்
அழகுறப் பவனி வருவான்.
அந்த அருட்காட்சி கண்டு
எம் நெஞ்சம் உருகும்.
கண்கள் பனிக்கும்
பிறவிப்பயன் பெற்றோமென்று
வாய் அவனை வாழ்த்தும்.

புதிய சித்திர சிற்பமணித் தேரின்
வெள்ளோட்ட விழா நிகழ்ச்சிப் பதிவாய்
சிறப்பு மலரொன்று புனைந்தோம்.

ஆசியுரைகளாலும்
வாழ்த்துச் செய்திகளாலும்
சமய தத்துவம் நிறை கட்டுரைகளாலும்
இம்மலரை அணிசெய்தோம்.

அவனின்றி ஓர் அணுவும் அசையாது
எல்லாம் அவன் செயல்!
அவனின் நயன தீக்கையில்
நாம் ஒளி பெறுவோம்!!

நல்லை ஆதீன முதல்வர்
இரண்டாவது குரு மஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்



## அருளாசிச்செய்தி

விநாயக அடியார்களுக்கு,

அல்வாய் சாமணந்தறையில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் விநாயகப் பெருமானுக்கு இன்று புதிதாக அமைக்கப்பட்டு தேர் வெள்ளோட்ட நிகழ்வு நடைபெறுவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. ஆலய விழாக்களில் முக்கியம் பெறுவது தேர்த்திருவிழா ஆகும். இதனுடைய அடையாளமாக விளங்குவது மரத்தினால் அமைக்கப்பட்ட சிற்ப வடிவங்களோடு சேர்ந்த தேர் ஆகும். இத் தேர் இளம் சமுதாயத்தில் பல செயற்பாடுகளில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. இதனுள் எல்லாவற்றுக்கும் தலைவனாக விளங்கும் இறைவனை எழுந்தருளச் செய்து வழிபடுவது நம் சமய மரபாகும். பிறவி எடுத்த ஆன்மா ஒவ்வொன்றும் இறைவன் திருவடியைச் சேர்வது நியமமாகும். இதனையே ஆலயங்களில் நடைபெறும் திருவிழாக்கள் நமக்கு உணர்த்துகின்றன. தேரினுடைய அமைப்பு இறைவனுடைய முச்செயல்களைக் குறிக்கின்றது. கீழ்ப்பகுதி பாதாளத்தையும் நடுப்பகுதி பூலோகத்தையும் மேற் பகுதி வான் கலத்தையும் அமைவாகக் கொண்டது இத் தேர். இத்தேரை சிற்ப சாஸ்திரங்களுக்கமைய உருவாக்கிய திரு.ஜீவரட்ணம் ஜெயப்பிரகாஷைப் பாராட்டுகின்றோம். இப்பணியைச் செய்த அனைத்து உள்ளங்களையும் இறைவன் ஆசீர்வதிக்கவும்! இதனைச் சிறப்பித்து வெளியிடப்படும் வெள்ளோட்ட மலரின் மலராசிரியரையும் பாராட்டுகிறோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"



சைவசித்தாந்த பண்டிதர், அருட்பிரபாகரசீலர்
சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் M.A
நெல்லண்டை வடபத்திரகாளிகோவில்,
இலட்சுமணன் தோட்டம்
அருள்மிகு வீரமாகாளியம்மன் வடபத்திரகாளியம்மன்
தேவஸ்தான பிரதமகுரு
அதிபர், யா/குடத்தனை கரையூர் அ.மி.த.க. பாடசாலை,
அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில்
உற்சவ காலப் பிரதமகுரு

## அருளாசியுரை.

மங்களம் நிறைதரு விகிர்தி வருடம் சித்திரைத்திங்கள் 11ம் நாள் (24.04.2010) சனிக்கிழமையன்று மாலை சித்திரத்தேர் வெள்ளோட்டத்திற்கும் சித்திரத்தேர் வெள்ளோட்ட நூல் வெளியீட்டு நிகழ்விற்கும், அதனை ஒருங்கமைத்த குறிப்பாக கிருஷ்ணபிள்ளை, கதிர்காமநாதனுக்கும் அவர்தம் குடும்பத்தினர்களுக்கும் ஊர்ப்பெருமக்களுக்கும் மலர் ஆசிரியர், எமது பிரியமான கலாநிதி.த.கலாமணி அவர்களுக்கும் நாம் பூஜிக்கும் அன்னை ஸ்ரீ நெல்லண்டை பத்திரகாளி, இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் வடபத்திரகாளியம்மன், அல்வாய் அருள் மிகு ஆலடி ஐங்கரப்பெருமான் அருள் மழை சுரக்க வேண்டி ஆசியும் அருளும் கிடைக்க பிரார்த்திக்கின்றோம். அல்வாய் சாமணந்தறை அருள்மிகு பிள்ளையார் தேவஸ்தானம் மிகுந்த பக்திப்பிரவாகம் கொண்டு சிறந்த வளர்ச்சி கண்டு வருகின்றது. மரபுவழி சீர்மியங்கள், வேறு பல அருள் சிறக்கும் தெய்வீக கைங்கரியங்கள் மேலோங்கி வருகின்ற இவ்வேளையில் இவ்ஆலயத்தின் சிறந்த முகாமையாளராக இருந்த கிருஷ்ணபிள்ளை அவர்களின் மகன் கதிர்காமநாதன் அவர்களின் நீண்ட அயரா முயற்சியினால் இவ்வரிய சிற்ப சித்திரமணித்தேர் உருவாகி இன்று வெள்ளோட்டமும் அதற்கான நூல் வெளியீட்டு அமர்வும் சிறந்தோங்க வேண்டுமென்று ஐங்கரப்பெருமான் அருள்மழை சுரக்க மீண்டும் ஆசிவழங்கி அமர்கின்றோம்.

சுபமஸ்து.



பிரம்ம ஸ்ரீ. தானு.வாசுதேவக்குருக்கள்
ஐயப்ப குருசுவாமி சிவதர்மஸாஸ்தா தேவஸ்தான
தர்மகர்த்தா, பிரதமகுரு.

## அருளாசிச்செய்தி

வடமராட்சி அல்வாய் சாமணந்தறை அருள்மிகு பிள்ளையார் தேவஸ்தான சித்திரமணித்தேர் வெள்ளோட்டவிழாவின் மலர் சிறக்கவும் அருள் சிறக்கவும் நாம் பூஜிக்கும் உரும்பிராய் ஐயப்பன் சுவாமி திருவருள் பாலிக்க வேண்டுகின்றேன்.

மேலும் சிவஸ்ரீ.தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் பிள்ளையார் தேவஸ்தானத்திற்கு வருகை தந்த காலத்திலிருந்து கோவில் கிரியைகள், அதன் வளர்ச்சிகள், கட்டட அமைப்புகள், கொடித்தம்பம், கொடியேற்றம், இந்த வரிசையில் இன்று சித்திரத்தேர் வெள்ளோட்டம், தேர் வெள்ளோட்ட சிறப்பு மலர் அனைத்தும் நல்ல முறையில் சிறக்க எல்லாம் வல்ல அல்வாய் அருள்மிகு ஆலடி ஐங்கரன் திருவருள் சுரக்க பல்லாண்டு வாழ்த்துக்களும் ஆசிகளும் என்றும் உரித்தாகுக. விழா உபயகாரர்கள், ஊரவர்கள், கற்றவர்கள், கோவில் நிர்வாகத்தினர்கள், குருக்கள் ஐயா எல்லோர்க்கும் என் நல்லாசிகள் கிடைக்கட்டும்.

சுபமஸ்து



சிவஸ்ரீ.ப.இரத்தினேஸ்வரக்குரு (குகன் ஐயா)
அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார்
தேவஸ்தான பிரதமகுரு

## ஆசியுரை

எல்லாம் வல்ல பரம் பொருளாம் விநாயகப் பெருமானுக்குரிய சித்திரசிற்பத்தேர் செய்தும் அதனை இன்று (24.04.2010) வெள்ளோட்டம் செய்தும், இந்நிகழ்வில் வெள்ளோட்ட மலர் ஒன்று வெளியிட்டு வைக்கும் கிருஷ்ணபிள்ளை கதிர்காமநாதன் குடும்பத்தினர்க்கும் அவர் சார்ந்த எல்லோர்க்கும் அருள் ஞானசுவாமி யோகர்சுவாமி பூஜித்த எங்கள் ஆலடி ஐங்கரப் பெருமான் ஆசியும் அருளும் நல்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்கின்றேன்.

சுபமஸ்து.



செஞ்சொற்செல்வர்
ஆறு. திருமுருகன்
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

## ஆசியுரை

கல்வியிலும் கடவுள் பக்தியிலும் கலையார்வத்திலும் சிறப்புப் பெற்ற திருவூர் அல்வாய். இத்திருவூரில் அருள் கொடுக்கும் அற்புதத் திருத் தெய்வமாக சாமணந்தறை ஆலடி விநாயகர் விளங்குகிறார். அல்லும் பகலும் அயராது உழைத்து தம் குலதெய்வத்திற்கு பெரும் கோவில் உருவாக்கிய இவ்வூர் அடியவர்களின் பக்தி மெச்சத்தக்கது. ஆலடிவிநாயகரை அழகான சிற்பத்தேரில் வீதியுலா கொண்டுவர வேண்டுமென அடியவர்கள் பலவருடமாக கண்ட கனவு இன்று நிறை வேறுகிறது. அழகான, அற்புதமான பஞ்சமுக விநாயகர் தேர் ஏறி அருள் பாலிக்கவுள்ளார். பாவலர்கள் பலரால் சாமணந்தறைப் பானைவயிற்றோன் மேன்மை பாடப்பட்டுள்ளமை பெருமைக்குரியவிடயமாகும். சீரும் திருவும் நிறைந்த அல்வாய் ஆனைமுகன் தேர் பவனியோடு எம்மண்ணில் ஆனந்தமான வாழ்வு மலரப் பிரார்த்தித்து. திருத்தேர் வெள்ளோட்டம் சிறக்கவும் அடியார்களின் வாழ்வு சிறக்கவும் வாழ்த்தி ஆசி கூறி அமைகின்றேன்.

"யாவர்க்குமாம் இன்னுரைதானே"

உயர்திரு க.கணேஷ்
அரசாங்க அதிபர்/மாவட்டசெயலாளர்
யாழ்மாவட்டம்



## வாழ்த்துச் செய்தி

வளங்கள் பல இலங்கும் வடமராட்சியிடத்து, அழகுற அமைந்திட்ட அல்வாய் எனும் பதியில் சாமணந்தறையில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள ஆலடிப்பிள்ளையார் இருபத்து மூன்று ஆண்டுகளாய் உலாவந்த கட்டுத்தேரை விட்டு அழகிய சித்திரத்தேரேறி, வீதியுலா வரும் வெள்ளோட்ட காட்சியைக் காண அவனடியார்கள் பேராவலுடன் காத்திருக்கின்றனர். அல்வாயெனும் ஊரினை நோக்கியவாறு, ஊரெல்லையில் வீற்றிருந்து, தன் நயனதீட்சையால் நல்லருள் பாலித்துவரும் பாலகணபதி பஞ்சமுக கணபதியாய் சித்திரத்தேரில் பவனிவரும் நிகழ்வை அல்வாய் வாழ் அவனடியார்களும் ஒன்பதாம் திருவிழா உபயகாரரும் நிறைவாக்கியுள்ளனர்.

வேழமுகத்து ஞாலமுதல்வன் சித்திரத் தேரேறும் நிகழ்வுகள் தெய்வீக மணங்கமழ, சிறப்புற நிகழ்ந்திட

"நோக்கமொரு தீக்ஷையென நூலுரைக்கும் பாங்கினிலே
ஆக்கமெலாம் நாமடைய ஆலடியில் – மீக்குயரும்
கோயிலுறைந்தூர் முழுதும் கூர்விழியால் பார்ப்பவனை
வாயினால் நாள் தோறும் வாழ்த்து"

என்று சாமணந்தறை பாலகணபதிபால் பாடப்பட்ட வெண்பாவினால் அவன் தாள் வணங்கி வாழத்துகின்றேன்.

திரு இரா. வரதீஸ்வரன்
பிரதேச செயலாளர்
வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம்,
பருத்தித்துறை.




## வாழ்த்துச்செய்தி

அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் ஆலயத்தில் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நடைபெற இருப்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். மகோற்சவங்களில் மிகவும் முக்கியமானது இரதோற்சவ பெருவிழாவாகும் இத்தகைய பெருவிழாவுக்கான சித்திரத்தேரை உருவாக்கி வெள்ளோட்ட விழா காண இருக்கும் அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் ஆலய அடியார்கள், எம்பெருமான் விநாயகருக்கு சித்திரத் தேர் அமைத்து வழிபடும் அனைத்துப் பெருமக்களையும் நான் வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

இறைவனின் ஐந்தொழிலை உணர்த்தும் மகோற்சவ விழாக்களில் அழித்தல் தொழிலை உணர்த்துவது தேர்த்திருவிழாவாகும். எம்மிடம் குடி கொண்டுள்ள நான், எனது என்னும் அகங்கார மமகாரங்களால் விளையும் தீவினைகளெல்லாம் நீங்கி எம்மை தூயவர்களாக்கி அருள்பாலிக்கும் விழா தேர்த்திருவிழா ஆகும். அழகிய சித்திரத்தேரில் எம்பெருமான் ஆரோகணித்து அசைந்து ஆடி வரும் கண் கொள்ளாக் காட்சி எம் உள்ளத்தில் என்றும் நிலைத்திட வேண்டும். எம் இதயத்தை தேராக்கி அதில் ஆலடிப்பிள்ளையாரை எழுந்தருளச் செய்வதற்கு அடையாளமான சித்திரத் தேர் வெள்ளோட்டம் காணும் பேறு பெற்றோர் எல்லோருக்கும் நல்லருள் கிடைக்க வேண்டுமென ஆலடி விநாயகரின் திருவடி தொழுது வாழ்த்துகிறேன். இவ் ஆலடி விநாயகனுக்கு சித்திரத்தேர் அமைத்து வழிபடும் ஆலய அடியவர்களுக்கும் எல்லாவற்றுக்கும் மேலாக இச்சித்திரத் தேரை உருவாக்கிய கலைஞர்களுக்கும் எனது வாழ்த்தையும் ஆசியையும் தெரிவிக்கிறேன் எம்பெருமான் சித்திரத்தேரில் பவனிவரும் அருட்காட்சியை எல்லோரும் கண்டு இன்புறுவோமாக.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திரு.சி.சத்தியசீலன்
பிரதேச செயலாளர்
வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலகம்
கரவெட்டி



## வாழ்த்துச் செய்தி

வடமராட்சி அல்வாய் சாமாணந்தறை விநாயகர் ஆலயத்தின் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இடம்பெற எம்பெருமானின் திருவருள் கைகூடியுள்ளது "வேழமுகத்து விநாயகனை தொழ வாழ்வு மிகுந்து வரும்" என்பது ஆன்றோர் வாக்காகும். அல்வாய் சாமாணந்தறைப் பதியிலே கோயில் கொண்டு எழுந்தருளாட்சி செய்து கொண்டிருக்கும் வேழமுகன் பஞ்சமுக விநாயகனாக சித்திரத்தேரிலே பவனி வரும் அலங்காரக் காட்சி பார்ப்போர் மனதினை பரவசமூட்டவுள்ளது.

ஆலயங்கள் மக்களிற்கு ஆன்மீக ஒளியேற்றி, அறநெறியிலே வழிகாட்டி, உயரிய சமய சமூக விழுமியங்களை வலியுட்டி, மேன்மையான வாழ்வினை பெற்றிட வழிவகுக்கும் சமூக மையங்களாகவுள்ளன. இக்கிராமங்களுக்கு விநாயகப்பெருமான் அனைத்து சிறப்பியல்புகளையும் வழங்க வேண்டி பிரார்த்திப்பதுடன் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா சிறப்பாக இடம்பெற எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஸ்தபதி ஜீவரட்ணம் ஜெயப்பிரகாஷ்
"ஆறுமுகம் சிற்பாலயம்"
திருநெல்வேலி.



## வாழ்த்துரை

அல்வாய் சாமணந்தறைப் பிள்ளையார் ஆலயத்திற்கான சித்திரத்தேரினை நிர்மாணிக்கும் பெரும் பேறு அடியேனுக்குக் கிடைத்தது பெரும் பாக்கியமேயாகும்.

எனத தந்தையார் சிற்பச்சக்கரவர்த்தி ஜீவரட்ணம் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஆறுமுகம் சிற்பாலயம் நாடளாவிய ரீதியில் சித்திரத் தேர்களை நிர்மாணிக்கும் திருப்பணியினை பெருஞ்சிறப்பாக ஆற்றிவருகின்றது.

எனது தந்தையாரின் நல்லாசியுடனும் அவர்தம் சகோதரர்களாகிய திரு.ஆ.துரைராசா, திரு.ஆ.சிவலிங்கம் ஆகியோரின் துணையுடனும் நானும் எனது குழுவினரும் இச் சித்திரத்தேரினை நிர்மாணித்துள்ளோம்.

அல்வாய் சாமணந்தறையில் எழுந்தருளி அருள் பாலித்துவரும் எல்லாம்வல்ல விநாயகப் பெருமான் இச் சித்திரத்தேரில் எழுந்தருளி வீதியுலா வந்து அடியார்களுக்கு இன்னருள் சுரக்கப்பிராத்திக்கின்றேன்.



திரு தி. செல்வநாதன்
தலைவர்
அல்வாய் சாமணந்தறை
ஆலடிப்பிள்ளையார் கோயில் பரிபாலன சபை

## வாழ்த்துரை

எமது ஆலயத்தின் வளர்ச்சியில் இன்று ஒரு திருப்பு முனையாகும். சித்திரத்தேர் வெள்ளோட்டம் என்பது எம் அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் நிகழ்வாகும். இது வரை காலமும் அலங்கரிக்கப்பட்ட கட்டுத்தேரினிலே வீதி பவனி வந்து எமது பக்தர்களுக்கு அருள் பாலித்து வந்த எம் பெருமான் இன்று முதல் அழகிய சித்திரத் தேரேறி அருள்பாலிக்கவுள்ளார்.

கடந்த காலங்களில் எமது ஆலயம் புனரமைக்கப்பட்டு மகா கும்பாபிஷேகம் கண்டுள்ளது. வசந்த மண்டபம் மறுசீரமைக்கப்பட்டு தூபி கலசாபிஷேகம் கண்டுள்ளது. இந்த வரிசையில் இன்று எம்பெருமானது பஞ்ச கிருத்திய தத்துவத்தை மேன்மைப்படுத்த அழகிய சித்திரத்தேர் உருவாகியுள்ளது. இது எமது ஆலயத்தின் கீர்த்திக்கும் மகிமைகதும் எடுத்துக்காட்டாகும். இதே போன்று எமது ஆலயத்தின் தேவைகள் யாவும் அமையப்பெற்று எமது அடியவர்களுக்கு அருள்பாலித்து, கல்வி, செல்வம், ஆரோக்கியம். அமைதி நிலவ எம்பெருமானை வேண்டுகிறேன். இச்சந்தர்ப்பத்தில் இந்தப் பாரிய நிகழ்வில் இந்த ஆலயத்தின் தலைவர் என்ற வகையில் சித்திரத்தேர் உருவாக முன்னின்று தேர்த்திருவிழா உபயகாரர்கள், வடிவமைத்த சிற்பாசாரியர்கள், தேர்மண்டபம் வடிவமைத்த ஸ்தபதிகள் அனைவருக்கும் எம்பெருமான் சகல சௌபாக்கியங்களும் வழங்கி அருள வேண்டுவதோடு, வாழ்த்துரை வழங்கக் கிடைத்த திருவருளையும் எண்ணி பெருமகிழ்வுடன் வாழ்த்தி நிறைவு செய்கின்றேன்.



திரு.ந.துரைராஜா J.P
தலைவர்
அல்வாய் மனோகரா சனசமூகநிலையம்

## வாழ்த்துச் செய்தி

அல்வாய் ஆலடியில் எழுந்தருளி அருட்காட்சி புரியும் பால கணபதிக்கு சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நடைபெறுவது எமது கிராமத்துக்குப் பெருமையாகும். ஊர் கூடி உயரிய தேரினை அமைத்து வடம்பிடித்திழுக்கும் பேரருள் கிடைத்தமை மனதை நிறைவடையச் செய்கின்றது. "தேர்" என்ற வார்த்தையில் அடங்கியிருக்கின்ற 'வாழ்க்கையைத் தேர்ந்துகொள்' என்கின்ற தத்துவத்தை உணர்த்தும் அடையாளமாகிய தேர் எமது கிராமத்து மக்களுக்கும் ஏனைய அடியார்களுக்கும் மேலும் பல சிறப்புக்களைத்தரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

சித்திரத்தேர் தரும் சிந்தனை உணர்வுமூலம் மற்றவர்களை மகிழ்வித்து நாமும் மகிழ்ந்து, மற்றவர்களை வளர்வித்து நாமும் வளர்ந்து, மனிதநேயத்துடன் வாழ்வோம் என்ற எண்ணத்தை மனதிற்கொண்டு, அனைவரும் ஒற்றுமையாக வாழ இந்நாளில் உறுதிபூணவேண்டும் என்று வேண்டி, திருத்தேரினை அமைப்பதற்கு பலவழிகளிலும் அயராது இறைபணியாற்றிய அனைத்து அடியவர்களுக்கும் பாலகணபதி அருள் கிடைக்கப்பெற்று ஆன்மீக மேம்பாடும் சமுதாய மேம்பாடும் தழைத்தோங்கி நல்வாழ்வு வாழப் பிரார்த்தித்து மனோகரா சார்பில் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.



துரைராசா – இராஜவேல்
தலைவர்
அல்வாய் இந்து இளைஞர் மன்றம்

## வாழ்த்துச்செய்தி

அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையாருக்கு ஒரு சித்திரத்தேர் உண்டாகப்போகிறது என்பதை நினைக்கும்போது மனம் மகிழ்வடைகிறது பலகாலமாக கட்டுத்தேராக பவனி வந்த தேர் இன்று சித்திரத்தேராக உருப்பெற்று எமது நீண்டகால அவாவினைநிறைவேற்றியுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் எமது இந்து இளைஞர் மன்றத்தின் சார்பாக வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

எங்கள் ஆலயத்திருப்பணி வேலைகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருவதால் ஆலடி ஐங்கரன் ஆலயமும் புதுப்பொலிவு பெற்று விளங்க அருள்பாலிக்க வேண்டும் என்று அவனின் பாதார விந்தங்களை வணங்குகின்றோம்



திரு நா.ஜெயராஜசிங்கம்
தலைவர்
வடஅல்லை அரசடி விநாயகர் ஆலய
பரிபாலனசபை

## வாழ்த்துச் செய்தி

அகழ்வாரைத் தாங்கி தம்மைப் புகழ்வாரை உய்வித்து நாடியோர் நலம் பெற ஆலடியில் அமர்ந்திருந்து அருளாட்சி செய்யும் சாமணந்தறை ஐங்கரன் ஆரோகணித்து எழுந்தருள தேர் ஒன்று வேண்டுமென்று ஆசையுற்ற அடியார்க்கு திசையெல்லாம் செல்லும் தேரும், உறைவிடமாம் தேர்முட்டியும் நிறைவு பெற்றமை நீள் கரத்தோன் சித்தமே.

இத்தேரை உருவாக்க பேருதவி புரிந்த பெரு மக்கள் வாழ்த்துக்குரியவர்கள், பாராட்டுக்கரியவர்கள். சித்திரத் தேரை உருவமைத்த சிற்பாசாரியரின் கை வண்ணம் என்னே! என்னே!

அசையா சொத்தாம் தேர்முட்டியை ஆக்கி உவந்தளித்த வள்ளலாரின் பக்தியை சொல்லவும் வேண்டுமோ! உள்ளன்பு கொண்டார் உய்வாரன்றோ! ஊரெல்லாம் கூடி ஒலித்த குரல் ஒரு சித்திரத் தேராக நிற்கின்றது. கொலுக் குலையாது குன்று போல் என்றும் நிற்க வட அல்லை அரசடி விநாயகரை இறைஞ்சி ஆசியும் வாழ்த்தும். வளர்க அவன் அருள்! வாழ்க அவன் தொண்டர்!

திரு.மா கிருஷ்ணகாந்தன் (விஷ்ணுப்ரியா )
தலைவர்
வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய
பரிபாலனசபை



## வாழ்த்துச் செய்தி

ஆலடியான் ஆலயச் சூழல் மட்டுமல்ல
அது சார்ந்த அல்வைக் கிராமமே
இன்று அற்புதக் கோலத்துடன்
ஆன்மீகக் கதிர் பரவி நிற்கின்றது!
இன்று இங்கு தேர் வெள்ளோட்டம்
தேர் ஒன்றும் இங்கு
புதிய வரவு அல்ல
1987 லி இருந்தே இங்கே
தேர் ஓடுகிறது.
ஆனால் சிறிய சகடையில்
ஒரு கட்டுத்தேராக.....
இருபத்து மூன்று ஆண்டுகளில்
அதன் பரிமாணம்!
இன்று ஓர் அழகிய
கலைநயம் மிளிரும் சித்திரத்தேர்
இதன் உருவாக்கத்தில் பாலகணபதியின் பேரருளும்
அவனது அடியவர்களினது நன்றிமறவா
உதவுகரங்களும் இணைந்தமை சிறப்பானதாகும்.
இவ்வுயர் மணித்தேரின் வெள்ளோட்டம்
சிறப்புற நடைபெற நான் சார்ந்த
வதிரிக் கிராமத்து மக்களோடு இணைந்து நின்று
நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்

Dr க.வேலும்மயிலும் J.P
தலைவர்
கொற்றாவத்தை
செட்டிதறை சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை



## வாழ்த்துச் செய்தி

அல்வாய் சாமணந்தறை விநாயகப் பெருமானின் சித்திரத்தேர் வெள்ளோட்டத்தை நினைவுபடுத்துமுகமாக இம்மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். மும்மலங்களையும் இல்லா தொழிக்கும் நிகழ்வினைக் குறிப்பதற்கு உரிய வடிவம் கொடுத்து பவனிவர உதவிய அனைவரையும் பாராட்டுவதுடன் இன்றைய நன்நாள் சிறப்பாக அமையவேண்டுமென எல்லாம்வல்ல விக்ன விநாயகரை வேண்டுவதுடன் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



திரு.வ.மகிபன்
செயலாளர்,
வடமராட்சி அல்வாய் மேற்கு
தேவரையாளி கண்ணகை அம்பாள் தேவஸ்தான
பரிபாலனசபை

## வாழ்த்துச் செய்தி

முற்காலத்தில் மன்னர்களின் சிறப்பினை அளவிடுவதற்கு அவர்களுடைய தேரும் ஓர் அளவு கோலாக இருந்தது போல ஓர் ஊரின் சிறப்பினை அவ்வூரில் அமைந்துள்ள ஆலயங்களில் காணப்படும் தேரினைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்.

இவ்வாறே அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் ஆலயத்திற்கு புதிய சித்திரத்தேர் அமையப்பெறுவது ஆலயத்திற்கு சிறப்பினைத்தருவதுடன் இவவூரில் வாழும் மக்களுக்கெல்லாம் பெருமை தரும் விடயமாகும்.

எனவே இப்புனிதமான தேர் வெள்ளோட்ட நாளில் இங்கு வாழுகின்ற அனைத்து மக்களுக்கும் ஜீவராசிகளுக்கும் எல்லாம் வல்ல எம்பெருமானின் அருட்கடாட்சம் கிடைக்கவும் கிடைத்தற்கரிய இவ் இறைபணியில் இணைந்துள்ள அனைத்து உள்ளங்களையும் மனதார வாழ்த்துகின்றோம்.

திரு.ச.சிவயோகராஜா
தலைவர்
எள்ளங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயம்
அறங்காவலர் சபை



# வாழ்த்துச் செய்தி

ஆலடியில் அமர்ந்து அருள்பாலிக்கும் வேழமுகத்தோனின் சித்திரத்தேர் வெள்ளோட்ட சிறப்பு மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். சாதாரண கட்டுத்தேர் வடிவத்திலிருந்து இரதத்தின் வடிவத்தினை சித்திரத்தேர் அமைப்பிற்கு கொண்டுவருவதற்காக பல லட்சம் ரூபாக்களை திரட்டி நிர்மானிப்பு வேலைகளை சிறப்பாக நிறைவேற்றிய தேர்த் திருவிழா உபயகாரர்கள் பாராட்டப்படவேண்டியவர்கள். இவ்விழா சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல அம்பாளை வேண்டுவதுடன் உளம் நிறைந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"






திரு.வ.சின்னத்தம்பி
தலைவர்
மாறாம்புலம் மாணிக்கப்பிள்ளையார்
ஆலய பரிபாலன சபை

## வாழ்த்துச் செய்தி


அல்வாய் அருள்மிகு சாமணந்தறை பிள்ளையார் சித்திரத்தேரில் பவனிவர இருப்பதையிட்டு நாம் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றோம். ஒருகாலத்தில் ஆண்டவன் தேரில் ஆடி ஆடி வருவதை கை கட்டிநின்று இரசித்தோம். இன்று எம்பெருமானை சித்திரத்தேரில் ஆட்டி ஆட்டி இழுத்த மகிழ்கின்றோம். இது ஆண்டவன் நமக்களித்த வரப்பிரசாதம். பிள்ளையார் எதையும் லேசிலெ கொடுக்கமாட்டார். இது ஆன்றோரின் அருள்வாக்கு. இதனால்தான் எமது சமூகத்தினர் பிள்ளையாரைக் குலதெய்வமாக வழிபட்டு வருகின்றனர். அதனால் முன்னேறியும் வருகின்றன. அல்வாய்க் கிராமத்தில் எமது சமூகத்தினரின் வளர்ச்சிக்கு பிள்ளையாரின் அருள்தான் காரணம். அவரை ஆனந்தப்படுத்தினால் அவர் எம்மை ஆனந்தப்படுத்துவார். ஐங்கரனை ஆனந்தப்படுத்த நீங்கள் சித்திரத்தேர் வடிவமைத்துள்ளீர்கள். வெள்ளோட்டம் வைத்து சிறப்புமலரும் வெளியிடுகிறீர்கள். அதற்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் எமக்கு மட்டில்லா மகிழ்சி விக்கினங்கள் தீர்க்கும் விநாயகன் எங்கள் எல்லோரினதும் விக்கினத்தைத் தீர்ப்பான்.

# கனவு கண்ட நாள் முதலாய்...




















# பரிபாலன சபையினரும்
# தேர் ஆலோசனைக் குழுவினரும்









**கிருஷ்ணபிள்ளை கதிர்காமநாதன்**
**உதவி முகாமையாளர், மக்கள் வங்கி - பருத்தித்துறை.**
**தலைவர், 9ஆம் திருவிழா**
**சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில்.**

# பெருமையெல்லாம் பால கணபதிக்கே!

இன்று, புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் காண்கிறது. எமது மூதாதையரும் ஊரவரும் காட்டிய வழியில் தேர்திருப்பணிவேலைகளைத் தொடங்கிய நாள் முதல், புதிய சித்திரத்தேர் பவனி வரும் இந்நாள் வரை எம் உள்ளத்தில் உறைந்து, எம்மையெல்லாம் ஆற்றுப்படுத்தி எமக்கு அருள் பாலித்துக்கொண்டிருக்கும் எங்கள் ஆலடி வாழ் பலகணபதியின் பெருமையினைச் சொல்லவும் கூடுமோ!

அன்று, எங்களூரைப்பொறுத்தவரை சித்திரச்சிற்பத்தேர் ஒரு கனவே.ஆனாலும், எமக்கு மூத்தோர் எங்கள் ஆலடி வாழ் ஐங்கரன் பவனி வர புதிய சித்திரத்தேர் ஒன்று அவசியம் என்பதைச் சிந்தையில் பதித்தனர். காலஓட்டத்தில் புதிய சித்திரத்தேருக்கான அடித்தளங்களை மெல்லமெல்ல கட்டியெழுப்பிக் கொண்டு வந்தனர். சகடையில் ஐங்கரன் வலம், சகடையில் கட்டுத்தேரில் பாலகணபதியின் பவனி, பஞ்சமுககணபதி உருவத்திருமேனியில் பாலகணபதியின் ஆவாகனம், கட்டுத்தேரில் பஞ்சகணபதி ஆரோகணித்து ஆலய வீதியுலா வரல், புதிய சித்திரத்தேர் வடிவமைக்கப்படல், புதிய சித்திரத்தேருக்கான மண்டப பூர்த்தி, தேர் ஓடும் வீதிக்கான முதற்கட்ட வேலைகள் நிறைவுறல், இன்று புதியதேர் வெள்ளோட்டம், இன்னும் மூன்று நாட்களில் புதிய சித்திரத்தேரில் பஞ்சமுக கணபதியின் அருள் வலம்...

மேனிசிலிர்க்கின்றது! பெருநிதி முதலீடு, பலதரப்பினரின் பாரிய முயற்சி செயல் நடவடிக்கையின் போது இயற்கையின் ஒத்துழைப்பு என எல்லாம் கை கூடிவரத் துணைநின்ற பாலகணபதியின் பாதாரவிந்தங்களில் எம் செயலாவது யாதொன்றுமில்லை என நெஞ்சம் தஞ்சமடைகிறது. என்தந்தை அமரர் க.கிருஹ்ணபிள்ளை பாலகணபதியின் அருள் பெற்றவர்; வேண்டுதல் செய்து தவம் நோற்றவர். அவரின் வேண்டுதலுக்கு இன்னருள் புரிந்த பாலகணபதியைப் பெருமைப்படுத்த விரும்பினார். ஒன்பதாம் திருவிழா உபயகாரர் தமது தானேஸ்வரரின் எண்ணங்களை செவிமடுத்தனர்; ஒத்துழைப்பு நல்கினர். காரியங்கள் எல்லாமே ஒழுங்காய் நிறைவேறி வந்தன. அவர் வழியில் புதிய சித்திரத்தேரை வடிவமைக்க, நானும் என்னோடு சேர்ந்த ஒன்பதாம் திருவிழா உபயகாரரும் பரிபாலனசபை அங்கீகாரத்துடன் முயற்சிகளை முன்னெடுத்தோம். ஒன்பதாம் திருவிழா உபயகாரர், ஊரவர், புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் எமது ஊர் உறவுகள், நண்பர்கள், எனப் பலரும் பங்கேற்றனர். சித்திரசிற்பக் கலைஞர்களும் கட்டடக் கலைஞர்களும் உரிய காலத்தில்

சிறப்பாக வேலைகளைப் பூத்தி செய்தனர். இன்று எண்ணிய யாவும் கைகூடிவரப் பெற்றோம்.

பாலகணபதியின் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் காணும் இந்நாளில் சிறப்பு மலர் ஒன்றை வெளியிட வேண்டும் என்று எண்ணினோம்.கால அவகாசம் போதுமா என்ற வினா எம்முள் எழுந்தது. புதிய சித்திரத்தேருக்கான நாள் மரம் பூட்டி ஒரு வருட காலத்திலேயே புதியசித்திரத்தேரும் தேர் மண்டபமும் கைகூடியமை போல சித்திரத்தேர் வெள்ளோட்ட சிறப்பு மலரும் கைகூடும் என்ற நம்பிக்கையுடன், கலாநிதி த.கலாமணி அவர்களிடம் மலர்ப்பொறுப்பை ஒப்படைத்தோம். இன்று உங்கள் கைககளில் சித்திரத்தேர்ச் சிறப்புமலர்!

மூர்த்தி, தலம், தீர்த்தம்,விருட்சம் என எல்லாமே சிறப்புற்றோங்கும் எமது அல்வாயூர் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில் மேலும் மேலும் வளர்ச்சியுறும், விருத்தியடையும் என்பதில் எவர்க்கும் ஐயமில்லை. எல்லாம் பாலகணபதியின் அருட்கடாட்சமே அன்றி வேறில்லை. எம்முள்ளே தோன்றாத் துணையாய் நின்று, எம் வாழ்வில் அருள்சுரந்து, தமது தலப்பெருமையைப் பேணிக்கொள்ளும் வகையில் காரியங்களை எல்லாம் சித்திபெறச் செய்துவரும் பாலகணபதிக்கன்றி வேறெவர்க்கும் பெருமையுண்டோ! பெருமையெல்லாம் எங்கள் பாலகணபதிக்கே! அவனருள் எம் எல்லோர்க்கும் நிறைவதாக!

நோக்கமொகு தீக்கையென நூலுரைக்கும் பாங்கினிலே
ஆக்கமெலாம் நாமடைய ஆலடியில் -மீக்குயரும்
கோயிலுறைந் தூர் முழுதும் கூர்விழியால் பார்ப்பவனை
வாயினால் நாள்தோறும் வாழ்த்து!

அல்வாயூர் ஆலடியில் அன்றமர்ந்தே அன்பர்க்கு
பல்காலும் அநுக்கிரகம் பாலிக்கும் - நல்யானை
முகத்தானைக் கைகூப்ப முன்வினைகள் யாவும்
சகத்தே தான் சாயுமெனச் சார்



செ.சதானந்தன் J.P
(ஒய்வு பெற்ற அதிபர்)

## கட்டுத்தேரிலிருந்து சித்திரத்தேர் வரை...

இன்று மங்களம் பொங்கும் விகிர்தி வருஷம் சித்திரை மாதம் 11ம் நாள் (24-4-2010) சனிக்கிழமை அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோவிலில் இடம் பெறுகின்ற சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்வானது ஆலடியான் பாலகணபதியின் அருளாட்சியின் பெருமையினை எமக்கு அள்ளி வழங்கும் பேறாகும். பாலகணபதி அருள் வேண்டித் தினமும் துதித்து நிற்கும் அடியவர்கள் ஆண் பெண் வேறுபாடின்றி, சிறியவர் முதியவர் என்ற பேதமின்றி, எல்லோரும் கூடி இந்தக் காட்சியில் மூழ்கி இன்புறுகின்ற இந்த வேளையில், இவ்வாலயத்தில் கடந்த 1987ம் ஆண்டில் இருந்து உற்பவிக்கப்பட்ட அலங்கரிக்கப்பட்ட கட்டுத்தேரானது இன்று அழகிய சித்திரத்தேராக மிளிர்கின்ற இந்தக்கைங்கரியத்தின் கடந்த இருபத்துமூன்று வருடகால ரதோற்சவ நிகழ்வினை மீள்பார்வையில் கணித்துப் பார்ப்பது வரலாறு எனக் கருதுகின்றேன்.

எமது ஆலய நிருவாகப் போக்கில் புதியதொருவிழாப் பங்கீட்டில் நடைபெற்றுக் கொண்டுவந்த திருவிழாவில் தேர்த்திருவிழாவிற்குரிய ஒன்பதாம் நாள் விழாவினை இன்றைய தேர்த்திருவிழா உபயகாரரே பொறுப்பேற்றுக் கொண்டிருந்தனர். இந்தக் காலகட்டத்தில் எமது ஆலய நித்திய நைமித்தியப் பூஜா கிரியைகள் யாவும் ஆகமவிதிகளுக்கமைய இடம்பெற்றுவந்தமை குறிப்பிடக் கூடியதாகும். இந்த நிலையில் தான் ஒன்பதாம் திருவிழா - தேர்த்திருவிழாவின் உபயகாரரின் தலைவரான அமரர் கதிர்காமு கிருஷ்ணபிள்ளை (றைவர்) அவர்களால் தனது மகன் கதிர்காமநாதனின் நேர்த்திக்காக 1986ம் ஆண்டில் உபகரிக்கப்பட்ட சகடை (சகடம்) யில் 1987ம் ஆண்டில் தேவரையாளியைச் சேர்ந்த திரு சின்னத்தம்பி ஆசாரியார் அவர்களின் கைவண்ணத்தில் எம்பெருமானின் ரதோட்டத்திற்குரிய கட்டுத்தேராக அலங்கரிக் கப்பட்டு மிகவும் நேர்த்தியாக உருவகித்து வீதியுலாவாக நடத்தப்பட்டது. இந்நிகழ்வு ஒரு சாதாரணமான ஒன்றல்ல. இதற்குரிய அடுக்கணியங்கள் யாவும் அவர் சார்ந்த விழா உபயகாரர்களால் ஊக்கப்படுத்தப்பட்டதுடன் எமது ஆலய உற்சவகால நிகழ்வு

களுக்கு முத்தாய்ப்பாகவும் விளங்கலாயிற்று. மேலும் ரதோற்சவத்தின் தத்தவத்தினை இந்நிகழ்வானது அடியவர்களுக்கு உணர்த்தி நின்றது. இந்நிகழ்விற்கு இதே விழாவின் உபயகாரரில் ஒருவரும், குடும்பரீதியிலும், உறவு வழியிலும் நெருக்கமான தம்பியாக விளங்கிய அமரர் மாணிக்கம் தங்கவடிவேல் (ஓவசியர்) அவர்கள் மிகவும் காத்திரமானவராக விளங்கியவர் எனலாம். எமது ஆலய விழாக்கள் சார்ந்த நிலையில் பரிபாலனம் சார்ந்த வழியில் எமது ஊர்ப்பாரம்பரியக் குடும்பங்களுடனான தொடர்புகளுக்கு உரியவர்களாவர். இத்தகைய ஒரு குடும்பப் பாரம் பரியத்தில் இணைந்தவர்கள் விழாவின் உபயகாரர்களாயினர். காலப் போக்கில் ரதோற்சவத்திற்கு பஞ்சகிருத்தியங்களுக்குரிய வகையில் எம்பெருமான் பாலகணபதி பஞ்சமுக விநாயகர் எழுந்தருளியாக ரதத்தில் ஆரோகணித்து வீதிவலம் வரவேண்டும் என்ற பெரு நோக்குடன் அமரர் கதிர்காமு கிருஸ்ணபிள்ளையும் அவரது ஏகபுதல்வன் திரு.கி.கதிர்காமநாதன் அவர்களும் பஞ்சமுக விநாயகர் எழுந்தருளியினை உபகரித்துள்ளனர். இதன்நிமிர்த்தம் எமது ஆலய பூஜை கிரியா முறைகள் மேலும் மெருகூட்டப்பட்டன. இது ஒரு சாதாரண நிகழ்வல்ல பஞ்சமுக விநாயக மூர்த்தியைக் கொண்ட விரல்விட்டெண்ணக்கூடிய பேராலயங்களுள் எமது ஆலயமும் கணிப்பு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்

இந்த நிலையில் தான் தேர்த்திருவிழா உபயகாரர்கள் மற்றும் பாலகணபதி அடியவர்கள் யாவரினதும் மன ஆதங்கமாக எழுந்த நினைப்பு எமது ஆலயத்துக்கு மிகவிரைவில் ஒருசித்திரத்தேர் உருவாகவேண்டும் என்பதாகும். இந்த எண்ணம் செயலாக தேர்த்திருவிழா உபயகாரர்கள் முன்நின்று ஊரவர் பொதுப்பணியாக தனிமனித சக்திக்கேற்பவும், புலம் பெயர்நாடுகளில் வாழ்ந்து வரும் எமது அடியவர்கள் அன்பர்கள் எனப்பலமட்டங்களிலிருந்தும் நிதியுதவியினைப் பெற்று இந்த அழகிய சித்திரத்தேர் எம்முன் காட்சியளிக்கின்றது. இதன் சித்திரவடிவமைப்பினை தலைசிறந்த சிற்ப சித்திர செதுக்கல் விற்பன்னர்களில் ஒருவரான திருநெல்வேலி காளிகோயிலடியைச் சேர்ந்த சிற்பாசிரியார் உயர்திரு ஜீவரட்ணம் ஜெயப்பிரகாஸ் குழுவினர் நிறைவேற்றியுள்ளனர். தேரின் இருப்பிடமண்டபம் (தேர்முட்டி ) இலங்கை வங்கியின் பொறியியலாளரான திரு.தாமு பேரின்பநாதன் அவர்களின் மேற்பார்வையில் கட்டிடவல்லுநர் தெல்லிப்பளையைச் சேர்ந்த திரு நன்னியர் கணேசு அவர்களினால் வடிவமைக்கப்பட்டு அமரர்கள் கதிர்காமு கிருக்ஷணபிள்ளை அவர் மனைவி நல்லம்மா நினைவாக திரு கி. கதிர்காமநாதன் குடும்பத்தினரின் அனுசரனையில் பூர்த்தியாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடப்படக் கூடியதாகும் இவைகள் யாவும் எம் பெருமான் பாலகணபதியின் கருணைக்குரிய செயற்பாடாகும். "அவனின்றி அணுவும் அசையாது." அவனருளால் இராஜகோபுரம், தெப்பக்குளம் என அனைத்து அமைப்புக்களும் கைகூட எம்பெருமானை வேண்டி விண்ணப்பித்து நிறைவு செய்து கொள்கின்றேன்.



திருமதி.ஜெயந்தினி சிறிரங்கநேசன்
விரிவுரையாளர், கணிதத்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்.

# விநாயகர்

பரம்பொருள் ஒன்று. தமிழர்களின் செந்நெறியாகிய சித்தாந்தம் அப்பரம்பொருளை சிவம் என்கிறது. அதாவது சிறப்பு என்ற சொல்லில் இருந்து "சி" என்ற எழுத்தையும் வனப்பு என்ற சொல்லில் இருந்து "வ" என்ற எழுத்தையும் எடுத்துக் கூட்டி சிவம் என்ற சிறப்பு நிலையை சைவர்கள் குறிப்பிடுவர். இறைவனுடைய சிறப்பு நிலையென்பது இறைவன் பெயரோ, அடையாளமோ, வடிவமோ தாங்கி வராமல் தன் திருவருளை உள்ளே அடக்கி உண்மை, அறிவு, இன்பமாய் இருக்கின்ற நிலையைக் குறிக்கின்றது. இதனையே மணிவாசகப் பெருமான் "ஓர் உருவம் ஓர் நாமம் என்று ஒன்றும் இல்லார்க்கு" என்று திருவாசகத்தில் குறிப்பிட்டுள்ளார். இப்படி வடிவமோ, அடையாளமோ இல்லாத இறைவன் உயிர்களின் மீது கொண்ட கருணையின் காரணமாக அவை மேல் நிலை அடைவதற்காக அருவம், அருவுருவம், உருவம் என்ற மூன்று நிலைகளில் இறங்கி வருவதாக சைவம் கூறுகின்றது. இப்படி வரும் வடிவம் தாங்கிய உருவ நிலைகளில் தான் நாம் இறைவனை விநாயகர், முருகன், அம்பாள் என்றெல்லாம் அழைக்கின்றோம். அவ்வகையில் விநாயகர் என்கின்ற வடிவத்தை நோக்குவோம்.

அதாவது பரம்பொருளாகிய சிவம் பொது நிலைக்கு வரும்போது தாங்கிய வடிவம் ஓசை வடிவம் அல்லது நாத வடிவம் என்கிறோம். இதனையே பிரணவம் அல்லது "ஓம்" என்கிறோம். "ஓம்" என்ற மந்திரத்தில் "ஆ உ ம்" என்கின்ற எழுத்துக்கள் சிவபரம்பொருளின் அருளால் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்கின்ற கூறுகளை உணர்த்துகின்றன. இவ் "ஓம்" என்கின்ற பிரணவமே உலகத்தோற்றத்திற்கு அடிப்படை என்றும் இப்பிரணவத்தின் மறுவடிவமே விநாயகர் என்றும் கூறுவர். "வி" என்றால் உலகம் "நாயகன்" என்றால் தலைவன், உலகத்திற்கு முதலில் தோன்றிய தலைவன் என்று விநாயகரை சொல்கின்றோம். இவ்வாறு விநாயகர் தோன்றிய விதத்தை பாமர மக்களும் அறிய வேண்டுமென்று கச்சியப்பர் கந்த புராணத்தில் பின்வருமாறு கூறுகிறார். அதாவது ஒரு பூங்காவில் இறைவனும் அவர் திருவருளும் (சக்தி) இருக்க "ஓம்" என்ற பிரணவத்தை இறைவன் தன் திருவருளைச் செலுத்திப் பார்க்க அங்கிருந்து விநாயகர் தோன்றியதாகக் கூறப்படுகிறது. அத்தோடு கஜமுகாசுரன் இறைவனிடம் வரம் பெற்று தேவர்களையும் மனிதர்களையும் துன்புறுத்தவே அவர்கள் பரம்பொருளான அச்சிவத்தின் திருவருளை நாடினர். இச்சூழலிலேதான் அடியார்களுக்கு அருள்புரியவே இறைவன் தம்மிலிருந்து விநாயகரை தோற்றுவித்தான் என்று கூறப்படுகிறது.

இவ்வாறு தோற்றம் பெற்ற விநாயகரின் வடிவம் கஜமுகாசுரனை வெல்லக்கூடியதாக அவன் பெற்ற அருட்சக்திக்கெல்லாம் அப்பாற்பட்டதாக, குறுந்தாட்பூத கால்கள், அசுரர்களின் பானை வயிறு, தேவர்களின் மார்பு, மனிதர்களின் தோள்கள், யானையின் முகம் என்று அமைந்த வடிவாய் தோற்றுவித்தார். இவ்வசுரனை எந்த ஆயுதத்தாலேயும் வெல்ல முடியாது என்பதாலே அவனை விநாயகர் இறுதியில் தம் தந்தத்தால் வென்றதாய் புராணங்கள் கூறுகின்றது. இதனையே திருஞான சம்பந்தர் "தனதடி வழிபடும் அவரிடர் கடி கணபதி வர அருளினன், மிகுகொடை வடிவினர் பயில்வலி வலமுறை இறையே" என்று பாடியுள்ளார்.

ஓசை வடிவமாய் வருகின்ற விநாயகப் பெருமானின் ஆற்றலை, பலத்தை, சக்தியை, அருளை நாம் சித்தி, புத்தி என்கின்றோம். அவை இரண்டும் பெண்களல்ல. நம் தமிழர்களுடைய இறையருளை அம்மா, அம்பாள், சக்தி என்று கண்டு அவற்றிற்கு பெண் வடிவம் கொடுத்தார்கள். அவ்வாறே இறைவனின் திருவருளுக்கு பெண் வடிவங்கள் கிடைத்தன. சித்தி என்பது வெற்றி என்றும் புத்தி என்பது அறிவு என்றும் பொருள்படும். எனவே ஓசை வடிவமாக எமக்கு அருள்பாலிக்க வரும் சிவம் வெற்றியையும் அறிவையும் தம் அருளாற்றல்களாகக் கொண்டு அருள்பாலிக்கின்றது என்று நாம் விநாயகரையும் அவர் சக்திகளையும் காணும் போது விளங்கிக்கொள்ள வேண்டும். மேலும் "ஓம்" என்ற எழுத்து ஒரு யானையின் இடது காதில் தொடங்கி மேல் சென்று வலது காதில் இறங்கி தும்பிக்கையில் சுழித்து முடிவு பெறுவது போன்றும் "உ" என்ற எழுத்தைப் போன்றும் அமைந்திருந்ததாலே யானையின் முகத்தை நம்மவர்கள் விநாயகரோடு ஒப்பிட்டு மகிழ்ந்தனர். ஆனால் அதுவே இன்று நிலைத்து "ஓம்" என்ற அடிப்படைத்தத்துவம் மங்கி நம்மவர் யானையை வழிபடுவது பெருகிவிட்டது. யானையை கடவுளாகக் கருதுவோரும் உண்டு. கரு, முட்டை, விதை, வியர்வை என்ற நால்வகையால் தோன்றும் எந்த ஓர் உயிரினமும் கடவுளாக முடியாது என்பதை சைவம் வலியுறுத்திக் கூறுவதை பலரும் பின்பற்ற தவறுகின்றனர். யானை நம்மைப் போன்று பிறந்து இறக்கும் உயிர் என்பதை மறவாது அதன் முகம் மட்டுமே "ஓம்" என்ற பிரணவத்தை ஞாபகப்படுத்துகிறது என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும். எனவே விநாயகர் என்பது உண்மை, அறிவு, இன்பமாய்த் திகழும் சிவப்பரம் பொருளின் ஓசை வடிவமாகும். இவ்வாறான விநாயகப் பெருமானை 32 வடிவங்களில் வைத்து வழிபடுகின்றனர். அவையாவன

| | |
|---|---|
| பாலகணபதி, | தருணகணபதி, |
| பக்திகணபதி, | வீரகணபதி, |
| சக்திகணபதி, | திவ்யகணபதி, |
| சித்திகணபதி, | உச்சிட்டகணபதி, |
| விக்னகணபதி, | சிற்பரகணபதி, |
| ஏரம்பகணபதி, | லக்ஷ்மிகணபதி, |
| மகாகணபதி, | விஜயகணபதி, |
| நிருத்தியகணபதி, | ஊத்துவகணபதி, |
| ஏகாட்சரகணபதி, | வரதகணபதி, |
| திரியட்சரகணபதி, | |
| சிற்பரபிரசாதகணபதி, | கரித்திரகணபதி, |
| ஏகாந்தகணபதி, | சிருஷ்டிகணபதி, |
| உத்தாண்டகணபதி, | |
| தினமோச்சனகணபதி, | தொந்திகணபதி, |
| திவிமுககணபதி, | திரிமுககணபதி, |
| சிங்ககணபதி, | யோககணபதி, |
| துர்க்காகணபதி, | சங்கடகரகணபதி. |

இவ்வாறான விநாயக வடிவங்கள் அவரின் அருட்தத்துவங்களை மக்களுக்கு எடுத்து இயம்புகின்றன.

எனவே அடியார்களின் விக்கினங்களை தீர்க்கும் விநாயகப் பெருமானை வழிபட்டு நாமும் அவரின் அருளாசிகளைப் பெறுவோமாக.

வலவையை மருவிய புயதர சரணம்
வடிவினி லுயரிய பெரியவ சரணம்
முறைதெரி மறையவ நிறையவ சரணம்
முடியடி தெரிவரு முதியவ சரணம்
சரணம் சரணம் கணபதி சரணம்
சரணம் சரணம் கஜமுக சரணம்.

ப. கணேசலிங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர்
இந்துநாகரிகத்துறை யாழ் பல்கலைக்கழகம்.



# விநாயகர் வழிபாடு

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து"

விநாயகப் பெருமானை முழுமுதற் கடவுளாக வழிபடுகின்ற சமயப் பிரிவினரை காணாபத்திய நெறியினர் என அழைப்பர். சண்மதம் என்ற வட மொழிச் சொற்றொடர் சட்,மதம் என இரு சொற்களாகப் பிரிக்கப்படும். சண்மதங்களாக காணாபத்தியம், சௌரம், சாக்தம், சைவம், வைணவம் கௌமாரம் என்பன விளங்குகின்றன. விநாயகரை காலத்திற்குக் காலம் பல திருநாமங்கள் சுட்டி அழைத்து வழிபட்டு வருவதைக் காணலாம். விநாயகருக்குரிய திருநாமங்களில் கணபதி , விக்கினேஸ்வரர் கணேசன் , பிள்ளையார் , ஆனைமுகன் மூஷிகவாகனர், வகக்ரதுண்டர், லம்போதரர், கஜானனர், ஏகதந்தர், சூர்ப்பகர்ணர், விக்நராசா, ஆகியன முக்கியத்துவம் வாய்ந்தவை.

விநாயகர் வழிபாடு இந்தியா நாட்டிலும் இலங்கையிலும் தென் கிழக்காசிய நாடுகளிலும் அண்மைக் காலங்களாக மேற்குலக நாடுகளிலும் நன்கு பரவி வளர்ச்சியடைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. விநாயகர் வழிபாடானது மிகவும் புராதானமானதாகவும் பிரசித்தி பெற்று விளங்கும் வழிபாட்டு நெறியாகவும் காணப் படுகின்றது.

இந்துக்கள் மட்டுமல்லாது அவைதீக மதத்தவர்களான பௌத்தர்கள், சமணர்கள் ஆகியோரும் நன்கு போற்றி வழிபடுவதைக் காண முடிகின்றது.

"வெள்ளுடை தரித்தவர், யாவிலும் மேலானவர், சந்திரன் போலும் குளிர்மையும் நிறமும் பொருந்தியவர் நான்கு புயங்கள் உள்ளவர் எப்போதும் மலர்ந்த புன்முறுவலுடன் கூடிய திரு முகத்தினர், எல்லாத் தடைகளையும் போக்கியருள்பவர்."

என விநாயகரின் திருவுருவநிலை நன்கு போற்றி விபரிக்கப்படுகின்றது.

யானைமுகக் கணபதியே இந்துக் கடவுள்களுள் பொதுமக்களால் மிகவும் விரும்பப்படுவர். விநாயகரது திருவுருவ சிலையைக் கோயிலில்களிலும் வீடுகளிலும் சந்திகளிலும், ஆற்றோரங்களிலும், குளக்கரைகளிலும், புனிதமான மரங்களுக்கடியிலும், சந்து பொந்துகளிலும், ஆட்புக முடியாத சின்னஞ்சிறு இடங்களிலும் கூடக் காணலாம். மக்கள் எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் விநாயகர் பெயரைச் சொல்லி வழிபாடு

நடத்தியே தொடங்குவார்கள். கடைக் கணக்குகள், இலக்கியத் துணுக்குகள், கடிதங்கள் மற்றும் சரக்கு வாங்க எழுதும் பட்டியலிற் கூட அவர் சின்னமாகிய சுழியைச் சைவர்கள் இடுவார்கள். காரிய சித்தி அடையும்போதெல்லாம் தேங்காய் உடைத்து நன்றி தெரிவிப்பார்கள்.

விநாயக வழிபாட்டினை விபரித்துக் கூறுகின்ற நூல்களாக கணபதி, உபநிடதம், பார்கவபுராணம் (விநாயக புராணம்) கணேச மகாத்மியம், பிரமவைவர்த்த புராணத்தின் கணேச காண்டம் , முட்கலபுராணம், கணேச கீதை, கணேசதந்திரம், கணேச கற்பம் , கணேசாசாரசந்திரிகை என்பன விளங்கு கின்றன.

விநாயகப்பெருமானுக்குரிய திருவுருவவடிவங்கள் பற்றி பல்வேறு நூல்களிலே பல தரப்பட்ட எண்ணிக் கையில் வகைப்படுத்தப்படுகின்றன. பிரமவை வர்த்த புராணம் எட்டு வகை விநாயகர் என்று கூறுகின்றது. பதும புராணம் பன்னிரண்டு வகை திருவுரு வங்களைக் குறிப்பிடுகின்றன. ஆகமம் பதினாறு வகையான வடிவங்களை விளக்கு கின்றது. முத்கல புராணம் முப்பத்திரண்டு வகை விநாயகர் வடிவங்களை குறிப்பிடு கின்றது.

யானை முகமும் பருத்த வயிறும் மோதகம் ஏந்திய திருக்கரமும் கணபதி யின் இன்ப வடிவான பரிபூரணத் தன்மையைக் காட்டுவதாகவும் பூர்ணப் பிரமத்தின் உருவகமே இந்தத் திருக் கோலம் எனவும் காணாபதர் கொள்வர். எலியாகிய ஆன்மாவை ஆணவமடக்கி வாகனமாகக் கொண்டு அண்ட சரா சரங்களையெல்லாம் தமது திருவயிற் றினுள் அடக்கிக் கருணையாகிய மத நீரைப் பொழிந்த வண்ணம் ஞானமாகிய மோதகம் ஏந்திய திருக்கரத்தராய் விநாயகப்பெருமான் விளங்குகின்றார்.

கன்ம மதம் முருகியல் ஞானம் எனவும் கழுத்து மதம் ஆன்மஞானம் எனவும் கயோத மதம் பிரம ஞானம் எனவும் கொள்ளப்படும். கணபதிக்கு துதிக்கை உட்பட ஐந்து திருக்கரங்கள் குறிக்கப்படும் இவ்வைந்து கரங்களும் ஐந்தொழில் களைப் புரிவனவாகும் . பாசம் ஏந்திய கை படைத்தலையும் கொம்பு ஏந்திய கை காத்தலையும் அங்குசம் ஏந்திய கை அழித்தலையும் தும்பிக்கை மறைத் தலையும் மோதகம் ஏந்திய கை அருள லையும் குறிக்கும் என்பர்.

பழங்கால இந்து புராண இலக்கி யத்தில் கணபதியை ஒரு பிரமசாரி தேவனாகக் காணலாம். பிற்கால சமய மரபுகளில் காணாபதர் அவருக்கு வல்லபை நீல சரஸ்வதி , சித்தி , புத்தி ஆகிய நான்கு சக்திகள் உள்ளனர் என வழிபாடாற்றுவர்.

விநாயகரை மக்கள் காலம் காலமாக வழிபடுவதற்கு பிரதானமாக இரண்டு காரணங்களைக் குறிப்பிடலாம். ஒன்று பயம், மற்றது தேவை. பயமானது இயற்கையினாலும் செயற்கையினாலும் ஏற்படக்கூடியவை இத்தகைய பாதிப்புக் களிலிருந்து எம்மையெல்லாம் காக்க வேண்டும் என குறிப்பாக விநாயகப் பெரு மானிடம் வேண்டி வழிபட்டு வருவதைக் காணலாம். அடுத்தது தேவை. மனிதன் இவ்வுலகில் உயிர்வாழ்வதற்கு உணவு, உடை, உறையுள் போன்ற இன்னோரன்ன பொருட்கள் தேவையானவை. இத்தகைய தேவையினை மக்கள் விநாயகரிடம் வேண்டிப் பெற்றார்கள் உதாரணமாக ஔவைப்பாட்டியார் விநாயகரிடம் வேண்டும் பாடல் வருமாறு.

"பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன்
கோலஞ் செய் துங்கக் கரிமுகத்து
தூமணியே நீ எனக்கு சங்கத்தமிழ் மூன்றும் தா"

பொதுவாக இந்துப் பண்பாட்டு மரபிலே பயம் , தேவை என்ற இரண்டு பிரதான நோக்கங்களின் அடிப்படையிலே காலந்தோறும் இந்துக்கள் கடவுளை வழிபட்டு வருவதைக் காணலாம். பல்வேறு

திருவிளையாடல்களைப் புரிந்தவராகவும் , பல்வேறு திருநாமங்களையும் திரு வடிவங்களையும் கொண்டவராகவும் விளங்கும் விநாயகப் பெருமான் தம்மை வழிபடுபவர்களுக்கு சகல நலன்களையும் அளிக்க வல்லவர். குறிப்பிட்ட பொருட் களால் பிள்ளையாரின் உருவத்தை அமைத்து வைத்து வணங்கினால் குறிப்பிட்ட பலன்களை அடையலாம் என விநாயக புராணத்திலிருந்து அறிய முடிகிறது.

களிமண்ணால் செய்த விநாய கரைப் பூசித்தால் நல்ல உயர் பதவிகளைப் பெறலாம். புற்று மண்ணால் செய்த விநாயகரைப் பூஜித்தால் பெரும் லாபத்தை அடையலாம். வெள்ளெருக்கு வேரினால் செய்யப்பட்ட விநாயகரை வணங்கி வந்தால் வினைகள் யாவும் அகலும்; நோய்கள் அகலும். வெல்லத்தால் செய்த விநாயகரைப் பூஜித்தால் சகல சௌபாக்கி யங்களையும் அடையலாம். உப்பினால் செய்த விநாயகரைப் பூஜித்தால் எதிரி களை வெல்லும் ஆற்றல் உண்டாகும். வேப்பமரத்தால், உருவாக்கப்பட்ட விநாயகரைப் பூஜித்தால் எதிரிகளை அழிக்கும் வல்லமை உண்டாகும். விநாயகப் பெருமானை அன்றாடம் வணங்கி வந்தால் வாழ்க்கையில் வல்வினைகள் நீங்கி அல்லல்கள் யாவும் அகன்று நல்லின்பம் நாடிவரும். நலங்க ளெல்லாம் தேடிவரும். சகல சோகங்களும் நீங்கி, துன்பம் நீங்கி, சௌபாக்கியம் நிறைந்த நல்வாழ்வு அமையும் என விளக்கப்படுகின்றன.

விநாயகப் பெருமானை வழிபடும் போது நெற்றியில் குட்டிக்கொள்ளல், தோபிக்கர்ணம் இட்டு வழிபடும் வழக் கமும் உள்ளன. கைகளாற் காதுகளைப் பற்றி மும்முறை இருந்து எழுந்து வணங்குதலே தோபிக்கர்ணமாகும் இதனை நாம் தோப்புக்கரணம் என்போம். கைவிரல்களை மூடி கைகளைக் குறுக் காகக் வைத்து நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்ளுதல் வழிபாட்டின் தொடக் கமாகும். வெற்றிக்கு அறிகுறியாகத் தேங்காயை அவரின் சந்நிதியிலே சிதறடித்துப் பரஞானத்தை வேண்டி அவரை வழிபாடு செய்கின்றோம்.

ஒவ்வொருவரும் அவருக்குரிய தெய்வங்களைக் குறித்து விரதங்களை மேற்கொள்வது மரபு. விரதங்கள் என்பவை மன ஒருமைப்பாட்டுக்கு மட்டுமல்லாமல் உடல் நலத்துக்கும் உதவுவதாக நம் முன்னோர் அதற்குரிய வழிமுறைகளை வகுத்து வைத்துள்ளார்கள். ஒவ்வொரு தெய்வத்துக்கும் ஒவ்வொரு வகையான விரதங்கள் கடைப்பிடிக்கப்பட்டு வரு கின்றன. அந்த வகையில் விநாயகப் பெருமானை வழிபடுவதற்குரிய விரதங் களை வெள்ளிக்கிழமை விரதம் (சுக்கிரவாரம்), விநாயகர் சதுர்த்தி, பிள்ளையார் நோன்பு, விநாயகர் சஷ்டி, சங்கடஹர சதுர்த்தி ஆகியன விளங்குகின்றன.

இந்து மதத்துக்குரிய கடவுளர் பலருள் விநாயகப் பெருமான் மிகவும் சிறப்புடைய ஒருவராவர். விநாயகர் வழிபாடானது இன்று வெளிநாடுகள் எங்கும் பரவி சிறப்புற்று விளங்குவதைக் காணலாம். விநாயகர் வழிபாடு பரவி விளங்கும் நாடுகளாக ஆப்கானிஸ்தான், நேபாளம், கோட்டான், மங்கோலியா, இலங்கை, பர்மா, திபெத்து, தாய்லாந்து, கம்போடியா , சம்பா , ஜாவா, ஜப்பான், யவனம், இத்தாலி, அமெரிக்கா, மெக்ஸிகோ, பெரு மற்றும் மேற்குலக நாடுகள் ஆகியன விளங்குகின்றன. நம்பியாண்டார் நம்பி, ஔவையார் ஆகிய தமிழ்ப் புலவர் பெரு மக்கள் விநாயகரை இட்ட தெய்வமாக வழிபட்டு மேன்மைகளை அடைந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**கலாநிதி மா. வேதநாதன்**
**தலைவர், இந்துநாகரிகத்துறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**



# உலகை வலம் வந்த விநாயகர்

இந்துமதத்திற்குரிய கடவுளருள் மிக்க முதன்மைச்சிறப்புடையவர் விநாயகர் எனலாம். "முன்னவனே யானை முகத்தவனே" என இராமலிங்க அடிகள் குறிப்பிடுவது நோக்குதற்குரியதாகும் அம்மை அப்பனையே அகிலமாகக் கொண்டு அவர்களைச் சுற்றியே மாங்கனி பெற்றதை விநாயகரின் தெய்வீக வரலாற்றுக்கதைகள் குறிப்பிடுகின்றன. தாய் தந்தையரையே தரணியாக கணபதி கண்டபோதும், "உலகை வலம் வந்த விநாயகர்" எனத்தக்க வகையில் விநாயகர் வழிபாடானது உலகளாவிய ரீதியில் காணப்படுகின்றது. உலகளாவிய விநாயகர் வழிபாடு பற்றி சுருக்கமாகக் குறிப்பிடுவதே இக்கட்டுரையின் நோக்க மாகும்.

விநாயகர் இந்து மதத்தில் மட்டுமன்றி, பௌத்தம், சமணம் ஆகிய மதங்களிலும் சிறப்பாகப் போற்றி வழிபடப்படுகின்றார். இவரது வழிபாடு இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் மட்டுமேயன்றி பர்மா, சயாம், சம்பா, கம்போடியா, ஜாவா, பாலி, போர்னியோ, சீனா, ஜப்பான், நேபாளம், திபெத்து, கொரியா முதலிய நாடுகளிலும் சிறப்புற நிகழ்கின்றது. அமெரிக்கா நாட்டிற் பெரு, மெக்சிகோ முதலிய பகுதிகளிலும் விநாயகர் வழிபாடு இருந்தமைக்குரிய சான்றுகள் பல காணப்படுகின்றன.

மேல் பர்மாவில் மாகாயான பௌத்த மதம் நிலவிய இடங்களில் எல்லாம் விநாயகர் வழிபாட்டினைக் காண முடிகின்றது. விநாயகரைப் பௌத்த கோயிலுக்குள் வைத்து "மகாபின்னே" என்ற பெயரால் மேல் பர்மா மக்கள் பூசிக் கின்றனர்.

சயாம் நாட்டில் உள்ள பௌத் தர்கள் மத்தியிலும் விநாயகர் வழிபாடு சிறப்புற்று விளங்குகின்றது. அவர்கள் விநாயகருக்குக் கோவில்களினுள்ளே இருக்க இடம் அளிக்காவிடினும் கோயிற் பிரகாரங்களில் விநாயகரை வைத்து வழிபடுகின்றனர். கி.பி ஒன்பதாம் நூற்றாண்டின் கல்வெட்டொன்று "சந்தனகிரி கணேசர்" என ஒரு கணபதியைக் குறிப்பிடுகின்றது.

சைவ மதம் தழைத்திருந்த சம்பா, கம்போடியா போன்ற இடங்களில் விநாயகர் வழிபாடு உன்னத நிலையிற் காணப்பட்டது. கி.பி நான்காம் நூற்றாண்டி லிருந்து விநாயகரின் திருவுருவங்கள் அகப்படுகின்றன. இந்தோசீனாவில் அகப்படும் கல்வெட்டுக்கள், விநாயகர் பல கடவுளர்களுடன் இருக்கும்போது "கணேசர்" என்றும் லிங்கரூபத்திலுள்ள பரமசிவனுடன் காணப்படும் போது "திருவிநாயகர்" என்றும் குறிப்பிடுகின்றன.

இந்தியாவில் உள்ள "மலைக் கோட்டைக் கணபதி"யைப்போல இங்கும்

விநாயகர் வணக்கம் இருந்திருக்க வேண்டு மெனலாம். ஜாவாத்தீவிற் பழங் காலத்திற் சைவம், வைணவம், பௌத்தம் ஆகிய சமயங்கள் மிகுதியாகப் பரவியிருந்தன. கி.பி 13ம் நூற்றாண்டு முதல் இஸ்லாமிய மதமே பெரிதும் தலையெடுத் தோங்கியது. எனினும் அங்கே விநாயகரின் செல் வாக்குச் சிறிதும் குன்றாமல் நிலவி வருகின்றது.

ஜாவாவிற் கணேசர் விக்னேச் வரராகக் கருதப்பட்டார். ஆறுகளைக் கடக்கும் இடங்கள், செங்குத்தான மலைச்சாரல்கள் போன்ற அபாயகரமான இடங்களில் விநாயகருடைய உருவங்கள் காணப்படுகின்றன. மண்டை ஓடுகளினால் ஆக்கப்பட்ட ஆபரணங்களை விநாய கருக்கு அணிகலன்களாக அணியும் வழக்கத்தை இந்த நாட்டிற்தான் கணலாம்.

பாலித்தீவில் கி.பி 8ஆம் 9ஆம் நூற்றாண்டுகளில் சைவசமயம் பிரபல்யம் பெற்று விளங்கியது. சிவனுடன் துர்க்கை, விநாயகர், நந்தி என்ற மூவரும் கூடிய சிற்பங்களே மிக அதிகமாகப் பாலித்தீவிற் காணப்படுகின்றன. இம்மாதிரிக் காட்டப் படும்போது விநாயகர் லிங்க உருவத் திலேயே அனேகமாகக் காணப்படுவதும் கவனிக்கத்தக்கது. விநாயகர் இங்கு துவாரபாலகராகவும் காணப்படுகின்றார்.

போர்ணியோவில் கி.பி 5ஆம் நூற்றாண்டிற் சைவசமயம் சிறந்து விளங்கியதாகக் கல்வெட்டுக்களிலிருந்து அறிய முடிகின்றது. மடித்த கால்களின் உள்ளங்கால்கள் ஒன்றையொன்று தொடும்படி உட்கார்ந்த நிலையில் இங்குள்ள விநாயகரின் உருவங்கள் காணப்படுகின்றன.

சீனாவில் கி.பி531ஆம் ஆண்டிற் குரிய கல்வெட்டைக்கொண்ட யானைமுகக் கடவுளின் சிற்ப வடிவம் ஒன்று உள்ளது. ஆனால் யப்பானில் ஒன்பதாம் நூற்றாண் டுக்குப்பிறகே தெரிய வந்துள்ளார். இந்த இரண்டு தேசங்களிலும் விநாயகர் இரண்டு கைகளுடன் காணப்படுகின்றார் இரண்டு விநாயகர்கள் நிற்கும் நிலையிற் காணப் படும் போது ஒருவர் மற்றொரு வரைப் பார்ப்பது போலவும் காட்சி தருகின்றார். இம் மாதிரியான இரு வடிவங்கள் சீனா, ஜப்பான் தவிர வேறு எங்குமே கிடையாது. இவ்விடங்களில் விநாயகர் வழிபாடு மந்திர தந்திர முறைகளில் நடைபெறுகின்றன. இதனால் "அவலோகித ஈச்வரபோதி சத்வர்" மாதிரி விநாயகரும் சீனாவிலும் ஜப்பானிலும் எல்லோருக்கும் தெரிய வந்துள்ளார். நாளடைவிற் போதி சத்து வருடன் இவரையும் சேர்த்தனர். சீனாவிலும் ஜப்பானிலும் விநாயகர் இருவகையாக அமைக்கப்படுகின்றார். முதலாவது தனிவடிவமாகவும் இரண்டா வதில் இருவடிவமாகவும் அமைவது குறிப்பிடத்தக்கது. ஜப்பானிய மக்கள் விநாயகரை "Kon Kitten" என வழங்கு கின்றனர்.

நேபாளத்தில் அசோக சக்கர வத்தியின் குமாரி விநாயகருக்கு ஒரு கோயில் எடுப்பித்ததாகக் கூறப்படுகிறது. கி.பி 10ஆம் 11ஆம் நூற்றாண்டுகளில் இங்கு விநாயகர் வழிபாடு பிரபல்யம் பெற்று விளங்கியது. விநாயகர் பௌத்தக் கடவுளாக, நர்த்தன கணபதியாக நேபாளத் திலும், திபேத்திலும் தெரியவந்துள்ளார். சாதாரணமாகப் பன்னிரண்டு கைகளுடன் எலிவாகனத்தின் மீது நடனமாடுவது போல வும் காணப்படுகின்றார். நேபாளத்தில் மகாயான பௌத்தரிடையே விநாயகர் சிங்கத்தில் அமர்ந்தவராக "ஹேரம்ப விநாயக"ராக விளங்குகின்றார். இவை தவிர, ஒருயானைத்தலையுடனும் நான்கு முதல் பதினாறு கைகளுடனும் மூன்று கண்களுடனும் உட்கார்ந்தோ அல்லது நின்றமாதிரியாகவோ விளங்கும் அவரின் உருவங்களும் நேபாளத்திற் காணப் படுகின்றன. நேபாளத்திலும் இந்தோனே சியாவிலும் நான்கு முகங்களை உடைய விநாயகர் திருவுருவங்கள் அதிகம் காணப் படுகின்றன.

ஆப்கானிஸ்தானத்தில் மிகப் பழைமை வாய்ந்த விநாயகர் திருவுரு வங்கள் இரண்டு தொல்பொருள் ஆராய்ச்சி அறிஞர்களாற் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தென்அமெரிக்காவிலும் இந்துப் பண்பாட்டுப் பாரம்பரிங்கள் பரவியதாகக்

கூறப்படுகின்றது. இந்துத் தெய்வங்கள் பல அங்கே வழிபடப்படினும் முக்கியமாக இந்திர - கணேசரின் வழிபாடு சிறப்பிடம் பெறுகின்றது.

மேற்கு திபேத்தில் பல விநாயகர் வடிவங்கள் காணப்படுகின்றன. இவர் துஷ்ட தேவதைகளை அடக்கிக் காப்பாற்று கின்றவராகக் கருதப்பட்டு வீட்டு வாசற் படிக்குமேல் வைக்கப்பட்டுள்ளார்.

விநாயகர் பல இடங்களில் துவார பாலகராக வணங்கப்படுவதனையும் அவதானிக்க முடிகின்றது. வட இந்தியா விலும் சீனாவிலும் துருக்கிஸ்தானிலும் விநாயகர் துவாரபாலகராகக் காட்டப்பட வில்லை. விநாயகர் மகாயான பௌத்தக் கோவில்களுள்ள வட ஆசிய பாகத்தில் மிகவும் வணங்கப்பட்டார்.

பிரிட்டிஸ் பொருட்காட்சிச் சாலை யில் ஐந்து முகங்களுடனும், பத்துக் கரங்களுடனும், "மகாராஜ லீலாசனம்" என்னும் நிலையில் தாமரை மலரை ஏந்திய இடக்கையை உடைய வல்லபை என்னும் சக்தியை தமது இடப்பக்கத் தொடையில் அமரச் செய்து தழுவிக்கொண்டுள்ள ஏரம்ப கணபதியின் திருவுருவம் காணப் படுகின்றது.

விநாயகருக்கு மூக்ஷிகம் என்னும் பெருச்சாளியே வாகனமாகும். ஆயினும், சிங்கமும் அவருக்கு வாகனமாகக் கூறப்பட் டுள்ளது. சிங்கத்தின் மீது அமர்ந்து கொண்டு ஐந்து தலைகளுடன் கூடிய பஞ்சமுக விநாயகர் திருவொற்றியூர்த் தியாகேசுவரர் கோயிலிலும் நாகபட்டினம் காயாசோ கணேசுவரர் கோயிலிலும் எழுந்தருளியுள்ளார். திருவொற்றியூரில் ஐந்து தலைகளும் ஒரே வரிசையில் உள்ளன. நாகப்பட்டினத்தில் நான்கு திசைகளிலும் நான்கு தலைகளும் மேலே ஒரு தலையும் உள்ளது.

விநாயகர் திருவுருவங்களிற் பொதுவாகத் துதிக்கையானது இடப் புறமாகவே இருக்கும். ஆனால் திருவலஞ் சுழி என்னும் தேவாரப் பாடல் பெற்ற தலத்தில் வலப்புறமாகச் சுழித்துள்ள தும்பிக்கையுடன் கூடிய வலம்புரி விநாயகர் திரு வுருவம் காணப்படுகின்றது.

தமிழகத்தில் விநாயகர் வணக்கம் சதுக்கப்பூதத்திலிருந்து தோன்றிய தென் றும், புத்தமத வழிபாட்டினின்று தோன்றிய வேழமுகத்தான் தமிழக உழவர்களின் தெய்வமெனவும், புத்தருக்குக் கட்டப்பட்ட கோவில்களனைத்தும் தமிழகத்தில் விநாயகர் கோயில்களாக மாறினவென்றும் யானைகள் மிகுந்த பண்டைத்தமிழ் நாட்டில் விளங்கிய வழிபாட்டின் அடிப் படையில் விநாயகர் வணக்கம் தோன்றிய தென்றும் தமிழக அறிஞர்கள் குறிப்பிட் டுள்ளனர். தமிழகத்தில் தும்பிக்கை ஆழ்வார் என்ற பெயரில் வைணவத் திருத்தலங்களில் விநாயகர் வழிபடப் படுகின்றார்.

ஜேனஸ் (Janus)என்னும் உரோமக் கடவுளுக்கும் துவிமுக கணபதி வடிவத்திற்கும் நெருங்கிய ஒற்றுமை உண்டு. மேலும், கூத்தாடுகின்ற நர்த்தன கணபதிக்கும், நடனமாடுகின்ற தயோனிசஸ் என்னும் அயோனியக் கடவுளுக்கும் இடையேயும் ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

இலங்கையில் இந்துக்கள் மத்தியில் மட்டுமின்றிப் பௌத்தர்கள் மத்தியிலும் விநாயகர் வழிபாடு நடை பெறுகின்றது. கி.மு இரண்டு தொடக்கம் கி.பி முதலாம் நூற்றாண்டுக்குரியவை எனக் கூறப்படும் விநாயகரின் சிற்பம் பௌத்த வழிபாட்டுத் தலமான மிஹிந் தலையிற் காணப்படுவதனைப் பேராசிரியர் பரணவிதான போன்றவர்கள் குறிப்பிட டுள்ளனர். மேலும், பொலநறு வையிற் கிடைத்த வெண்கல விநாயகர் சிலை, திருகோணமலையிற் கிடைத்த விநாயகர் சிலை ஆகியன இலங்கையில் நிலவிய விநாயகர் வழிபாட்டின் புராதனத்தை அறிய உதவுகின்றன. இலங்கையிற் முறிகண்டிப் பிள்ளையார், கற்பக விநாயகர், முத்து விநாயகர், செல்வ விநாயகர், வீரகத்தி விநாயகர் எனப் பலவேறு பெயர்களில் விநாயகர் வழிபாடு சிறப்பாக நடைபெறு கின்றது.

இவ்வாறு தொகுத்து நோக்குகின்ற போது, உலகை வலம் வந்த விநாயகர் எனக் கூறத்தக்கவகையில் விநாயகர் வழி பாடானது பாரெங்கும் பரந்து விளங்குவது



**பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா**
**வரலாற்றுத்துறை,**
**யாழ்- பல்கலைக்கழகம்.**

# யாழ்ப்பாணக்குடாநாட்டில் கணபதி வழிபாட்டு மரபினூடாக அறியப்படும் அரச பாரம்பரியம், பிராந்தியத்தொடர்புகள் மற்றும் குலமுறைகள்.

## அறிமுகம்:

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தலங்களின் வரலாற்றை அடிப்படையாகக்கொண்டு அரச மரபுகளையும் தொடர்ச்சியான சமூக-பொருண்மிய வளர்ச்சி நிலைகளையும் ஆராயும் மரபு இன்னும் தோற்றம் பெறவில்லை. தலங்கள் நிறைந்த யாழ்ப்பாணத்தில் தலவரலாறுகூட இன்னும் சரியாக ஆராயப்பட்டு, எழுதப்படவில்லை என்பதே கசப்பிற்குரிய உண்மையாகும். ஐதிகங்கள் நிறைந்த யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒவ்வொருதலமும் ஒன்றுக்கு மேற்பட்ட ஐதிகத்தினைக் கொண்டு விளங்குவதன் அடிப்படையிலும், தலபுராணங்களைக் கொண்டு விளங்குவதன் அடிப்படையிலும் ஏதோவொருவகையில் ஒவ்வொரு கோவிலும் ஒவ்வொரு வரலாற்றுக் கருவினையாவது கொண்டிருப்பதனைக் காண்கின்றோம். இப்பின்னணியை அடிப்படையாகக் கொண்டு, குறிப்பாக, விநாயகர் ஆலயங்களை அடிப்படையாகக் கொண்டு அரசமுறை தொடர்பாகவும், பரிணாமமடைந்து வந்த சமூக-பொருண்மியம் தொடர்பாகவும் சில வரலாற்றுத் தகவல்களை எடுத்துக்காட்டுவதாகவே இக்கட்டுரையின் நோக்கம் அமைந்துள்ளது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் ஆலயங்களின் எண்ணிக்கையில் விநாயகர் ஆலயங்களே அம்மன் ஆலயங்களுக்கு அடுத்த நிலையில் அதிக எண்ணிக்கையில் இருப்பதனைக் காண்கின்றோம். ஏறத்தாழ 150 ஆலயங்கள் விநாயகருக்குரியதாகவும் 250 ஆலயங்கள் அம்மனுக்குரியதாகவும் 50 ஆலயங்கள் சிவனுக்குரியதாகவும் 05 ஆலயங்கள் விஷ்ணுவுக்குரியதாகவும் 100 ஆலயங்கள் முருகனுக்குரியதாகவும் காணப்படுவதிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் சமய வாழ்வில் விநாயகர் ஆலயங்கள் பெற்றுக்கொண்டிருக்கின்ற முக்கியத்துவம் நன்கு புலனாகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள சுமார் 150 விநாயகர் ஆலயங்களுள் 37 ஆலயங்கள் வடமராட்சியிலும் 90 ஆலயங்கள் வலிகாமத்திலும் தீவகத்திலும் மிகுதி தென்மராட்சியிலுமாக காணப்படுவது குறிப்பிடத்தக்கது. பின்னிணைப்பிலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில் விநாயகர் ஆலயங்களின் எண்ணிக்கையையும் பரம்பலினையும் தருவதனைக் காணலாம். இந்த ஆலயங்களின் தல வரலாற்றையும் அக்கோயில்களில் உறையும் விநாயகருடைய அற்புதங்கள் தொடர்பாக மக்கள் மத்தியில் நிலவும் ஐதிகங்களை ஆராயும் பொழுது பல சுவையான வரலாற்றுத் தகவல்கள் ஓர் ஒழுங்கில் கிடைப்பதனைக்

காணலாம். வீரகத்தி விநாயகர் என்ற பெயரையுடைய ஆலயங்கள் கம்மாளர் குலமுறைக்குள்ளும் பரராசசேகரன், செகராசசேகரன் என்ற அரச விருதுப் பெயர்களைத் தாங்கிய விநாயகர் ஆலயங்கள் பிராமணிய மற்றும் இந்துசைவ வேளாளர் குலமுறைக் குள்ளும் வயற்கரை, வாய்க்காற்கரை, குளக்கரை, மரத்தடி என்ற முன்ஒட்டுப் பெயர்கள் வரக்கூடிய விநாயகர் ஆலயங்கள் மிகப்புராதனமான விவசாய உற்பத்திக்குரிய பெரும்குடிமக்களுடன் (பெருங்கற்கால பண்பாட்டு மக்களுடன்) இணைந்த குலமுறைக்குள்ளும் தொடர்பு படுத்தப்பட்டவகையில் வளர்ச்சி பெற்று வந்திருந்தமையைக் காண்கின்றோம்.

இவற்றுக்கும் மேலாக வாணிக மரபின் அடிப்படையிலே தோற்றம்பெற்ற விநாயகர் ஆலயங்களும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணப்படுவது குறிப்பிடத் தக்கது. அத்தகைய பல விநாயகர் ஆலயங்கள் வடமராட்சி கிழக்கிலும் ஒரு சில வலிகாமத்திலும் காணப்படுவது குறிப் பிடத்தக்கது. கோண்டாவில் மேற்கிலுள்ள உப்புமடம் விநாயகர் ஆலயம் போர்த்துக் கீசர் காலத்திலிருந்து வாணிக அடிப் படையில் பிரபல்யம் பெற்று வளர்ச்சி யடைந்து வந்திருக்கின்றமைக்கான வரலாற்றுச்சான்றுகள் கிடைத்துள்ளன. இதே போன்று வடமராட்சி கிழக்கில் மண்டலாய்ப்பிள்ளையார் என அழைக்கப் படும் விநாயகர் ஆலயமானது தென் கிழக்காசியாவுடன் கொண்டிருந்த கடல் மார்க்கமாக வந்த வாணிப நடவடிக் கைகளின் நிமித்தம் தோற்றம்பெற்று வளர்ச்சியடைந்ததாகக் கருதப்படுகிறது. இதேபோன்று வரணிக் கண்மையிலுள்ள தில்லையம்பலப் பிள்ளையார் ஆலயமானது நெற் செய்கைப்பண்பாட்டை அடித்தளமாகக் கொண்டு மோதகக் கணபதி மரபாக வளர்ச்சியடைந்த பெருங்கற்காலத்துக்குரிய பண்பாட்டுக் கட்டுமானத்திலிருந்து தோற்றுவிக்கப்பட்ட மிக நீண்ட வரலாற்றுப்பாரம்பரியம் மிக்க ஒரு விநாயகர் ஆலயமாகக் காணப் படுகின்றது. இக்குறிப்பிட்ட விநாயகர் ஆலயத்தின் சமூக, பொருண்மிய வரலாற்று முக்கியத்துவமானது இற்றை வரைக்கும் இழக்கப்படாது தொடர்ச்சியாக பேணப்பட்டுக் கொண்டு வரப்படு வதனையும் காண்கின்றோம்.

### கணபதி மரபும் அரசமரபும்

தென்னாசிய வரலாற்றில் கணபதி என்ற பெயர் முன்னொட்டுச் சொல் லாகவோ அல்லது பின்னொட்டுச் சொல் லாகவோ பயின்று, பயன்படுத்தப்பட்ட முறையில் பல்வேறு அரச வம்சங்களில் ஆட்சி செய்த மன்னர்களது பெயர்கள் சாசனங்களிலும், செப்பேடுகளிலும் நாணயங்களிலும் பொறிக்கப்பட்டுக் கிடைக்கப் பெற்றுள்ளன. குப்தர் காலத்தில் வட இந்தியாவில் ஆரியவர்த்தத் திற்குள் ஆட்சி செய்த நாகர் வம்சத்தில் வந்த ஒன்பது நாக அரசர்களுள் கணபதி நாகன் மிகவும் குறிப்பிடத்தக்க மன்னனாகக் காணப்பட்டான். ஆந்திராவில் காகதிய வம்சத்தில் ஆட்சி செய்த பெரும்பாலான மன்னர்களது பெயர்கள் கணபதி என்ற தொடக்கப்பெயருடன் தொடங்குவதனைக் காணலாம். தென்னிந்திய வரலாற்றில் அகத்தியர் மரபும் கணபதி மரபும் இணைந்த வகையில் காவிரி பற்றிய ஐதிகம் உருவாக்கப்பட்டதனைக் காண் கின்றோம். கங்கையைக் கமண்டலத்தில் அமுக்கி வைத்திருந்த அகத்தியர் தென்னாட்டில் தபசு செய்யும்போது கணபதி (விநாயகர்) காகவடிவில் பறந்து வந்து, கமண்டலத்தினைக கவிழ்த்து, வீழ்த்தி, காவிரியை உருவாக்கிய கதை தென்னகப்பண்பாடு மலர்ந்த வகையைச் சுட்டிக் காட்டுகின்றதெனலாம். தமிழ கத்திலேயுள்ள பிள்ளையார் பட்டி என்ற கிராமம் மிகவும் தொன்மை வாய்ந்த விநாயகர் ஆலயங்களையும் தொல்லியற் கருவூலங்களையும் ஒருங்கே கொண்டிருப் பதனைக்காண்கின்றோம். இலங்கையில் கிடைத்த ஆதிப்பிராமிக் கல்வெட்டுக் களிலும், மத்தியகாலத்திற்குரிய சோழவம் சத்தினரின் மெய்க்கீர்த்திச் சாசனங்

களிலும் கணபதியுடன் இணைந்த வகையிலான பல செய்திகள் பொறிக்கப்பட்டுக் கிடைத்துள்ளன.சங்ககால இலக்கியங்களால் அறியப்படும் ஔவையின் சில பாடல்கள் கணபதியை அரச மரபுகளுடன் இணைத்துத் தருவதனைக்காண்கின்றோம். குறிப்பாக தமிழக நாகர் வம்சத்தினருக்கும் கணபதிக்குமிடையே நெருங்கிய தொடர்புகள் இருந்தமைக்கான சான்றுகளும் கிடைத்தவண்ணமுள்ளன. ஈழமுடிநாகராயர், ஈழநாகராயர், ஈழராயர் (எ(ல்)லாராயர்) கணபதி ராயர் போன்ற பெயர்கள் அரசுருவாக்கத்துடனும் நெல் உற்பத்தியுடனும் தமிழ் மொழி இலக்கிய வளத்துடனும் தொடர்புபடுத்தப் பட்டிருப்பதனைக்காண்கின்றோம். நாகநாட்டு இளவரசி பீலிவளை மரபு யாழ்ப்பாணக் குடா நாட்டில் கணபதி வழிபாட்டு மரபின் பின்னணியில் இராச மரபுகள் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்த முறையைக் காட்டும் ஐதிகத்திற்கோர் எடுத்துக் காட்டெனலாம்.

பேர்க்வுன் என்ற அறிஞர் உலகத்தின் விருத்தி மழைவீழ்ச்சி ஆகியவற்றின் பிரதிபலிப்புக்களாக யக்ஷ நாக வழிபாடு நிலவியதென்பர்.[1] இங்கு யக்ஷ வழிபாடானது கணபதி (ANIMISM) வழிபாட்டு மரபாகவும், நாகர் மரபானது (Royalty) அரசமுறையாகவும் பரிணாமம் பெற்ற முறையைக் காணமுடிகின்றது.

Parker எனும் பேரறிஞர் இப்பாம்பு வணக்கத்தில் ஈடுபட்ட தென்னிந்திய கேரளப்பகுதி நாகருக்கும் ஈழத்து நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் நாகருக்கும் இடையேயுள்ள ஒற்றுமையை இனங்கண்டு இந்த நாக வணக்கம் அங்கிருந்து இங்கு வந்து புகுந்திருக்கும் என்றும் கூறுவர்[2].

## இலங்கை வரலாற்றைத் தொடக்கியவர்கள் நாகர் இன மக்கள்

சிங்கள மக்களின் வரலாற்றைக் கூறும் "மகாவம்சம்" எனும் பாளி மொழிநூல் கி.மு 483 கி.பி.362 வரையான காலத்தை உள்ளடக்கியதாக இலங்கை வரலாற்றைக் கூறுகின்றது. பாளி மொழியிலுள்ள தீபவம்சமும் இதே காலப்பகுதிக்குரியதாகும்.திவ்வியாவதம் எனும் வடமொழிநூலில் தாமிரத்து வீபத்தில் விஜய என்னும் வணிக இளைஞன் யக்சணிகளை அடக்கி தன்னாட்சிக்கு உட்படுத்தியதாக குறிப்பிடுவதனைக் காணலாம். விஜயன் குவேனி கதை சிங்களவர் வருகையைப் பற்றியே குறிப்பிட்டிருக்கலாம் என்று பு.ளு. மெண்டிஸ் ஆதிகால இலங்கை வரலாற்றில் கூறியுள்ளார்.

இலங்கைக்கு விஜயன் வரமுன்னர் இயக்கரும் நாகரும் வாழ்ந்தனர் என்பது மகாவம்சக்கதை. இவர்களைப் பேய்கள் என்றும், பிசாசுகள் என்றும் பரணவிதான உட்பட சில வடமொழிநூல்களும் கூறுகின்றன. ஆனால் அவர்கள் மனிதர்களே என சிரான் தெரணியாகல தொல்லியல் அடிப்படையில் உறுதிப்படுத்தியுள்ளார். இராம - இராவண யுத்தத்தின் பின்னர் இந்தியத் துணைக்கண்ட மக்கள் இலங்கை வர அஞ்சினர். இவ்வச்சத்தினைப்போக்கு முகமாகவே கஜமுகன் மரபு இலங்கைத் தீவில் பௌத்த - இந்து மதங்களுக்கான ஒரு பொதுமையான புதிய வாழ்வு முறையைத் தோற்றம் பெறச் செய்தது எனக் கொள்ளப்படுவதனையும் காண்கின்றோம். தமிழகத்தில் காணபத்திய மரபு தொடங்குவதற்கு முன்பே இலங்கையில் கணபதி வழிபாட்டு மரபு நன்கு வேரூன்றி விட்டிருந்தது. யாவாத்தீவிலிருந்து வந்த நாகர் மரபும் இலங்கைத்தீவின் கணபதி வழிபாட்டு மரபும் இங்கு புதியதொரு பண்பாட்டு உருவாக்கத்திற்கு அடிப்படையை இட்டுக் கொடுத்திருந்ததெனலாம்.

இயக்கர்கள் மரங்களையும், நீர்ப்பரப்பினையும், கணங்களையும் வழிபட்டனர். நாகர்கள் நாகத்தை வழிபட்டனர். இயக்கர்கள் தம் உடல் வலிமையினால் குளம், கால்வாய் வெட்டுவது போன்ற தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் நாகர்களோ கலைகளில் வல்லுனர்களாகவும், வாய் ஓட்டுவது, நகரங்களை அமைப்பதிலும் வல்லவர்களாக விளங்கினர். தென் பகுதிகளில் வாழ்ந்த இயக்கர்களும், நாகர்களும் பின்வந்த (மலாய - கலிங்க) தென்னிந்திய இயக்கர்களுடன் கலப்புற்று இருக்கலாம். அவர்கள் சிங்கள இனம் பெருக வாய்ப்பாகவும் அமைந்திருக் கக்கூடும். ஆனால் வடக்கே இருந்த இயக்கர்கள், நாகர்கள் தொடர்ந்து பாரம் பரியமாக வாழ்ந்து வாழ்ந்தவர்களே ஆவர். அவர்களே இன்று வரை அங்கு ஆதித் தமிழர்களாக வாழ்ந்து வருகிறார்கள் என்ற கருத்தில் இருவேறு கருத்து எங்குமே இருக்க முடியாது.மோதகக்கணபதியின் மரபினை வளர்த்தெடுத்து வருபவர்களும் அவர்களே.

## நாகர் இனமக்கள் வளர்த்தெடுத்த கணபதி வழிபாட்டு மரபுகள்

வரலாற்று உதயகாலம் விசயனின் இலங்கை வரவுடன் (நூல் நூற்றலுடன்) ஆரம்பிக்கின்றது. மகாவம்சத்தில் நாகதீப என்பது தமிழ் நூல்கள் கூறும் நாக நாடாகும். நாகதீப அரசர்களது சண்டையை அடக்க புத்தபிரான் இரண் டாவது தடவையாக நாகதீபம் வந்ததாக மகாவம்சம் கூறுகிறது. கந்தரோடை யிலிருந்து அகழ்வின்போது மீட்டெடுக் கப்பட்ட மூன்று சுடுமண் விநாயகர் சிற்பங்கள் இக்கட்டத்தில் எமக்கு மிக முக்கியமான சான்றாக உள்ளன. நூல் நூற்றல் தொழிற்தேர்ச்சியில் ஈடுபட்டிருந்த பெருங்கற்கால சமூக பொருண்மியத் திற்குள் உருவான மிகைஉற்பத்தியே நாகதீப அரசர்களது அரசுரிமைப் போட்டிக்கான அடிப்படைக்காரணமாக அமைந்தது. அச்சமூகத்தினுடைய வாணிபத்தெய்வமாகவே கணபதி தொழிற்பட்டிருந்தார் என்பது இங்கு வெளிப்படையான ஓர் அம்சமாகும்.

செழிப்புத்தெய்வக்கோட்பாட்டில் விநாயகரும் நாகரும் ( FERTILITY CULT and serpant & Ganapati worship)

நாகர்கோயிற் பகுதியில் ஆதி நாகர் இராச்சியமும், அவர்களது குடியிருப்புக்களும் இருந்தமைக்கான ஆதாரங்களை ருசுப்படுத்துமாப்போல இக்கிராமத்தில் காணப்படும் நாக எனும் பதத்தினை உள்வாங்கிய பல பண்புகள் மக்கள் வாழ்வில் இன்றுவரை நின்று நிலைத்துள்ளன. அப்பண்புகள் முழுவதும் பெருங்கற்கால ஜீவனோபாய வாணிப நுட்பங்களைக் கொண்டிருப்பதனைக் காணலாம்.

"தென்னாசியாவில் பல்லாயிரம் ஆண்டுகளாய் பல வகைப்பட்ட இனங்கள் மத்தியில் வழங்கி வந்த பல வழிபாட்டு முறைகளும், தத்துவங்களும் காலப் போக்கில் இணைந்து இன்று இந்து மதம் என்னும் பொதுப்பெயர் பெற்றது ஆனால் தென்னிந்தியாவில் தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய இடங்களிற் காணப்படும் பெருங்கற்காலப் பண்பாட்டில் இந்து மதத்திற்குரிய புராதனச் சான்றுகள் காணப்படுவதினால் தென்னிந் தியச் செல்வாக்கால் இலங்கையிலும் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் இந்து மதக் கருத்துக்கள் தோன்றின எனக் கூறலாம். நீலகண்ட சாஸ்திரி இலங் கைக்குச் சைவமதத்தின் அறிமுகம் தமிழ் நாட்டின் பின்னணியில் தோன்றியது என்பதில் சந்தேகம் இல்லையெனக் கூறியிருப்பது பொருத்தமானதாகத் தெரிகிறது" என ப.புஸ்பரத்தினம் மேற்கோளுடன் குறிப்பிட்டிருப்பது எமது இந்த ஆய்வில் முக்கிய கருப் பொருளாகின்றாது. ஏனெனில் சைவ சமயம் என்பதற்கான பொருளும், தத்துவமும் வரலாற்று மானிடவியல் நோக்கில் பிராமணீயக்கிரியைகள் சார்ந்ததாக இல்லாமல் பயிர் வேளாண்

முதல் கலை நடவடிக்கைகள் இப்பிர தேசங்களிலிருந்தே தொடங்கியிருந்தி ருக்க வேண்டும்.குறுணிக் கற்கால பண்பாட்டுத் தளத்திற்குரிய மனித வாழ்க்கை முறைகளும் அவ்வாழ்க்கை முறையின் பயனாக ஏற்படுத்தப்பட்ட குகை ஓவியங்களும் பெருமளவிற்கு மலை நாட்டின் கிழக்குப் பக்கமாகவும் இலங்கையின் வடகீழ் பிராந்தியத்தினூ டாகவும் இருந்தும் அடையாளம் கண்டு கொள்ளப்பட்ட வகையில் இற்றைக்கு 30,000 வருடங்களுக்கு முன்னரிலிருந்தே தென்கிழக்காசிய நாடுகளுள் குறிப்பாக யாவா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து ஆகிய பிரதேசங்களிலிருந்து பெறப்பட்ட பண் பாட்டுச் செல்வாக்குகளை இலங்கை உள் வாங்கியிருந்தமையைக் காண் கின்றோம்.

வளர்ச்சியடைந்த நிறுவன ரீதியிலான கலையாக்கங்களின் வளர்ச்சியின் ஆரம்பத்தினை இரண்டாம் கட்டமாக இலங்கையில் பெருங்கற் காலச்சமூகத்தினரின் நடவடிக் கைகளூ டாகவே காணமுடிகின்றது. அக்கால நிறுவன வடிவங்களுள் செயற்கையாக அமைக்கப்பட்ட குளங்கள், ஒழுங்கு படுத்தப்பட்டு சமப்படுத்தப்பட்ட - நீர்ப்பா சனக்கால்வாய்களுடன் இணைக் கப்பட்ட வயற்பரப்பு, மற்றும் இடுகாடு ஆகியனவே பிரதான நிறுவன வடிவங்களாகத் தொழிற் பட்டிருந்தன. இவையே கலையாக்க முயற்சிகளின் பிரதான உந்து சக்திகளாகவும் பெருங்கற்கால மக்களின் சமூக, பொருளியல் நிறுவனங் களாகவும் தொழிற்பட்டிருந்தன. தீபகற்ப இந்தி யாவிற்கும் இலங்கைத்தீவிற்கு மிடையே சமாந்தரமான கலை வளர்ச்சியின் அலகு களை அடையாளம் காணும் முயற்சியில் தொல்லியலாளர்கள் வரலாற்று உதய காலமான இப்பெருங் கற்காலப் பரப்பினையே எடுத்துக்காட்டுவர். கி.மு.1000 ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 300ஆம் ஆண்டுகள் வரைக்கும் இச்சமத்துவமான கலையாக்க நடவடிக் கைகள் தென்னிந்திய-இலங்கைப் பிரதேசங்களில் நிகழ்ந்றேன. சிறப்பாக ஈமச்சின்னங்களை உருவாக்குவதில் இக் காலக்கற்சிற்பிகள் நிறுவன ரீயாகத் தொழிற்பட்டிருந்தமையினை ஈமச் சின் னங்கள் உறுதிப்படுத்துகின்றன. செயற்கையாக அமைக்கப்பட்ட குளங் களுடன் இணைக்கப்பட்ட வகையிலான கோயில்களையும் மக்கள் ஒன்றுகூடும் மையங்ளையும் பிரதான சந்தைகளையும் முதற்துறைமுகங்களையும் உருவாக்கித் தந்த பெருங்கற்காலப் பண்பாட்டுச் சிற்பிகளே இலங்கையில் முதலாவது இந்துக்கோவிலையும் முதலாவது பௌத்த ஸ்தூபிகளையும் உருவாக்கிக் கொடுத் திருந்தனர். எஸ். பரணவிதான உட்பட சேனக்க பண்டாரநாயக்க, கா.இந்திரபால, சி.க.சிற்றம்பலம், ப.புஸ்பரட்ணம் முதலானோர் அக்கருத்தில் மிகுந்த உடன்பாடு டையவர்களாகக்காணப்படுகின்றார்கள் (இந்திரபாலா, கா.: 2006).

இலங்கைத்தீவினைப்பொறுத்தம ட்டில் அதன் உலர்வலயப்பரப்பில் கி.மு.800ஆம் ஆண்டுக்காலத்திலிருந்தே பெருங்கற்கால விவசாயப்பெருங்குடி மக்களின் இரும்புக்கருவிகளின் உபயோகம், குயவசக்கரத்தின் பயன்பாடு, சூளையிடும் முறை, மட்பாண்டங்கள் மீதான வரைபுகள், வண்ண ஓவியங்கள் தீட்டும்முறை, மதத்தோடுதொடர்பான குறியீடுகளை வரையும் முறை, குறிப்பாக சுவஸ்திகா, நந்திபாதம், முச்சூலக் குறியீடுகள், நாற்சூலக்குறியீடுகள், வேல் வடிவம், ஆள் குறியீடு, கப்பற்குறியீடு, லக்ஷ்மி நாணயங்களை வெளியிடும் முறை போன்றவற்றை தொல்லியல் ரீதியாக காணமுடிகின்றுது. இவ்வடிப்படைகளே இலங்கைத்தீவின் கலை வளர்ச்சிக்குரிய ஆதிமக்களின் அடிப்படைகளாக அமைந்துகொண்டன (சித்திரலேகா, மௌ., 1985).

**முடிவுரை**

இலங்கையின் வடபகுதியிலும், யாழ்ப்பாணக்குடாநாட்டிலும் இம்மக்கள் பின்பற்றிவந்திருந்த இறந்தோருக்கான ஈமக்கிரியை மற்றும் ஈமப்புதையல் முறைகளில் வெண்கலமும், வெள்ளிரும்பும் நன்கு பயன்படுத்தப் பட்டிருந்தன. ஆனைக்கோட்டையில் பெருங்கற்கால ஈமப்படையல்களின் அகழ்வின்போது கிடைத்த வெள்ளிரும்பினாலான அகல் விளக்கு திட்டவட்டமான ஒரு கலைப்படைப்பாக உள்ளது (ரகுபதி, 1987, ப.120.) . பூநகரியில் இருந்து கண்டு பிடிக்கப்பெற்ற வெண்கலத்தாலான வேலும் மயிலும் பெருங்கற்கால வடஇலங்கையின் கலைவரலாற்றிற்குக் கிடைத்த சிறந்த சான்றாகும்( புஸ்பரட்ணம், ப., 2002.. பக். 133). கந்தரோடையிலிருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்ட இரும்பினாலான நீண்ட வேல், பொன் முலாம் பூசப்பெற்ற சுடுமண்ணாலான மயிற்தலை, வெண்கலத்தாலான இரு சிறிய கணேசர் படிமங்கள் ஆகியன பெருங்கற்காலக் கலைப்படைப்புக்களாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு தொடங்கப பெற்ற இலங்கையின் கலை வரலாறானது கி.பி.13ஆம் நூற்றாண்டு வரைக்கும் குளக்கட்டு நீர்ப்பாசனவியல் வளர்ச்சியின் செழிப்பில் விநாயகரைத் தலைமைத்து வமாகக்கொண்டு முகிழ்த்த வாணிபப் பொருளாதார ஈட்டத்தில், ரோமானிய வணிகரின் அரவணைப்பில், ஈழத்து இந்து மக்களின் ஆத்மீக வெளிப்பாடாக விநாயகர் ஆலயங்களும், விநாயகர் உலோகப்படிமக்கலை மரபும் இங்கு பரிணாமமடைந்தது. உண்மையிலே இங்கு கிடைத்த பௌத்தப்படிமங்க ளினுடைய எண்ணிக்கையை விட இந்து மதத்தோடு தொடர்பான படிமங்களின் எண்ணிக்கையே அதிகமானதாகும் என்பதனை நாம் மனங்கொள்ள வேண்டும்.இந்த இரண்டு பிரிவுக் குள்ளுமிருந்தே கிடைத்த அதிக எண் ணிக்கையிலான விநாயகர் படிமங்கள் ஊடாக இன்று எமக்கு கிடைக்கும் ஆத்மீக பலமும், கலைத்துவமும் இன்று எமது வாழ்வின் ஆதார சுருதிகளாகவும் அமைகின்றனவென்றால் அது மிகை யில்லை. யாழ்ப்பாண இராச்சியதின் பலமாகவும், உயிர்ப்பாகவும், ஆட்சிக்குரிய பரம்பரையை யாழ்ப்பாணத்தில் இற்றைவரைக்கும் நினைவுபடுத்தக் கொண்டிருக்கும் வகையிலே பரராசசேகரப்பிள்ளையார், அரச கேசரிப்பிள்ளையார், கருணாகரப் பிள்ளையார் போன்ற ஆலயங்கள் எம்மை என்றும் வாழவைத்துக்கொண்டிருக்கும்.

**பின்னிணைப்பு**

யாழ்ப்பாணக்குடாநாட்டில் விநாயகர் ஆலயங்களின் எண்ணிக்கையும் பரம்பலும். (பிரதேச ரீதியாக)

**வடமராட்சி**

1.புலோலி- புற்றளை சித்திவிநாயகர்
2.புலோலி- ஆத்தியடிப்பிள்ளையார்
3.அல்வாய்-சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார்
4.அல்வாய்-புதுக்குளம் கரைப்பிள்ளையார்
5.கரவெட்டி-யாக்கரு விநாயகர்
6.கரவெட்டி- நுணுவிற்பிள்ளையார்
7.கரவெட்டி- கல்லுவம் சித்திவிநாயகர்
8.கரவெட்டி- தச்சன்தோப்பு விநாயகர்
9.கரவெட்டி- கிராய் பிள்ளையார்
10.துன்னாலை- வடக்கு வல்லியானந்தப் பிள்ளையார்
11.துன்னாலை-கோயிற்கடவைப் பிள்ளையார்
12.துன்னாலை-கிளான் பிள்ளையார்
13.வதிரி- தட்டுக்களரி விநாயகர்
14.வதிரி- மடத்துவாசல் பிள்ளையார்
15.வதிரி- பூவற்கரைப்பிள்ளையார்
16.கரணவாய்-வெற்றிக்காட்டுப் பிள்ளையார்
17.கரணவாய்- துர்க்கைப்புலம்பிள்ளையார்
18. கரணவாய்- மூத்தநயினார் (மூத்த விநாயகர்)

19. அம்பன்-வரசித்தி விநாயகர்
20.வரணி- கும்பிட்டான்புலம் கற்பகப் பிள்ளையார்
21.பெரியம்பன் கற்பகப்பிள்ளையார்
22.முள்ளியான் மண்டலாய் பிள்ளையார்
23. வல்வெட்டித்துறை- வீரகத்தி வேவிற் பிள்ளையார்
24. வல்வெட்டித்துறை- நெடியகாட்டுப் பிள்ளையார்
25. புற்றளை- சித்திவிநாயகர்
26. மாதனைப் பிள்ளையார்
27. வியாபாரிமூலை- சித்திவிநாயகர்
28. திக்கம்- துளாவைப் பிள்ளையார்
29. பருத்தித்துறை- தெணிப்பிள்ளையார்
30. பருத்தித்துறை- சித்தி விநாயகர்
31. இன்பர் சிட்டி கற்பூரவிநாயகர்
32. தும்பளை-மேற்கு பெரிய வளவுப் பிள்ளையார்
33. அச்சுவேலி- பத்தமேனிப்பிள்ளையார்
34. மாயக்கைப்பிள்ளையார்
35. குமிழடிப்பிள்ளையார்
36. உடுத்துறை- அஞ்சாம்பனைப் பிள்ளையார்

தென்மராட்சி

1.அல்லாரை-அறுகம்புலம் மகாகணபதிப்பிள்ளையார்
2.கைதடி வீரகத்திப்பிள்ளையார்
3.சரசாலை- நுணுவில் சிதம்பரவிநாயகர்
4.கச்சாய்- புங்கடி விக்கினேஷ்வரர்
5.மிருசுவில்- மெய்யான்கேணி தவசிக்குளம் விநாயகர்
6.மிருசுவில- குருக்கள் மாவடிப்பிள்ளையார்
7.சாவகச்சேரி- சப்பச்சிமாவடிப் பிள்ளையார்
8.கெற்பலி- சந்திரசேகரப்பிள்ளையார்
9.பளை- கச்சாய் வெளிப்பிள்ளையார்
10.பளை- முள்ளியான் விக்கினேசுவரர்
11.நாவற்குளி- சித்திவிநாயகர்
12.கல்வயல் வேதவனப்பிள்ளையார்
13.கல்வயல் ஆயிலடிப்பிள்ளையார்
14.மட்டுவில் கல்வம் வீரகத்தி விநாயகர்
15.மறவன்புலோ- சிதம்பரசித்தி விநாயகர்
16.சாவகச்சேரி-இலுவம் செல்வ விநாயகர்
17.நாவற்குழி- காதவாய்க்கால் விநாயகர்
18.இயக்கச்சி- சொற்றாண்டார் வள்ளிவல வரத விநாயகர்
1.இணுவில் - மேற்கு செகராசசேகரப் பிள்ளையார்
2.இணுவில் - மஞ்சத்தடிப்பிள்ளையார்
3.இணுவில் பரராசசேகரப்பிள்ளையார்
4.நீர்வேலி அரசசேகரப்பிள்ளையார்
5.நீர்வேலி வாய்க்காற்றரவைப் பிள்ளையார்
6.திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர்
7.திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார்
8.திருநெல்வேலி சிவஞானப் பிள்ளையார்
9.யாழ் - வண்ணை கொண்டலடி விநாயகர்
10.யாழ் - அத்தியடி நடராஜ வீரகத்தி விநாயகர்
11.யாழ். வில்லூன்றி வீரகத்தி விநாயகர்
12.கொக்குவில் - பொற்பதி விநாயகர்
13.கொக்குவில் - மேற்கு சொர்ணவடலி சித்திவிநாயகர்
14.வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி (பன்றிக்கோட்டுப் பிள்ளையார்)
15.வண்ணை காட்டுத்துறைப் பிள்ளையார்
16.வண்ணை மேற்கு விசுவேசப்

பிள்ளையார்
17.தாவடி அம்பலவாணவேத விநாயகர்
18.தாவடிப்பிள்ளையார்
19.மானிப்பாய் - மருதடி விநாயகர்
20.மானிப்பாய் - மேற்கு அரசடிப் பிள்ளையார்
21.உரும்பிராய் - ஓடையம்பதி கற்பக விநாயகர்
22.உரும்பிராய் - கருணாகரப் பிள்ளையார்
23.அரியாலை சித்திவிநாயகர்
24.இருபாலை கோப்பாய் கற்பகப்பிள்ளையார்
25.இளவாலை ஆனைவிழுந்தான் விநாயகர்
26.பன்னாலை வரத்தலம் கற்பகப்பிள்ளையார்
27.புன்னாலைக்கட்டுவன் -ஆயக்கடவை சித்திவிநாயகர்
28.ஏழாலை மயிலங்காடு முருகபுரம் கருணாகரப்பிள்ளையார்
29.அரியாலை கோப்பர்குளம் பிள்ளையார்
30.சங்குவேலி ஸ்ரீசிவஞானப் பிள்ளையார்
31.சங்குவேலி வெட்டுக்கட்டை ஸ்ரீ சித்திவிநாயகர்
32.அச்சுவேலி தெற்கு உலவிற்குளம் பிள்ளையார்
33.அச்சுவேலிப்பிள்ளையார்
34.அராலி மேற்கு லோலை சிட்டிப்பிள்ளையார்
35.அராலி மேற்கு நொச்சியம்பதி மகாகணபதிப்பிள்ளையார்
36.அராலி கரைப்பிட்டி விநாயகர்
37.உடுவில் - ஸ்ரீ சிவஞானப்பிள்ளையார்
38.உடுவில் - கிழக்கு கற்பகப்பிள்ளையார்
39.கோண்டாவில் - ஆசிமடம் அரசடி விநாயகர்
40.கோண்டாவில் - ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர்
41.கோண்டாவில் - மேற்கு ஸ்ரீ மகாகணபதிப்பிள்ளையார்
42.கோண்டாவில் நெட்டிலிப்பாய்ப் பிள்ளையார்
43.கல்வியங்காடு ஆட்டுப்பட்டி அரசடி சிந்தாமணி விநாயகர்
44.அல்லைப்பிட்டி சிந்தாமணி விநாயகர்
45.புத்தூர் - வாதாரவத்தை கேதுவூப்பிள்ளையார்
46.நல்லூர் - கைலாச பிள்ளையார்
47.நல்லூர் - தெற்கு கற்பக விநாயகர்
48.நல்லூர் - மருதவளவு பண்டாரக்குளம் பிள்ளையார்
49.நல்லூர் - மூத்த விநாயகர்
50.நல்லூர் - சந்திரசேகரப்பிள்ளையார்
51.புங்குடுதீவு மேற்கு இருப்பிட்டி மூத்தநயினார் புலம் வீரகத்தி விநாயகர்
52.தொல்புரம் - மடத்துப்பிள்ளையார்
53.சுழிபுரம் - பறாளை விநாயகர்
54.சிறுப்பிட்டி செல்லப்பிள்ளையார்
55.மயிலிட்டி மயிலுவக்கட்டைப் பிள்ளையார்
56.மயிலிட்டி கரையூர் மருதடி வீரகத்தி விநாயகர்
57.சிறுப்பிட்டி செல்லப்பிள்ளையார்
58.அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார்
59.தையிட்டி கணையவிற்பிள்ளையார்
60.சேவலம்பிட்டி பிள்ளையார்
61.ஆனைக்கோட்டை - மூத்தநயினார் கோவில்
62.ஆனைக்கோட்டை உயரப்புலம் உத்துங்க விநாயகர்
63.நவாலி சிந்தாமணிப்பிள்ளையார்

64.மருதடி மாணிக்கப்பிள்ளையார்
65.உடுவில் முத்துவிநாயகர்
66.கெற்பெலி சந்திரசேகரப்பிள்ளையார்
67.கோப்பாய் - கற்பகப்பிள்ளையார்
68.கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார்
69.ஆனைக்கோட்டை - மூத்தநயினார்
70..குப்பிழான் பிள்ளையார்
71.சித்தன்கேணி மகாகணபதிப் பிள்ளையார்
72.காரைநகர் - பத்தர்கேணி விநாயகர்
73.காரைநகர் - துறைமுகம் சித்திவிநாயகர்
74.கந்தரோடை அருளானந்தப் பிள்ளைார்
75.கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர்
76.ஊரெழுப்பிள்ளைார்
77.விளைவேலி மருதடிப்பிள்ளையார்
78.உடுவில் - சிவஞானப்பிள்ளையார்
79.நாயன்மார்கட்டு அரசடி விநாயகர்
80.நெடுந்தீவு நடுக்குறிச்சிப் பிள்ளையார்
81.அல்வாய் - மாலிசந்தைப் பிள்ளையார்
82.மல்லாகம் - பழம் பிள்ளையார்
83.சண்டிலிப்பாய் - கல்வளை விநாயகர்
84.கட்டுவன் - துறட்டையிட்டி சித்திவிநாயகர்
85.சுண்டிக்குழி எழும்பிள்ளையார்
86.மண்கும்பான் - வீரகத்தி விநாயகர்
87.தெல்லிப்பளை குருக்கள் கிணற்றடிப்பிள்ளையார்
88.சங்கானை மகாதேவாப்பிள்ளையார்
89.கோட்டைவாயில் வெயிலுகந்தப் பிள்ளையார் (வாயில் உவந்த பிள்ளையார்)

திரு.ம.பாலகைலாசநாதசர்மா
சமஸ்கிருத விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.



# தேர் அமைப்பின் சிறப்பும் தேர்த்திருவிழாவின் மகிமையும்

## அறிமுகம் :

இறைவனின் உறைவிடம் கோவில் எனப்படுகின்றது. கோ- என்பதற்கு அரசன் என்ற பொருள் உண்டு. இல் - என்பதற்கு வீடு என்ற பொருள்படும். கோவில் என்பது இறைவன் அல்லது அரசன் வசிக்கும் புனிதத்தன்மை நிறைந்த இடமாகும். அரசனைத் தெய்வமாகப் போற்றும் பாரம்பரியம் நெடுங்காலமாக இந்துப்பண்பாட்டில் நிலவி வருகின்றது. கோவில் என்ற சொற்பிரயோகம் மூல நூல்கள் கூறுவதைப் போன்று வேறுபாடின்றி நெருங்கி ஒற்றுமைப்பட்டு இறைவனும் அல்லது அரசனும் உறையும் இடம் என்பதைச்சுட்டி நிற்பதைத் தெளிவாகக் காணலாம். எனவே இறைவன் அல்லது அரசன் உறையும் இடமான கோவில்களில் பயன்படும் ஓர் ஊர்தியாக அதாவது வாகனமாக ஆரம்ப காலத்தில் தேர் இடம் பெற்றது.

## ராஜோபசாரமாகத் தேர்த்திருவிழா

கோவில்களில் எழுந்தருளியிருக்கும் உற்சவ இறைமூர்த்தங்கள் வீதியில் உலாவரும் போது பெரும் ஊர்திகளாகவும், ராஜோபசாரங்களாகவும் தேர்பவனி அமைகின்றது. கோவில்களிலே நிகழும் மிகவும் முக்கியமான உயர்விழாவாக இத்தேர்த்திருவிழா அமைவதோடு கோவில்களிலே எழுந்தருளி இருக்கும் கோவாகிய இறைவனுக்கு செய்யப்படும் சிறப்பு மிக்க ராஜோபசார விழாவாகவும் தேர்த்திருவிழா விளங்குகின்றது. அரசனின் பவனியில் நெற்பொரி, மலர்தூவுதல், குதிரை ரதகஜயபதாதி, அணிவகுப்புக்கள், யானை, ஒட்டகம் முதலியன முன்னே செல்ல, அரசனின் வருகை சிறப்புடன் அமைவது போன்று, இறைவனையும் தேர்பவனியின் போது பலவகையான மலர்மாலைகளினாலும், தங்க வைர கிரீடங்களால் அணி செய்யப்பட்டும், பலவகையான அணிகலன்களினால் அலங்கரிக்கப்பட்டும், பரிவார தேவதைகளுடன் தேர்பவனி வருகின்ற போது அழகு நிறைந்த காட்சியாகவே தேர்த்திருவிழா கோவில்களிலே காணப்படுகின்றது.

அரசனே கண்கண்ட தெய்வம். தெய்வம் அரசனென போற்றற்குரியது என்று அரசனுக்கும், தெய்வத்திற்கும் உயர்ச்சி கற்பித்த அடிப்படைநிலையில் கோயில் வழிபாட்டு முறையில்

ராஜோபசாரங்களை கோவில்களிலே இடம்பெறச்செய்தது.

## தேர் அமைப்புமுறை

தேர் அமைப்பிலும் மரபுசார்ந்த வழிகளை வகுத்து வரையறை செய்யப் பட்டிருக்கின்றது. தேர் இவ்வாறு தான் அமைக்கப்பட வேண்டும் என்பதை சிவாகமங்களும், பத்ததிகளும், சிற்ப சாஸ்திர நூல்களும் எடுத்துக்கூறுகின்றன. ஆகமங்கள், மானசாரம், மயமதம், விஜயதந்திரம் ஆகியவற்றில் ரதலக் ஷணங்கள் பற்றி ஒவ்வொரு அத்தியாயம் காணப்படுகின்றது. ஸ்ரீதத்துவநீதி எனும் நூலில் தேரில் இடம்பெறவேண்டிய விக்கிரகங்கள் பற்றிய குறிப்புகளும் உள்ளன.

காலப்போக்கிலே தேரானது சமயத்துடன் மிக நெருங்கிய இன்றி யமையாத தொடர்புள்ளதாக விளங்கி, உலகத்தினையும் ஆக்கி அருள்வழங்கும் இறைவன் இறைவியின் ஊர்தியாகவே விளங்கத் தொடங்கியது. தேரமைப்பு வடிவங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. தேரில் இடம்பெற்றுள்ள சிற்பங்கள் குறிப்பிட்ட இறைவன் இறைவி பற்றிய புராணக்கதைகள், கோவில் வரலாறு பற்றிய கதைகள், தெய்வங்களின் திருவுருவங்கள் முதலியனவற்றைக் காட்சிப்படுத்துவன. இதனால் தேர்களிலே மிகவும் நேர்த்தியான கலைவடிவங்கள் இடம் பெற்றன. குறிப்பாக சைவ, வைஷ்ணவ சமய தத்துவ கருத்துக்கள் பிரதிபலித்தன. தேர் மிகவும் நேர்த்தியான கலைக்களஞ்சியமாகவும் திகழத் தொடங்கியது.

## கோவில் கருவறை போன்ற அமைப்பு

தேரசைந்து பவனிவரும் அமைப்பைக்கொண்டு கோவில் கருவறை என்றே சொல்லலாம். கருவறை போன்று விமானம், தூபி முதலிய அம்சங்களைத் தாங்கி எழில் மிகுந்து விளங்குவது கவனிக்கற்பாலது. இன்னும் சற்று ஆழ்ந்து நோக்கும் போது கோவில் கூட தேரின் அமைப்பை ஏற்று இருபாகங்களிலும் பெரும் சில்லுகள் பொருந்தியதாக குதிரைகளால் இழுக்கப்படும் நிலையில் சித்திரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம் கோவில் விமானங்களில் இறைவனின் வீரச்செயல்களையும், சமய சார்பான கோலங்களையும், சித்திரங்களையும் இடம்பெறச் செய்திருப்பது போன்று தேரின் அடித்தளம் அதாவது சில்லில் இருந்து பீடம் வரையுள்ள பகுதிகளை மூன்று தளங்களாகவோ, ஐந்து தளங்களாகவோ வசதிக்கேற்ப பிரித்து ஒவ்வொரு தளத்திலும் இறைவன் திருவருட் கோலங்களையும், பெருமைகளையும், வீரச்செயல்களையும் அழகுற சித்திரிக் கப்பட்டிருப்பதைக் காண்கின்றோம்.

## தேர்- ரதம் பற்றிய சொல்விளக்கம்

தேர்ச்சில்லிலிருந்து இறைவனை வீற்றிருக்கச் செய்யும் பீடம் வரை மரத்தினால் சிற்ப நுட்பங்கள் பொலியும் வண்ணம் செய்வது மரபு. அதன் மேற்பகுதி சிகரம் வரை ஆண்டு தோறும் விழாவின் போது தடி, கம்பு, சீலை முதலியவற்றால் பல கலைநுட்பங்கள் வாய்ந்த பொருட்களால் தேர் கட்டி தேர்திரு விழாவின் போது பவனி வருவதை தேர் என்று அழைக்கின்றோம். இந்த அமைப்பே இந்தியாவில் பிரசித்தமான ஆலயங் களிலே தேர் கட்டப்பட்டு தேர்த் திருவிழாவின் போது இழுக்கப் படுகின்றது.

ஆனால் மேல் வேலையையும் வருடாவருடம் கட்டியமைக்காது, நிரந்தர மாகச் சிற்ப நுட்பங்களுடன் செய்யும் வழக்கத்தை இலங்கையிலுள்ள கோயில் களிலே பெரும்பாலும் காணலாம். இவ்வகை ஊர்தியை "ரதம்" என்ற சிறப்புப் பெயரினால் அழைக்கின்றோம். இம்மரபை யொட்டியே தற்போதைய காலங்களில் வெள்ளிரதம், தங்கரதம் போன்றனவும் ஊர்திகளாக வலம் வருகின்றன. தற்போது வெள்ளோட்டம் காணும் அல்வாய் சாமணந்தறை ஆலடி விநாயகர் ஆலய

தேரும் ரதம் என்ற சிறப்புப்பெயரைப் பெறுகின்றது.

**ரதமும் மனிதர்களுடைய அவயவங்களும்**

ரதத்தின் பாகங்கள் மனிதர்களுடைய உருவ அங்கங்களாக பாவிக்கப்படு கின்றன. அவை பின்வருமாறு அமையும்.

தேரின் சக்கரங்கள் - பாதங்கள்
கீழ் உத்தரம் - முழங்கால்
கீழ்த்தளம் - தொடைகள்
இரண்டாவது தளம் - இடுப்பு
மூன்றாவது தளம் - நாபி (தொப்புள்)
நான்காவது தளம் - வயிறு
ஐந்தாவது தளம் வைக்கும் பீடம் - இதயம்
ஸ்தபங்கள் (தூண்கள்) -கைகள்
தூண்களின் கொடுங்குகள் (கூம்புகள்)-காதுகள்
தேரின் மேல்பாகம் - முகம்
தேரின் மேலுள்ள கலசம் - மகுடம்
தேரில் சாத்தப்படும் வஸ்திரங்கள் - சிகை

**ரதத்தில் பிரதிஷ்டை செய்யும் தேவதைகள்**

ரதத்தின் சக்கரங்களில் சூரிய சந்திரர்களையும், பதாகங்களில் ஸதருத திரர்களையும், இதயப் பகுதியில் சுற்றிவர ஹரன், வஜ்ரன் ஏகாங்கன், த்லிதண்டகன், ஐந்தாவது தளத்தின் நான்கு திக்குகளிலும் பிரம்மா, விஷ்ணு, தட்சணாமூர்த்தி, ஸ்கந்தர் போன்றவர்களையும், ரதத்தைச் சுற்றி லோகபாலகர்களையும், கயிற்றில் பாம்புகளையும், குடையில் பாசுபதாஸ் தரத்தையும் ஆவாஹனம் செய்யப்பட்டு ரதப்பிரதிஷ்டை செய்யப்படுகின்றது. இவ்வாறு ரதத்தில் ஆவாஹிக்கப்பட்ட தேவதைகள் தேர் உற்சவத்தின்போது புனிதப்படுத்தப்பட்டு இறைஊர்திகள் ஆக்கப்படுகின்ற தேரில் எழுந்தருளப் படுகின்றார்கள். தேரினை அழகிய பட்டுக்களினால் அலங்கரித்து, வாழை, பாக்கு, கரும்பு முதலிய மரங்களையும் கட்டி, மாவிலை தோரணங்களால் அலங் காரம் செய்து, நான்கு குதிரைகளையும், பிரம்மாவைச் சாரதியாகவும் பாவித்து தேர் பவனியின் தரிசனம் முக்கியப்படுகின்றது.

**தேர் உற்சவத்தின் பலாபலன்கள்**

ஊர் கூடித் தேர் இழுத்தல் எனும் சிறப்பைப்பெறும் தேர் உற்சவத்தை காணு கின்றவர்களுக்கு இறைவனின் அருளி னால் உலக மக்களுக்கு நன்மையும், இகபர முக்தியும், மனச்சாந்தியும், உள்ளங்களிலிருந்தும் அழுக்குகளைப் போக்கி (மலங்களை) ஆன்மீக ஒளி ஏற்றியும் பேரானந்தப் பெருவாழ்வும் செல்வச்செழிப்பும், ராஜநீதியும், லக்ஷ்மி கடாக்ஷமும் கிடைக்கப்பெறுகின்றன. ஆலயம், சூழல், கிராமம், நகரம், உலகம் எனும் நிலைகளில் வாழும் மக்கள் அனைவரும் இன்புற்றிருக்க ஆலய தேர் உற்சவம் மிகவும் அவசியமாகின்றது.



சைவ சித்தாந்தர் பண்டிதர், சிவாகம உபதேச வாசஸ்பதி
சிவஸ்ரீ . தியாக. சோமாஸ்கந்தராஜக் குருக்கள் **M.A**
அதிபர், யா/குடத்தனை கரையூர் அ.மி.த.க. பாடசாலை,

# இந்துப்பண்பாட்டில் தேரின் விளக்கம்

**தேரின் தத்துவ விளக்கம்**

இரதமாகிய தேர் அண்ட பிண்டம் இரண்டையும் விளங்கச் செய்வது.

அதாவது :-

1.அச்சு - மந்திரமலை
2.சக்கரம் - சூரிய சந்திரன்
3.தட்டுக்கள் - பதினன் குலகங்கள்
4.ஆசனம் - ஆகாயம்
5.கொடிஞ்சி- உதய அஸ்தமன மலைகள்
6.கொடிகள் - புண்ணிய நதிகள்
7.சட்டங்கள் - யாகங்கள்
8.திரைச்சேலை - ஏழு சமுத்திரங்கள்
9.மணிகள் - வேதாகம தர்ம நூல்கள்
10.படிகள் - மகாமேரு

அத்துடன் வடம் நமது ஊன உடல் எனக் கருதப்படும்.

நமது பண்பாட்டில் தேர்பெறும் பங்கை ஆராயப் புகுந்தால் அது ஒரு தனி நூலாக விரிந்து விடும். இருப்பினும் ஒரு சில கருத்துக்களை மட்டும் இங்கே பார்ப்போம்.

சக்கரத்தை உருவாக்கிப் பயன் படுத்தக் கற்றுக் கொண்டதை மனிதன் முதன்முதலாக. நிகழ்த்திய விஞ்ஞான சாதனைகளுள் ஒன்றாகப் போற்றுவார்கள். காலால் நடந்தவன் கட்டை வண்டிப் பயணம் செய்யத் தொடங்கிய நாளை வளர்ச்சித் திருநாளாக வரவேற்பார்கள் சக்கரம் கண்டு பிடிக்கப் பட்ட பின் வண்டிகள், சப்பரங்கள், தேர்கள் என வாகன வசதி வகைவகையாக வளர்ந்தது. இந்த வளர்ச்சிப் படியில் மனித அறிவின் நுட்பமும் கலை நுகர்ச்சியும் ஒருங்கே திகழுமாறு தோன்றிய தேர் தான் அவனை வெற்றிப்படியில் ஏற்றியது

கிறிஸ்து பிறப்பதற்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வழக்கிலிருந்ததாகக் கருதப்படும் ரிக்வேதத்தில் கடையாணி முதலான தேர்ப்பகுதிகள் இடப்பெற்றுள்ளன. கடோகநிஷத்தில் தேர், தேர்ப்பாகன் , குதிரை என்பவை மனிதனின் உடல் புலன்களோடு ஒப்பிட்டு பேசப்பட்டுள்ளன. பௌத்த சமயத்தவரான பாகியன் எனும் சீனப்பயணி 05ஆம் நூற்றாண்டில் இந்திய நாட்டிற்கு வருகை புரிந்தார். இவர் தாம் கண்ட பௌத்த சமயத்தேரோட்டம் ஒன்றைப் பற்றி தமது நூலில் எழுதியுள்ளதாக ஆராச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். மானசாரம் என்ற சிற்ப நூலின் ஒரு பகுதியாகத் தேரிலக்கணமும் விரிவாக பேசப்பட்டுள்ளதாக அறிகிறோம்.

தேரும் தேரோட்டமும் பல்லாண்டு காலமாக நமது வாழ்வில் பங்கு பெற்று

வருபவை. வட்டத்தேர், சதுரத்தேர் என்ற பல வகையான மரத்தேர்களைக் கண்டதோடு நில்லாது நுண்கலைக்கு இருப்பிடமான தேர் வடிவைக் கல்லிலும் நமது முன்னோர்கள் செதுக்கியிருக்கிறார்கள். மாமல்லபுரம், தாராசுரம், திருவாரூர், கும்பகோணம், விருதாசலம் போன்ற தமிழ் நாட்டு நகரங்களிலும், ஹம்பி, கொனாராக் முதலான வடநாட்டு நகரங்களிலும் கண்ணுக்கும், கலை உணர்வுக்கும் விருந்து வைக்கும் தேர்ச்சிற்ப்பங்களை, தேர்வடிவ மண்ட பங்களை நாம் இன்று காணலாம்.

ஆத்மானம் ரதினம் வித்தி
ஸரீரம் தரமேவ து!
புத்திந்து ஸாரதிம் வித்தி
மன ப்ரீக்ரஹமேவ ச!!
இந்த்ரியாணி ஹயானாஹீர்
விஷயாம்ஸ்தேஷீ கோசரான்!
ஆத்மேந்த்ரிய
மனோயுக்தம்
போக்தேத் - யாஹீர் மநீஷிண
கடோபநிஷத்து 3:3:-4

நெடுதல் யானையும் தேரும் மாவும்
படையமை மறவரும் உடையம் யாம்.
(புறம் 72)

பண்டைக்கால படையமைப்பில் தேர்ப்படை வலிமைவாய்ந்த படையாகக் கருதப்பட்டிருககிறது. யூனை மீதும் குதிரை மீதும் சென்று போர் பரிவதை விட தேரேறிச் சென்று போர் புரிவது தான் அரச இலக்கணமாகப் போற்றப்பட்டிருக்கிறது. . ஆனால் தேரில் இருந்து போர் செய்வது எல்லாராலும் முடியாது. இதில் வல்லுநர் களாக வாழ்ந்தவர்களை அதிரதர்கள் , மகாரதர்கள் என்றெல்லாம் பட்டம் வழங்கி மகாபாரதம் பாராட்டுகின்றது.

வெள்ளுளைக் கலிமான் கவி குளம்பு
உளகத்
தேர்வழங்கினைநின் தெவ்வர் தோத்து.
(புறம் 15)

என முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்டிய மன்னன் பகைவர் நாட்டில் தேர்ப்படை நடத்திய திறத்தை நெட்டிமையார் என்னும் புறநானுற்றுப் புலவர் புகழ்ந்து பாடுகிறார். நெடுந்தேர்க் கொடுஞ்சி பொலியப் பாண்டியன் நெடுஞ் செழியன் தேர் மீது நின்ற திருக்கோலத்தை நெகிழ்ந்து பாடுவார் இடைக்குன்றூர் கிழார்.

இராமபிரான் தந்தையின் இயற் பெயர் என்னவென்றே நமக்குத் தெரியாது. பத்துத் திசைகளிலும் தேர் செலுத்தும் திறமை பெற்றிருந்த அவருக்குத் “தசரதன்” என்ற சிறப்புப் பெயர் தோன்றியது. தசரதன் என்ற சிறப்புப் பெயர் தான் இன்றளவும் நின்று நிலவுகிறது.

இராமனும் இராவணனும் தேரேறிய சிறப்பை விரிவாகப் பாடவிரும்பி “இராமன் தேரேறு படலம்” “இராவணன் தேரேறு படலம்” என்று தனித்தனிப் படலங்களையே கம்பர் வகுத்துக் கொள்கிறார்.

மகாபாரத யுத்தத்தில் ஆயிரக் கணக்கான தேர்கள் அணி வகுத்து நின்ற அற்புக் காட்சியையும், அவை ஒன்றுக் கொன்று நிகழ்த்திக் கொண்ட கொடுமை யான புதக் காட்சியையும் அவை ஒன்றுக் கொன்று நிகழ்த்திக் கொண்ட கொடுமை யான போரையும் நெஞ்சைப் பிணிக்கும் விதத்தில் வியாசரும் வில்லியும் நிகழ்த்தியி ருக்கிறார்கள்.

கண்ணபெருமான், சல்லியன் போன்ற மகாபாரத வீரர்கள் போர்க் களத் தில் தேர் செலுத்தும் திறமைக்காகப் பெரிதும் சிறப்பிக்கப்பட்டிருக்கிறார்கள் திரிபுரதகனம் செய்ய எழுந்த சிவபெரு மானும் தேரைத்தான் ஊர்தியாகக் கொண்டார்.

தேரை மையமாக வைத்து நடைபெறும் போர்கள் நிகழ்ச்சிகளைப் பாடுவதற்காக பலதிணை துறைகளைப் புறப்பொருள் வெண்பாமாலை நிரல் படக்கூறியுள்ளது.

தேர் ஒரு படைக்கலாமாக விளங் கியதோடு மிகச்சிறந்த வாகனமாகவும்

பயன்பட்டிருக்கிறது.

தேரோட்டுவதில் நளமகராசன் திறமை சாலி இவன் திறமையைப் புகழேந்திப் புலவர் மிக அழகாக விளக்குகிறார். அயோத்தி மன்னன் இருது பன்னனுக்குச் சாரதியாகி அவன் தேரை நளன் செலுத்துகிறான். தேர் போகும் வேகத்தில் அயோத்தி மன்னன் இருது பன்னனின் மேலாடை நழுவி விழுகின்றது. "மேலாடை வீழ்ந்தது. தேரை நிறுத்தி அதனை உடனே எடு" என்று சொல்ல வந்தானாம் அயோத்தி மன்னன் .ஆனால் தேர் அதற்குள் நாலாறு காதம் கடந்து விட்டதாம்!

மேலாடை வீழ்ந்தது எடு என்றான்அவ்வளவில்
நாலாறு காதம் நடந்ததே - தோலாமை
மேல்கொண்டான் ஏறிவர
வெம்மைக் கலிச்சூதின்
மால்கொண்டான் கோல் கொண்ட மா.

(நளவெண்பா)

நாலாறு காதம் என்பது இன்றைய கணக்குப்படி 240 கற்கள் ஆகும் ஒரு சில வினாடிகளில் 240 கல் தொலைவு போய் விட்டதென்பது நிச்சயம் உயர்வு நவிற்சி தான். இருப்பினும், 'நளன் மிக வேகமாகத் தேரோட்டினான் - விரைந்து செல்ல உதவும் வாகனமாகத் தேரே பயன்படுத்தப்பட்டது' என்பதை கவிஞர் சொல்லியிருக்கும் முறை எண்ண எண்ண இனிப்பதாகின்றது.

நைடத ஆசிரியர், புகழேந்திப் புலவருக்குப் பிறகு தோன்றியவர், புகழேந்தி "மேலாடை வீழ்ந்தது.எடு என்றதற்குள்" நளன் செலுத்திய தேர் நாலாறு காதம் கடந்ததாகத்தான் பாடினார். நைடத ஆசிரியரோ பத்துயோசனை தூரம் பயணமாகி விட்டதாகப் பாடுகிறார். ஒரு யோசனை நூறுகல் தொலைவு என்பர் பத்து யோசனை என்றால் அது ஆயிரம் கல் தூரமாகின்றது. நளன் செலுத்திய தேர் இருபதாம் நூற்றாண்டு "ஜெட்" விமானங்களையும் மிஞ்சி விடுகின்றது.

முத்த வெண்குடை வேந்தர்கோன்
முழவுஉறழ் தடந்தோள்
உத்த ரீயம்அந் நெறியிடை
வீழ்தலும் உணர்ந்து
தத்து வாம்பரி நிறுவி, அத்
துகில்தருக என்ன-
பத்து யோசனை கடந்தது
தேர் எனப் பகர்ந்தான்!(நைடதம்)

"கடுந்தேர்க் குழித்த ஞெள்ளல்" என்ற புறநானூற்று வரியிலிருந்து தேர்போகும் வேகத்தில் தெருக்கள் குழிபட்டுப் போன அருமையை உணருகின்றோம். தேர் செல்லும் அதிர்ச்சியில் கிளம்பிய தெருப்புழுதி மாடமாளிகைகளைப் புழுதிமயமாக ஆக்கி விடுவதாகப் பட்டினப்பாலை குறைபட்டுக் கொள்ளுகின்றது.

"சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்தொழுகி
ஏறுபொரச் சேறாகித்
தேரோடத் துகள்கெழுமி
நீறாடிய களிறு போல
வேறுபட்ட வினைஒவத்து
வேண்கோயில் மாசூட்டும்"

ஓரளவுவசதி படைத்திருந்த குடி மக்கள் கூடத்தேரையே தங்கள் வாகனமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இக்கால இன்னி யங்கிகள், மிதிவண்டிகள் போல அக்காலத்தில் தேர்கள் எங்கும் இழைந்திருக்கின்றன. என்பதை பின்வரும் மேற்கோட் பகுதிகளால் அறியலாம்.

தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத்தேரன்!
தண் துறை ஊரன் தேர்எம்
முன்கடை நிற்க எனவேட் டேமே!
யானும் தோழியும் ஆயமும் ஆடும் துறை
நண்ணித்
தானம் தேரும் பாகனும் வந்தென்
நலனுண்டான்."

மனிதர்கள் மட்டுமா? கடவுள்கள் கூட வெவ்வேறு வகையான தேர்களையே ஊர்தியாகக் கொண்டிருக்கிறார்கள். சூரியபகவான் ஒற்றைச் சக்கரத் தேரில் தானே உலகை வலம் வருகின்றான்! மன்மதன் தென்றல் என்னும் தேரில் ஏறித்தானே தன் திருவிளையாடல்களை நடத்துகின்றான்.

அரசர்கள் செல்வச் செழிப்பைக் காட்டும் அளவு கோல்களுள் ஒன்றாகவும்

தேர் விளங்கியிருக்கின்றது. தேரையே ஒரு செல்வமாக மதித்திருக்கிறார்கள். பாரி வள்ளல் முல்லைக்கொடிக்கு மட்டும் தேரை வழங்கவில்லை. தன்னை பாடிவந்த புலவர் பெருமக்களுக்கும் தேரையே பரிசுப் பொருளாக வழங்கியிருக்கின்றான்.

'வாரகம் பொழுகு முன்றில்
தேர்வீ சிருக்கை நேடியோன் குன்றே..

அரசர்கள் திறைப்பொருளாக தேரைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். சூதில் பணயப் பொருளாக வைத்தும். விளையாடியிருக்கிறார்கள்.

'சேயிழை மடவாரும் - பரிக்
கொண்டு கொடுத்தவர் சிறு
தொகையோ?
பொற்றடம் தேரொன்று வாலிகன்
கொண்டு கொடுத்ததும் - அதில்
போற்கொடி சேதியர் கோமகன்
வந்து தொடுத்ததும்,

நன்றி ழைத்த தேர்கள் - போரின்
நடையுணர்ந்த பாகர்
என்றி வற்றை எல்லாம் தருமன்
ஈடு வைத்தி ழந்தான்.'

'குருகுல விஜயன் கொடித் தேர்ப்பீடத்தில் இருந்து கண்ணன் பகவத் கீதையை உபதேசித்தான். கண்ணனைத் தேரோட்டியாகப் பாவிப்பதற்கு ஸ்ரீமத் சித்பவானந்த சுவாமிகள், "ரதத்தின் மீது அர்ஜுனன் ஏறியிருந்தான் அந்த ரதம் உடலுகுச் சமானம். அவன் ஜீவாத்மா ஆகிறான். ரதமும் இயங்கியது. பார்த்தனும் போர் புரிந்தான். இயங்கியதைப் பற்றிய உணர்ச்சி ரதத்துக்கு இல்லை. சண்டை செய்வதைப் பற்றிய உணர்ச்சி அர்ஜுன னுக்கு இருந்தது. நிகழ்ந்தது தன் செயல் என்று எண்ணியிருந்த அப்போர் வீரன் அது உண்மையில் ஈசன் செயல் என்று உணர்ந்து கொள்ளக் கடமைப்பட்டி ருந்தான். கிருஷ்ணன் தேர் ஓட்டினான். ஆனால் ஆயுதம் எடுத்துப் போர் புரியவில்லை. அங்ஙனம் ஹ்ருதய கமலக்ஷித்திலும் அவன் சாஷியாக வீற்றிருக்கிறான்" என்று தத்துவ விளக்கம் தருகின்றார்.

சங்கப்ருத் நந்தகீ சக்ரீ
சார்ங்க தன்வா கதாதர .
ரதாங்க பாணி அசேஷாப்ய,
ஸர்வ ப்ரஹரணாயுத.

என்ற "விஷ்ணு ஸஹஸ்ரநாம" சுலோகத்தில் "ரதங்கா பாணி" என ஒரு சொல் வருகின்றது. இச்சொல்லுக்குப் பொதுவாகச் சக்ரதாரி-சக்ராயுதம் ஏந்தியவன் என்றே எல்லாரும் பொருள் கொள்வார்கள். ஆனால் அமரர் ராஜாஜி அவ்வாறு பொருள் கொள்வதை மறுத்து பக்தனின் வாழ்க்கைச் சகடம் (ரதம்) பூமியில் அழுந்திப் போய் விடாது பகவான் கை கொடுத்துக் காத்துதவுகின்றான் என்பதையே ரதங்காபாணி என்ற பதம் குறிப்பதாக விளங்கியிருக்கின்றார்கள்

தமிழனுக்கு நன்றாகத் தெரிந்த வாகனம் ரதம் . ரதம் போகும் வேகத்தில் தன் மனம் போகும் போது அதை மனோரதம் என்று சொன்னான். வானில் பறந்து செல்லும் ஊர்திக்கு வானரதம் என்றுபெயர் சூட்டினான் (புகைவண்டியைப் புகைரதம் என்றும் சிலர் வழங்கியி ருக்கிறார்கள்) அறிவையே வாகனமாகக் கொண்டு அண்ட கோடிகளைஅளக்க ஒரு ஞான ரதத்தையும் அவன் படைத்துக் கொண்டான். சிறு தேர் உருட்டல் என்ற ஒரு பிள்ளைத்தமிழ் பருவத்தை வகுத்துக் கொண்டதோடு அமையாமல் "தர பந்தம்" என்ற பெயரில் சித்திரக் கவிகள் தீட்டியும் தமிழ்ப்புலவன் மகிழ்ச்சி அடைந்தி ருக்கிறான் பெரும்பாலான ஆலய கோபுரங்கள் ரதம் போன்ற வடிவில் தான் கட்டப்பட்டுள்ளன.

இடைக்காலச் சமய எழுச்சியின் விளைவாக நமது ஆலயங்களில் ஆண்டு தோறும் திருவிழா கொண்டாடும் பழக்கம் தோன்றியது. கோயில் விழாக்களில் எத்தனையோ விதமான வாகனங்கள் இடம் பெறுகின்றன. ஆனால்' தேருக்கும் தெப்பத்திற்கும் உள்ள மதிப்பு. வரவேற்பு மற்றவைகளுக்கு இல்லை. தெப்பத் திருவிழா நடத்த அகலமான நீர் நிலைகள் தேவை. மழை குறைந்தால், தண்ணீர்

இல்லாவிட்டால் தெப்பம் நிறுத்தப்படும். தேரோட்டம் நடத்த ஓரளவு இடவசதி இருந்தால். போதும். சைவ வைணவக் கோயில்கள் மட்டுமல்ல, பெரும்பாலான கிராம தேவதைகள் கூட இன்று முறை யாகத் தேரோட்டம் காண்கின்றன.

தேர் என்ற உடனே திருவாரூர் தான் எல்லோருக்கும் நினைவுக்கு வரும். திருவாரூரில் கோயில் கொண்டிருக்கும் தியாகராசர் அருட்களஞ்சியம். அவர் ஏறி வரும் தேரோ கலைக்களஞ்சியம். இத்தனை நாள் ஓடாதிருந்த திருவாரூர்த் தேர் கூட ஓடத் தொடங்கி விட்டது இனி ஓடாத தேர்கள் யாவும் ஓடும். உலகம் என்ற தேரும் நல்ல நிலைக்குச் சேரும்.

பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் பிற்காலப் புலவர். வாக்கு நலமிக்க வரகவி. பல பிரபந்தங்களை அருளியிருக்கும் இப்பாவலர் ஒரு முறை திருவரங்கத் தேரோட்டத்தின் போது அரங்கன் தேரை ஆர்வமுடன் பார்த்தார். பாடல் பிறந்தது.

ஒன்றும் அறியாத ஊமர்காள்
தென்னரங்கர் இன்று திருத்தேரில் ஏறினார்!
நின்று வடம் பிடிக்க வாருங்கள்! வைகுந்த நாட்டில்
இடம் பிடிக்க வேண்டு மென்றக்

கால்.வடம் பிடித்து அரங்கன் தேரை இழுப்பவர்களுக்கு வைகுந்த நாட்டில் இடம் கிடைக்குமாம். இது பிள்ளைப் பெருமாள் தரும் உறுதி மொழி.

செல்வச்சந்நிதியில் ஸ்ரீமுருகன் இன்று சித்திரப் பெருந்தேர் ஏறுகின்றான். இவன் ஏறும் தேர் புதியதேர். மிகச் சிறப்பான தேர். பேய்த்தேராய் அலைக் கழிக்கும் உலக மாயைகளிலிருந்து நம்மைக் கடைத்தோற்றும் பெருந்தேர் பேரின்பத்தேர். வேலவனின் தேருக்கு வடம்பிடிப்போம் அவன் சரணார விந்தத் தில் நிரந்தரமாக இடம்பிடிப்போம்.

## தேர்த்திருவிழாவின் பலன்.

ரதாரோஹண காலே ச ஸர்வ காம பலப்ரதம்
ஆயுர்வ்ருத்தி கரம்சைவ ஆரோக் கியம்
புத்ரவர்த்தனம்!
(காமிய ஆகமம்)

தேரில் அமர்ந்த பகவானை தரிசிப்பதால் ஆயுள், ஆரோக்கியம், புத்திரப்பேறு மற்றும் அனைத்து கோரிக் கைகளும், ஆசைகளும் நிறை வேறும்.

தேர்த்திருவிழா ஆலயத்தில் நிகழும் போது திருமணமாகி ஒரு வருடம் பூர்த்தி ஆகாதவர்கள் அத்திருவிழாவை பார்க்கக் கூடாது என மரபு ரீதியில் ஒரு வழக்கம் நிலவுகின்றது. இதன் காரணம் திருமணமானவர்கள் மங்களம் தருகின்ற நிகழ்வுகளைப் பார்ப்பது நன்மை தரும் என்றும் ஆன்மீகத் தொடர்பும் ஆத்ம தொடர்பும் உயிரணுக்கள் சேர்க்கை செய்கின்ற போது தேர்த்திருவிழா அழித்தல் தொழிலை குறிப்பதாக அமை கிறது. எனவே திருமணமாகியவர்கள் ஒரு வருடம் வரையும் அத்திருவிழாவை பார்ப்பதும் பார்க்காமல் இருப்பதும் இதன் அடிப் படையிலேயே.

இறைவன் உலக நலன் கருதி தன்னிலையிலிருந்து தான் கீழிறங்கி வருகின்றான் அவ்வாறு வருகின்ற போது ஐந்தொழில்களையும் ஐந்தொழில்களுக் குரிய சக்திகளையும் தனக்குத் துணை யாக்கி தமது கடமைகளை அல்லது நியமங்களை நியதியாக செய்கின்றான் அவ்வகையில் பார்க்கும்போது மகோற் சவத்தில் தேர்த்திருவிழா பஞ்சகிருத்தி யங்களில் ஒன்றான அழித்தல் தொழிலைக் குறிக்கிறது.

இத்தொழிலை செய்கின்ற இறைவன் உருத்திர மூர்த்தியாக தாமச குணத்திலிருந்து அத்தொழிலை ஆற்று வதனால் முதலாம் வருடத்தில் அத்திரு விழாவைப் பார்ப்பதனால் இறைவனின் குணத்திற்கு ஏற்றவாறு இவர்களுக்கும் தாமதமாகவே குழந்தைப்பாக்கியம் கிடைக்கக் கூடும் என்ற நம்பிக்கையாலும் தேர்த்திருவிழாவைப் பார்க்கக் கூடாது என்பர் போலும்.

சுபம் அஸ்து

**சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் M.A**
**இளைப்பாறிய உதவிப் பணிப்பாளர்,**
**இந்த சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்**
**இளைப்பாறிய விரிவுரையாளர், பலாலி ஆசிரிய கலாசாலை.**



# மானிடப் பிறவியின் மாண்பு

பரந்து விரிந்து இருக்கின்ற இந்தப் பூமியிலே பல்வேறு உயிரினங்கள் வாழ்கின்றன. பகுத்தறிவாகிய சிறப்பறிவு பெற்று வாழும் உயிரினமாக மனிதனே திகழ்கின்றான். மற்றைய உயிரினங்கள் செய்யும் செயல்களில் பலவற்றை மனிதனும் செய்கின்றான். உண்பது, உறங்குவது, இனவிருத்தி செய்வது போன்ற பல்வேறு செயல்கள் மனிதனாலும் செய்யப்படுகின்றன. மனிதர்கள் ஒவ்வொருவரிடமும் மிருக இயல்பும் தெய்வீக இயல்பும் கலந்தே இருக்கின்றன. மனிதனிடம் இருக்கும் மிருக இயல்புகளின் தாக்கத்தைக் குறைத்து தெய்வீகத் தன்மையை மலரச் செய்வதற்கு வழி காட்டுவதே ஆன்மிகம் ஆகும். மானிடப் பிறப்பு மகத்தான பிறப்பு என்பதை "அரிது அரிது மானிடராதல் அரிது' என தமிழ் மூதாட்டி ஔவையாரும் குறிப்பிடுகின்றார். உடல் உயிருக்கான ஒரு கவசமாகவே காணப்படுகிறது. உலகில் வாழும் மனிதர்களில் பலர் இந்த மானிடப் பிறப்பின் மகத்துவத்தை உணராமல் செயல்படுகின்றார்கள் நமக்கு இந்த சரீரம் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்திஇன்பம் பெறுதற்பொருட்டே ஆகும். என்பது சைவ சேனாதிபதியாகிய நாவலர் பெருமானின் வாக்கு ஆகும்.

அண்ட சராசரம் எல்லாம் வீற்றிருக்கும் இறைவனை இந்தப் பிண்ட மாகிய உடலிலே ஞானிகள் கண்டார்கள். உடலைத் தெய்வம் வீற்றிருக்கும் கோயிலாக மெய்ஞ்ஞானிகள் மாற்றினார்கள். ஆனால் மனிதர்களில் பலர் தமது பிறவியின் பயனை உணராமல் தாம் எடுத்திருக்கும் உடம்பைத் தாமே சிதைக்கின்றார்கள். ஆடாத ஆட்டம், தேடாத தேட்டம், கூடாத கூட்டம் எல்லாம் கூடி எடுத்த மானுட உடம்பைத் தாமே அழிக்கின்றார்கள். போதை வஸ்துக் களையும் மதுபானத்தையும் வயிற்றிலே நிரப்பி இறைவன் தந்த கோயிலைச் சுடுகாடு ஆக்குகிறார்கள். தானே தனக்கு பகைவன் ஆகித் தன்னையே அழிக் கின்றார்கள். கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் என்பது போல உடல் உறுப்புக்கள் அத்தனையும் வலுவிழந்த நேரத்தில் சிலருக்கு ஞானோதயம் ஏற்படுவதுண்டு.

நில்லா உலக வாழ்வை ஏழை
நான்
நிலையென்று கொண்டு நித்தம்
பொல்லாவழிகளிலே புத்தி கெட்டு
அலைந்திட்டேன்
தாயே ஈஸ்வரி என்னை
காத்தருள்வாய் அம்மா

என்று கழிவிரக்கம் கொண்டு கவிஞன் ஒருவன் பாடுவது போல வாழ்வின் இறுதிக்கட்டத்திலே சிலருக்கு ஞானோதயம் பிறப்பதுண்டு. தாய் தனது பிள்ளையைப் பத்துமாதம் கருவிலேயே சுமந்து பெற்று எடுக்கிறாள் இறைவன் தாயின் கற்பத்திலேயே வளரும் சிசுவிற்கு உயிரைக் கொடுத்து இப் பூமிக்கு அனுப்பி விடுகிறான். பிள்ளை வளர்ந்து வரும் காலத்தில் ஒவ்வொரு பருவத்திலும் ஒவ்வொரு விதமான மயக்கங்களுக்கு உட்பட்டுத் தான் எடுத்த அரிய மானிடப் பிறவியை சிதைத்தும் சீரழித்தும் விடுகிறான் என்பதைக் கடுவழிச்சித்தரின் பின்வரும் பாடல் குறிப்பிடுகின்றது.

நந்தவனத்திலோர் ஆண்டி - அவன்
நாலாறுமாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தான் ஒரு தோண்டி - மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டு டைத்தாண்டி

## புறத்தூய்மை

யோகிகள் தமது நாளாந்த யோகப் பயிற்சியால் இறைவனை அகத்திலே காண்பார்கள். அட்டாங்க யோக நெறியினைப் படிமுறையாக பின்பற்றுகின்ற பொழுது இறைவனின் வியாபகத்தை அகத்திலே காணலாம். சீவனுக்குள்ளே சிவமணம் பூக்கும். தன்னை அறிந்திடும் பக்குவமுள்ள தத்துவ ஞானிகளுக்கு சீவன் சிவலிங்கமாகிவிடும். உடம்பு நம்பப் படவேண்டிய பொருளே ஒழிய உதாசீனப்படுத்தக் கூடிய பொருள் அல்ல என்பதால் அதனை அலட்சியப் படுத்தக் கூடாது என்பார் திருமூலர். உத்தமனாகிய இறைவன் வீற்றிருக்கும் கோயிலைப் பரிசுத்தமாகவும் கண்காணிப்பாகவும் வைத்துக் கொள்ள வேண்டும் என்கிறார்.

உடம்பினை முன்னம்
இழுக்கென்றிருந்தேன்.
உடம்பினுக் குள்ளே உறுபொருள்
கண்டேன்
உடம்பிலே உத்தமன் கோயில்
கொண்டான் என்று
உடம்பினை யானிருந்து நம்புகின் றேனே.
(திருமந்திரம் 725)

## அகத்தூய்மை

புற உடலைத் தூய்மையாகப் பாதுகாப்பது போல அகத்தையும் தூய்மையாகப் பேணல் வேண்டும் உள்ளத் தூய்மை உடையவர்கள் தான் சிவனைப் பாடத்தகுதி உடையவர்கள் என்பதைச் "சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை" எனத் திருவெம்பாவை பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன. தூய்மையான உள்ளத் துடன் செய்யும் வழிபாட்டினைத்தான் இறைவனும் விரும்புவான் என்பதை "உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது" என சுவாமி விபுலானந்த அடிகளும் கூறுகின்றார். அகத்திலே அழுக்குகள் படிய விடக்கூடாது. நாளாந்தம் நம்மை நாம் அகவிசாரணை செய்து நம்மிடம் இருக்கும் அக அழுக்குகளை நீக்குதல் வேண்டும். மனத்தாலும் பிறருக்குத் துன்பம் நினைக்காமல் இருக்கின்ற பேராண்மை தான் உண்மையான அறம். மற்றவை எல்லாம் வெறும் வெளிப்பகட்டு என்பதை

மனத்துக் கண்மாசு இலன்ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற

எனத் திருக்குறள் குறிப்பிடுகிறது. மனதிலே தோன்றும் அழுக்கு நிறைந்த கழிவு நீர் ஓடும் வாய்கால் ஆகிய பொறாமை, பிறர் பொருளின் மீது விருப்பம் கொள்ளும் ஆசை, கோபம் கொள்ளுதல் ஆகிய வெகுளி, மற்றவர்களைக் கடும் சொல்லால் கூறும் இன்னாச் சொல் ஆகிய நான்கினையும் தவிர்த்து வாழ்வதே நல்வினை என்பதை

"அழுக்காறு அவா வெகுளி இன்னாச்
சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்"

எனத் தெய்வத் தமிழாகிய திருக்குறள் கூறுகிறது. உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் பிரபஞ்ச மயக்கத்தில் இருந்து விடுபட்டு அமர நிலை பெறுவதற்குத் தடையாக இருப்பவை எவை என்பதை மகாகவி பாரதியார் தனது பாடலிலே வரிசைப்படுத்தித் தருகிறார். இத்தடைகளை நீக்குவதற்கு வழியாது என்றும் குறிப்பிடுகிறார். இறையருள் அகத்திலே பிரகாசிக்க ஆரம்பித்து விட்டால் தெய்வீக ஞானம் உதயமாகி விடும் அகத்தை ஆட்டிப் படைத்த பேய்கள் எல்லாம் தூரவிலகி ஓடிவிடும் என்பதை மகாகவி பாரதியாரின் பின்வரும் பாடல் தெளிவாக விளக்குகிறது.

மண்ணுலகின் மீதினிலே எக்காலும்
அமரரைப்போல் மடிவில்லாமல்
திண்ணமுற வாழ்ந்திடலாம்
அதற்குரிய
உபாயமிங்கு செப்பக் கேளீர்!

நண்ணியெல்லாப் பொருளினிலும்
உட்பொருளாய்ச்
செய்கையெலாம் நடத்தும் வீறாய்த்
திண்ணிய நல்லறி வொளியாய்த் திகழும்
ஒரு பரம் பொருளை அகத்தில்
சேர்த்து
செய்கையெலாம் அதன் செய்கை
நினைவெல்லாம்
அதன் நினைவு, தெய்வமே நாம்
உய்கையுற நாமாகி நமக்குள்ளே
யொளிர்வதென உறுதிகொண்டு
பொய், கயமை, சினம், சோம்பர், கவலை,
மயல்,
வீண்விருப்பம், புழுக்கம், அச்சம்
ஐயமென்றும் பேயையெலாம்
ஞானமெனும்
வாளாலே அறுத்துத் தள்ளி
எப்போதும் ஆனந்தச் சுடர் நிலையில்
வாழ்ந்துயிர்கட்கினிது செய்வோர்
தப்பாதே இவ்வுலகில் அமரநிலை
பெற்றிடுவார்

**திரிகரண சுத்தி (மனம்)**

மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றும் திரிகரணம் எனப்படும் இந்த மூன்றின் செயற்படுகளும் ஒழுங்காக இருந்தால் செய்கின்ற காரியங்கள் அனைத்தும் சித்தியாகும். ஏற்படும் தடைகள் யாவும் தவிடு பொடியாகும்.

"திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் நீ அருள்வாய்" என்றே தாயுமான சுவாமிகளும் தனது பாடலில் குறிப்பிடுகின்றார். அறம் என்பது எண்ணம், சொல், செயல் மூன்றும் சேர்ந்த ஒன்றாகவே காட்சி தருகின்றது. எண்ணம் அறத்தின் நிலையமைதி (Static) ஆற்றலாகும், சொல் இயக்க நிலை (Kinetic) ஆற்றலாகும். செயல் இயங்கும் நிலை (Dynamic) ஆற்றலாகும். மனத்திலிருந்து வரும் சிந்தனையே சொல், செயல் ஆகிய இரண்டிற்கும் மூலமாய் உள்ளது. எண்ணம் ஆரோக்கியமானதாக இருந்தால் சொல்லும் செயலும் தூய்மையுடையதாக அமையும், இதனை 'நல்லவை எண்ணல் வேண்டும்' என்று மகாகவி பாரதியாரும் குறிப்பிடு கின்றார்.

உலகநாதன் என்பவர் இயற்றிய உலக நீதி என்னும் நூலில் நீதிக் கருத்துக்களும் வாழ்க்கைக்கு வழிகாட்டும் உயர்வான விடயங்களும் கூறப் பட்டுள்ளன. ஒவ்வொரு பாடலின் இறுதிவரியிலும் முருகப் பெருமானின் திருவருட் சிறப்பினைப் போற்றுகின்றார். மனிதனுடைய செயற்பாடுகள் அத்தனைக்கும் அவனுடைய சிந்தனையே ஆதாரமாக உள்ளது. மனத்தைக் கட்டுப்படுத்தல் வேண்டும். பகைவனை உறவினன் என்று நம்பக்கூடாது. செல்வத்தை தேடி உண்ணாமல் பத்திரப்படுத்தி வைக்கக் கூடாது. அறம் செய்தலை ஒரு பொழுதும் மறக்கக்

கூடாது. கோபத்தை அடைத்து அதனால் விளையும் துன்பத்தை தேடக்கூடாது. முன்கோபக் காரருடன் உறவு வைக்கக் கூடாது மனமே வள்ளிநாயகனின் வாகனமாகிய மயில்வாகனப் பெருமானை வாழ்த்தி வணங்குவாயாக என்பதைப் பின்வரும் உலகநீதிப்பாடல் விளக்குகிறது.

"மனம் போன போக்கு எல்லாம் போக
வேண்டாம்
மாற்றானை உறவு என்று நம்ப
வேண்டாம்
தனம்தேடி உண்ணாமல் புதைக்க
வேண்டாம்
தருமத்தை ஒரு நாளும் கெடுக்க
வேண்டாம்
சினம்தேடி அல்லலையும் தேட
வேண்டாம்
சினந்து இருந்தார் வாசல் வழிச்
சேரவேண்டாம்
வனம் தேடும் குறவனுடைய
வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை
வாழ்த்தாய் நெஞ்சே"

மனதிற்கு உபதேசம் செய்யும் பாடல்கள் பலவற்றை நமது அருளாளர் களின் தோத்திர நூல்களில் காணலாம்.

"கெடுவாய் மனனே கதிகேள் கரவாது இடுவாய்" என அருணகிரியார் முருக மந்திரமாகிய கந்தரநுபூதியிலும் வாழ்கின்றாய் "வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு ஆழ்கின்றாய்" என மணிவாசகர் பெருமான் தனது தெய்வ வாசகமாகிய திருவாசகத்திலும் "துயரறு சுடரடி தொழுதெழு மனனே" என நம் மாழ்வார் தனது திருவாய் மொழிப் பாடலிலும் மனதிற்கு உபதேசம் செய்வதைக் காணலாம்

மனம் தூய்மையின்றிச் செய்யும் தெய்வ வழிபாடு பயன்தராது. பொய், களவு, கொலை, கோபம், கள், காமம் ஆகியவை மனிதனின் வாழ்க்கையையே நாசமாக்கி அழித்து விடும். "கண்டதே கட்சி கொண்டதே கோலம்" என்ற வாழ்க்கை பயனற்றது. எல்லாம் வல்ல, எங்கும் நிறைந்த இறைவனை மனம், வாக்கு, காயம், ஆகியவற்றால் திரிகரண சுத்தியுடன் போற்ற வேண்டும். அன்பு, இரக்கம், தொண்டு ஆகியவற்றைப் போற்றி வாழ்பவர்களின் வாழ்வே சிவ வாழ்வு, தவ வாழ்வு என்பதைச் சித்தர்கள் மக்களுக்கு உணர்த்தி வைத்தார்கள். மனம் அடங்கினால் முத்தியும் சினம் அடங்கினால் சித்தியும் கிடைக்கும் என்பதை இடைக்காட்டுச் சித்தரின் பின்வரும் பாடல் குறிப்பிடுகிறது.

"மனமென்னும் மாடு அடங்கினால்
தாண்டவக்கோனே - முத்தி
வாய்த்ததென்று எண்ணடா
தாண்டவக்கோனே
சினமென்னும் பாம்பு இறந்தால்
தாண்டவக்கோனே - யாவும்
சித்தியென்று நினையடா
தாண்டவக்கோனே"

வாக்கு: மனிதர்கள் ஒவ்வொருவரும் வாயால் பேசும் வார்த்தைகளை அளந்து நிதானமாகப் பேச வேண்டும். வார்த்தைகளால் ஒருவரையும் புண் படுத்திப் பழகக் கூடாது. பிறிடம் கடுஞ் சொல் பேசாமல் இனிய வார்த்தைகளைப் பேசுவது எல்லோராலும் செய்யக்கூடிய எளிய அறம் என்பதை "யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே" என்றே திருமந்திரமும் குறிப்பிடுகின்றது. உடல் உறுப்புக்களில் எதை அடக்கா விட்டாலும் நாவை அடக்கி வைக்க முயல வேண்டும். இல்லையென்றால் வாய்க்கு வந்தபடி பேசுவதால் வரும் துன்பத்தைச் சுமக்கவேண்டி வரும் என்பதை

"யாகாவாராயினும் நாகாக்க
காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

எனத் திருக்குறள் செப்புகிறது.

வீட்டிற்கு வருகிறவர்களை விருந்தோம்பல் செய்யும் பொழுது முகம் மலர்ந்து உபசரித்தல் வேண்டும். வார்த் தைகளால் வைது கொண்டு உணவை

வழங்குவதால் பயன் எதுவும் இல்லை. தாம் வாழும் இல்லத்தைச் சாந்தியும் சமாதானமும் உள்ள இடமாகத் தென்றல் வீசும் இடமாக மாற்றுவதும், சூறாவளியும் புயலும் வீசும் இடமாக ஆக்குவதும் வீட்டு இல்லத் தலைவியின் கையிலே தான் உள்ளது என்பதை

"ஏசியிடலின் இடாமையே நன்று
எதிர் பேசும் மனையாளின் பேய் நன்று"

எனத் தமிழ் மூதாட்டி ஔவையார் தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.

தீயினால் சுடும் புண்ணிலும் பார்க்க நாவினால் சுடும் வடு மோசமானது. தீயினால் சுட்ட புண் நாளடைவில் மாறிவிடும். ஆனால் நாவினால் சுட்ட வடு உள்ளத்தில் எப்பொழுதும் ஆறாது என்பதை "தீயினாற் சுட்ட புண் உள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடு" என செந்நாப் போதரின் தெய்வக் குறள் கூறுகிறது.

"உண்டிருந்து வாழ்வதற்கே உரைக்கின்றீர் உரையீரே" என்ற வாக்கிற்கு அமைய பஞ்சமா பாதகங்கள் அனைத்தையும் செய்பவர்களை வாழ்த்தி வணங்கித் தமது லௌகிக நலன்களைப் பேணும் கூட்டத்தினர் பலரை நாம் இன்று காண்கின்றோம். நாயன்மார்கள் தங்கள் கொள்கைகளில் உறுதிப்பாட்டுடன் நின்றார்கள்.

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்"

என்பது அப்பர் பெருமானின் வாக்கு ஆகும். பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்" என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வாக்கும் ஆகும்.

"அளவுக்கு மிஞ்சி உண்ணாதே; அளவுக்கு மிஞ்சி உறங்காதே" என்பது நம்மிடம் உள்ள முதுமொழி ஆகும். அளவில்லாமல் பேசுவதால் மன நிம்மதி குறையும். அளவில்லாமல் உணவு அருந்துவதால் உடல் நலம் குறையும். அளவில்லாமல் உறங்குவதால் சோம்பல் உடலை ஆக்கிரமித்துக் கொள்ளும்.

"முயற்சியுள்ள மானிடரில் சிங்கம் போன்றவனையே திருமகளும் அணைவாள்" என்றே பஞ்சதந்திரமும் கூறுகிறது. சோம்போறிகளுக்கு இலட்சுமி கடாட்சம் என்றுமே கிட்டாது. ஆத்மஞானம் அகத்திலே ஒளி விட்டுப் பிரகாசிக்க ஆரம்பித்ததும் வாய் மௌனமாகிவிடும் ஆசைச் சங்கிலி அறுந்து விட்டால் பேசாப் பெருநிலை பெற்று விடலாம் என்பதை

"ஆசா நிகளந் துகளாயின பின் பேசா அனுபூதி பிறந்ததுவே" என அருணகிரிநாதர் கந்தரநுபூதியிலே குறிப்பிடுகின்றார்.

சீவனுக்குள்ளே சிவமணம் பூத்த ஞானிகளின் வாயில் இருந்துவரும் வார்த்தைகள் மந்திரங்கள் என்றே போற்றப்படுகின்றன. "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளர்ந்த மறைமொழி தானே மந்திரம் என்ப" என்றே தொல்காப்பியமும் குறிப்பிடுகிறது. அருளாளர்கள் தந்த தெய்வத் தமிழாகிய திருமுறைகளை நாம் மந்திரங்களாகவே போற்றுகின்றோம் தமிழிலே திருமுறை பாடுதல் நாம் இறைவனக்குச் செய்கின்ற அர்ச்சனை என்பதை

"அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக என்றார் தூமறை பாடும் வாயார் எனப் பெரிய புராணம் குறிப்பிடுகிறது.

**காயம் ( உடல் )**

காயம் என்பது உடம்பினைக் குறிக்கும் உடல் நிலையில்லாதது என்பதைக் "காயமே இது பொய்யடா வெறும் காற்றடைத்த பையடா" எனப் பட்டினத்தடிகள் தனது பாடலில் குறிப்பிடுகின்றார். "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்பதையே தனது குறிக்கோள் வாசகமாகக் கொண்டு வாழ்ந்த அப்பரடிகள் ஒவ்வொரு உறுப்புக்களும் இறை அனுபவத்தை அகத்திலே பெறுவதற்கு திசைகாட்டியாக அமைய வேண்டும் என்பதைத் தனது திரு அங்க மாலைப் பாடலின் ஊடாக வெளிப் படுத்துகின்றார். எல்லா உறுப்புக்களும்

இறைவனை நோக்கித் திரும்பினால் அகத்திலே இறைவனைக் காணலாம் என்பதைத் "தேடிக்கண்டுகொண்டேன் திருமாலொடு நான்முகனும் தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன்" என்று கூறுகின்றார்.

பெரும் கொடை வள்ளல்களைப் போலச் சிலர் பேசுவார்கள் ஆனால் தமது வாழ்வில் சமுதாயப் பணிக்கோ, சமயப் பணிக்கோ ஒரு சதமும் ஈயமாட்டார்கள். கொல்லாமை, கொன்றவற்றை உண் ணாமை ஆகியவற்றைப்பற்றி மணிக் கணக்காக மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுவார்கள். ஆனால் தனது சொந்த வாழ்வில் நாளாந்த உணவில் ஊன் உணவு இல்லாவிட்டால் உண்ணவே தயங்குகிறார்கள். வாக்கிற்கும் வாழ் விற்கும் எதுவித தொடர்பும் இல்லாமல் வாழ்கின்ற இவர்களின் போதனைகளை அறிவுள்ள சமுதாயம் என்றுமே ஏற்றுக் கொள்ளாது. அப்பர் பெருமான் போல வாக்கும் வாழ்வும் ஒருமித்து வாழ்பவர்கள் தான் உதாரண புருஷர்களாகத் திகழ முடியும். ஒருவருடைய பெருமையை அல்லது சிறுமையை ஆராய்ந்து அறிய உதவும் உரைக்கல்லாக இருப்பவை அவரவர் செய்கின்ற காரியங்களே என்பதை

பெருமைக்கும் ஏனைச்
சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்

எனத் திருக்குறள் கூறுகிறது.

பக்குவமான ஞானி யார்? என்பதையும் ஞானி வேடம் போட்டு நடிக்கும் நடிகர்கள் யார்? என்பதையும் திருமந்திரம் வேறுபடுத்திக் காட்டுகிறது. கழுமரத்தின் அடியில் இருக்கும் நாய் போலச் செப்படி வித்தைக்காரர்கள் கத்தித்திரிவார்கள். குரங்கு போன்ற தாவும் மனமுடைய சிலர் கழுகு போன்று ஏமாளிகளைப் பிடுங்கித் திரிவார்கள். ஆனால் உண்மையான சிவஞானிகள் ஐம்பொறிகளும் உடலும் நுகர்ச்சிக்குத் தக்கனவாக ஒத்திருந்தும் போகங்களை விரும்பாது செத்தாரைப் போலத்திரிவர். உண்மை ஞானிகள் மாய வித்தைகள் காட்டிப் பிறரை வஞ்சிக்க மாட்டார்கள்.

கத்தித் திரிவர் கழுவடி நாய் போற்
கொத்தித் திரிவர் குரக்களி ஞானிகள்
ஒத்துப் பொறியும் உடலும் இருக்கவே
செத்துத் திரிவர் சிவஞானி யோர்களே

(திருமந்திரம் 1671)

**நிறைவுரை**

மகத்தான மானிடப் பிறப்பை எடுத்த நாம் நமது வாழ்க்கையைச் சீராகவும் சிறப்பாகவும் வாழ்ந்து இறையருளைப் பெறுவதற்கு ஆன்மீக சிந்தனைகளே என்றும் துணையாக அமையும். உடற்பலமும் மனோபலமும் சரியான திசையில் செய்வதற்கு ஆத்ம பலமும் அவசியமாகும் நமது ஆலயங்களும் ஆலயங்களில் இடம் பெறும் செயற்பாடுகளும் மனிதன் புனிதனாக வாழ வழி காட்ட வேண்டும்.

ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

வித்யாபூஷணம்,
பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா B.A. (Hons)
(கோப்பாய் சிவம்)



# இந்து சமயத்தின் பல்துறை வளர்ச்சியும் பரம்பல் நிலையும்
## - ஒரு புதிய கண்ணோட்டம்

"மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்"

என்ற கூற்று இன்று எங்கும் எப்போதும் ஒலிக்கக் கேட்கலாம். அந்த வேண்டு கோள் இன்று நன்கு நிறை வேறிவிட்டது. சைவ சமயம் இல்லாத இடம் இல்லை என்ற அளவுக்கு உலகின் எல்லாப் பாகங்களிலும் சைவநெறி தழைத்தோங்கி வருகின்றது. நமது கீழைத் தேயத்திலும் கூட முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இன்று நமது சைவ ஆலயங்களில் புனருத்தாரணங்களும் கும்பாபிஷேகங் களும் நித்திய நைமித்திக காமியக் கிரியா விசேஷங்களும் அவற்றோடு தொடர்பான விழாப் பொலிவுகளும் இல்லங்களில் நிகழும் வைபவங்களும் அமர்க்கள மாகவே இருக்கின்றன. எல்லோ ருக்கும் மகிழ்ச்சிதான். பெருமையானதும் தான்.

இங்கு பார்க்கும் இத்தகைய நிலைமைகள் இந்து சமயத்தின் வளர்ச்சி என்று கூறலாமா? எப் போதுமே, எந்த ஒரு துறையிலுமே ஒரு திடீர் வளர்ச்சி எனக கருதக்கூடிய பாய்ச்சல் நிலை ஒன்று வரும் போது அத்துறை சார்ந்த அறிஞர் பெருமக்கள் அந்த எழுச்சி பற்றி அவ்வப் போது ஆராய்வது தேவையாகிறது. வேகமாக இழுக்கப்படும் தேரின் ஓட்டம் பலதரப்பட்ட அடியார்களின் ஒருங்கு கூடிய விசையினால் நிகழ்வது. அங்கு ஒன்றி ரண்டு சிற்பாசாரியார்களின் சறுக்குக் கட்டை போடும் நிகழ்வு இல்லையானால் தேர் எங்கு எவ்வாறு போய்ச்சேரும் என்பது எண்ணிப் பார்க்க முடியாதது.

வளமும் வளர்ச்சியும் அதிக ரிக்கும் போதுதான் கட்டுப்பாடுகளும் நெறிப்படுத்தல்களும் அதிகமாகத் தேவைப்படுகின்றன. இந்து சமயம் இன்று அதன் பல்துறைகளிலும் வளர்ந்து வருகின்றது, வளம் பெற்றுவருகிறது என்று கூறும் கருத்துக்களையும் விட, இந்து சமயம் இன்று நன்கு பரம்பல் அடைந் துள்ளது என்ற கூற்றே மிகச்சரியானது. இப்பரம்பல் நிலை மிகத் தேவையான ஒன்று என்பதை மறுக்க முடியாது. ஆனால் இந்நிலை மிக ஆபத்தானது என்பதையும் மறக்க முடியாது.

முன்பு சமயம் என்பது சமயம் சார்ந்த சடங்காசாரங்களும் மிகக் குறுகிய வட்டத்தினுள் அடக்கப் பட்டிருந்தது. அந்த குறுகிய வட்டத்தைச் சார்ந்தவர்கள் சமய நம்பிக்கையும் சமயம் சார்ந்த் நூலறிவும் மிக அதிகமாகக் கொண்டிருந்தார்கள். சமயப் பாரம்பரியம் ஒன்று அவர்களுக்கு இருந்தது. சமய அனுஷ்டானங்களை

அவர்கள் பின்பற்றி வந்தனர். அவர்களது இரத்தத்தில் (விஞ்ஞான முறையில் கூறினால் ஜீன்ஸ்) தத்தமது சமய ஆழ்ந்த ஈடுபாடும் அதன் வழிச்செல்லும் நடை முறை இயல்பும் கலந்திருந்தது.

சமயநெறியை முன்னெடுத்துச் செல்லும் இந்த வட்டம் சாராதவர்கள் சமய அறிவிலும் அனுட்டானங்களிலும் சிறிது குறைவான ஈடுபாடுகொண்டிருந்தாலும் இறையுணர்வு, சமய நம்பிக்கை என்ற இரண்டுக்கும் அப்பால் சமயம்சார் சடங்குகளையும் கிரியைகளையும் செயற்படுத்தி நெறிப்படுத்துவோர் மீது அபாரமான நம்பிக்கை கொண்டவர்களாகவும் இருந்தார்கள். அவர்களிடம் நாம் ஆட்பட்டிருந்தால் அவர்கள் நம்மைக் கடைத் தேற்றுவார்கள், அந்த சமயப் பெரியார்கள் நம்மை இறைபாதத்தில் சேர்த்து விடுவார்கள் என்ற நம்பிக்கை அவர்களிடம் இருந்தது.

அந்த நம்பிக்கைக்கு எவ்வித பங்கமும் இல்லாமல், அந்த சமயப் பெரியார்களிடமும், 'நாம் தனி மனிதர்களல்ல. நம்மைச் சார்ந்து வாழும் நமது சமுதாய மாந்தர்களின் வழிகாட்டிகளாகவும் அவர்களை வாழ வைப்பதற்காக இறையுணர்வுடன் செயற்படவேண்டியவர்களாகவும் நாம் இருக்கிறோம்' என்ற உணர்வும் அறிவும் அவர்களுக்கு இருந்தது. தமது செயற்பாடுகளால் தான் இந்தப் பிரபஞ்ச ஒழுங்கு (வேதகால 'ரிதம்' கோட்பாடு) நெறிப்படுத்தப்படுகிறது என்பதை அவர்கள் நம்பி நடந்தார்கள்.

காலச்சுழற்சியில் இருதரப்பாரிடமும் மாற்றங்கள் நிகழ்ந்தன. சமயச் சடங்குகளையும் கிரியைகளையும் ஆற்றுபவர்களின் மனநிலைகளிலும் செயற்பாடுகளிலும் உலகியல் சார்ந்த எண்ணங்கள் அதிகரித்த போது, அவர்களுக்கான சுயவாழ்க்கைப் பிரச்சினைகள் அதிகரித்தபோது அவர்கள் சமுதாயம் முழுமைக்குமாக வாழ முடியாமல் தமக்காகவே வாழும் நிலை தோன்றியது. சமுதாய மாந்தர் மத்தியில் அவர்களுக்கான கௌரவமும் மதிப்பும் நம்பிக்கையும் குறையத் தொடங்கியது.

சமுதாய மாந்தர் ஒவ்வொரு வரும் தத்தமது ஆன்ம ஈடேற்றத்தைத் தாமே கவனிக்க வேண்டும் என்ற எண்ணம் உருவாகியது. அது மாத்திரமல்லாமல் தாமும் இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும். சமயச் சடங்குகளைச் செய்ய வேண்டும் என்னும் உணர்வு பரவலாகத் தொடங்கியது. இது மிக ஆரோக்கியமானதும் வரவேற்கப்பட வேண்டியதுமான ஒன்று என்பதை யாரும் மறுக்க முடியாது.

உலகியல் வாழ்க்கையில் ஏற்பட்ட அரசியல், சமூக, பொருளாதாரக் கட்டமைப்பின் மாற்றங்கள் ஆலயங்களின் வளர்ச்சிக்கும் அடிகோலியது. இதன் பயனாக, சமுதாய மாந்தர் பெருமளவில் ஆலயங்களுக்குள் உள்வாங்கப்பட்டனர். அதாவது சமய வாழ்க்கையிலிருந்தும் சமயஉணர்விலிருந்தும் சற்றுத் தொலைவிலிருந்த மக்கள் பெருந் தொகையாகச் சமயத்திற்குள் நுழைந்தனர். மறுதலையாக, ஒரு குறுகிய வட்டத்தினுள் இருந்த சமய உணர்வும் சடங்காசாரங்களும் வெளிக்கொணரப்பட்டு, பரம்பல் நிலை அடைந்திருக்கிறது.

பிரச்சினை இங்கே தான் ஆரம்பமாகிறது. தாமும் இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும், சமயச் சடங்குகளைச் செய்யவேண்டும் என்னும் உணர்வு எல்லோரிடமும் பரவி வளர்ந்த அளவுக்கு சமய அறிவை வளர்த்துக் கொள்ளும் ஆவல் வளர்ந்ததா? சரி, மக்களில் ஒரு பகுதியினர் இந்த ஆவலை வளர்த்துக் கொண்டனர் என ஏற்றுக் கொண்டாலும் அவர்களுக்கு அந்தத் தேடலுக்குப் பிரதிபலன் என்ன? ஏனென்றால் தேடல் இல்லை என்பது ஒரு குறையாகக் கூறப்படும் அதேநேரத்தில் தேடுதலுக்கான கொடுப்பனவும் மிகக் குறைவாகவே உள்ளதென்ற குறையையும் சற்று உரத்தே கூறவேண்டியுள்ளது.

சமய உணர்வும் சடங்குகளும் கொண்டாட்டங்களும் அதிகரித்துப் பரம்பிச் செல்கின்றதல்லாமல் சமய நூல்களைக் கற்றுணர்ந்து சமய தத்துவ உண்மைகளை உணர்ந்து கொள்கின்ற மனப்பாங்கு வளரவில்லை. கிரியை களையும் சடங்கா சாரங்களையும் எல்லாரும் கைக்கொள்ள வேண்டும் என்ற ஆவல் கிளர்ந்தெழுகின்றதல்லாமல் அவற்றின் உண்மைத் தன்மையையும் உட்பொருளையும் விளங்கிக் கொள் வதிலும் சரியாக அவற்றைக் கடைப் பிடிப்பதிலும் ஆர்வம் வளரவில்லை.

முன்னர் கூறியபடி, குறுகிய வட்டத்திலிருந்து வெளியேறிவிட்ட சமயச் சடங்குகளும் கிரியைகளும் சரி எது, பிழை எது என்பது தெரியாமல் மனம்போனபடி கைக்கொள்ளப்படுகின்றன. ஆலயங் களிலும் இல்லங்களிலும் நடைபெறும் சமய நிகழ்வுகளில் புதிது புதிதாகப் பல செயற்பாடுகள் தத்தமது வசதிக்கும் விருப்பத்திற்கும் தேவைக்கும் இணங்கப் பலரால் புகுத்தப்படுகின்றன.

முக்கியமாக வீடியோ படம் எடுப்பது என்பது நமது வாழ்க்கையின் மிகமிக முக்கியமான அம்சமாக நமது மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு நமது சமயக் குருமாராக பல இடங்களில் வீடியோப் படப்பிடிப்பாளர்களே செய்யப் படுகின்றனர். அவர்களின் தேவைக்காக நமது கிரியைகள் பல இல்லாமல் செய்யப் படுகின்றன. (உதாரணமாக, ஓமப்புகை இடைஞ்சல் என அதை அகற்றுவது ) வேறு சில கிரியைகள் மாற்றம் செய்யப் படுகின்றன. (உதாரணமாக, கிழக்கு நோக்கி அமர்ந்திருக்கும் மணமகளை எதிர் நோக்கியவாறு மேற்குமுகமாக எழுந்து நின்று தாலி கட்டவேண்டிய மணமகன் இப்போது 'கமரா' வைப் பார்த்த படி திசைமாறி நின்று தாலி கட்டுதல்) வேறுபல புதிய கிரியைகள் சேர்க்கப் படுகின்றன. (சாமர்த்தியச் சடங்குகளிலே தொட்டிகளில் நீச்சலடித்தல்)

(வீடியோப்படம் சம்பந்தமான குறிப்பு ஒரு சின்ன உதாரணம் மட்டும்தான் அதைமட்டும் இக்கட்டுரைப் பொருளாக எடுத்துப் பூதாகரமாக்க வேண்டாம். )

இது போல இன்னும் பல மாற்றங்கள் பல்வேறு தரப்பினரால் பல் வேறு துறைகளில் நுழைக்கப்பட்டு விட்டதால் சரி எது பிழை எது எனத் தெரியாமல் தவிப்போர் பலர்.

மும்முறை குட்டி வழிபடுதல், தோப்புக்கரணம் போடுதல் என்பன விநாயகருக்குரிய சிறப்பு வழிபாடு. இன்று பலர் எல்லாத் தெய்வத்திற்கு முன்னும் இவ்வாறு வழிபடுவதைக் காண்கின்றோம். அங்கப் பிரதட்சணம் அடியழித்து வணங் குதல் (அடியளந்து வணங்குதல்) என்பன வெளிவீதியில் மட்டும் நிகழவேண்டும். இன்று பலரும் உள்வீதியிலே இவற்றை கைக்கொள்வதால் உள்வீதியிலிருக்கும் விநாயகர் முதலிய சந்நிதானங்களுக்குக் கால்நீட்டும் குற்றத்திற்கு ஆளாகின்றனர். அது மட்டுமல்லாமல் வீதிவலம் வரும் மற்ற அடியவர்களுக்கு இடையூறு செய் கின்றனர். பலிபீடத்திற்கு இப்பால் வீழ்ந்து வணங்கவேண்டும் என்ற நாவலர் கூற்றைத் தெரிந்து கொள்ளாமல் எல்லாச் சந்நி தானங்களிலும் வீழ்ந்து வணங்குவதன் மூலமும் இத்தகைய அபராதங்களைச் செய்கின்றனர்.

கோவில்களுக்குச் செல்லும் அடியவர்கள் தாமே பூக்களைக் கொண்டுபோய்ப் படிகளில் சொரிந்து வழிபாடு நிகழ்த்துவது, அதற்கும் அப்பால் போய்ப் உள்ளே இருக்கும் திருவு ருவத்திற்குத் தாமே பூக்களை எறிந்து அர்ச்சனை செய்ய முற்படுவது, படிகளில் கற்பூரம் ஏற்றுவது, கற்பூரம் ஏற்ற வைத்திருக்கும் தட்டில் கற்பூரத்தை ஏற்றி அதனை ஒவ்வொரு சுவாமியின் சந்நிதானத்திற்கும் எடுத்துச் சென்று தாமே கற்பூரம் காட்டிப் பூசை செய்வதாகப் பாவனை செய்வதில் திருப்தியடைவது, ஆலயத்திருவிழா முடிவடைந்து ஆலயத் துள் நுழையும் இறைவனுக்குக் குருக்கள்

கும்பநீர் சொரிந்து (பாததீர்த்தம்) வர வேற்பது போல, வீதிவலம் வரும் வேளையில் அடியார்கள் தாமும் தமது நிறை குடத்தை எடுத்து நீர் சொரிந்து வரவேற்றல்.... என்றிப்படியாக மனம் போன போக்கில் பல கிரியைகள் நம்மிடையே மலிந்து விட்டன.

நாம் நமக்காக ஓர் ஆலயம் அமைத்து நாமே அதற்கு ஒரு அர்ச்சகரை நியமித்தபின் அவர்மீது நம்பிக்கை யில்லாமல் நாமே அங்கு பூச்சொரிந்தும் கற்பூரம் ஏற்றியும் பூசை செய்வது நியாயமா? இதன் பிறகு நமக்கு ஓர் அர்ச்சகர் அவசியமா?

அர்ச்சகர் என்பவர் நம்மைப்போல் இல்லாமல் சமயப் பாம்பரியம் ஒன்றை உடையவராகவும் சமயக் கல்வியைப் பெற்றவராகவும் சமய தீட்சை முதலியன பெற்றவராகவும் இருக்கிறாரல்லவா? (ஒருவேளை அத்தகைய தகுதி அவரிடம் இல்லாவிட்டால் அத்தகைய ஒருவரை நியமித்தது நமது தவறு)

எல்லா விரதங்களையும் எல்லாரும் அனுஷ்டிக்கிறார்கள் என்ன நோக்கத்தில் யார், எத்தகைய விரதங் களை எவ்வாறு அனுஷ்டிக்க வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் பல எமது சாஸ் திரங்களில் விதிக்கப்பட்டுள்ளன மனம்போனபடி தவறான முறையில் அனுஷ்டிக்கப்படும் விரதங்களால் என்ன பயன்?

இனி, வழிபாடுகள், விரதங்கள் யாவற்றுக்கும் ஆசார ஒழுக்கங்கள் என்ற தூய்மையும் புனிதமும் தான் மிக முக்கியமானவை. சைவ உணவும் சமய தீட்சையும் உடையவரான வாழ்க் கையும் தினமும் அதிகாலையில் நீராடித் தோய்த்து லர்ந்த ஆட அணிந்த பின்னரே சமய நிகழ்வு எதிலும் கலந்து கொள்ளவேண்டும் என்ற அடிப்படை நியதியும் இன்று எத்தனை பேரிடம் உண்டு?

ஆக, இன்று இந்து சமயம் மிக அதிகமாகப் பரம்பி அகலக்கால் வைத்துள்ளது. அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் ஆழமாக வேரூன்றாத மரம் உறுதியாக நிலைபெற முடியுமா? ஆன்மீக உணர்வும் அடிப்படை அறிவும் அனைத்து உள்ளங்களிலும் நிலை பெற வேண்டும். நாம் உண்மைச் சமயிகளாக உரிய முறைப்படி வாழவேண்டும் என்ற உறுதியான நம்பிக்கையும் ஈடுபாடும் அனைவருக்கும் ஏற்படவேண்டும். அதற்கு உழைப்பதற்குச் சான்றோர்கள் முன்வரவேண்டும். சமய குருமாரும் சமய ஆசிரியர்களும் சமயப் பிரசங்கிகளும் முதலில் தம்மை நல்ல சமய நெறியில் நிலைப்படுத்தித் தமது சமய உணர்வையும் சமய அறிவையும் வளம்படுத்திக் கொள்வதுடன் சமு தாயத்தை நல்ல சமயநெறியில் முன் னேற்றப்பாடுபடவேண்டும்

உள்ளன்போடு நாமனைவரும் இதற்காக ஆண்டவனைப் பிரார்த்திப் போமாக.

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்."

**கலாநிதி (திருமதி) ஜெ. இராசநாயகம்**
**சிரேஷ்ட விரிவுரையாளர்**
**கல்வியியற் துறை**
**யாழ்.பல்கலைக்கழகம்**




# இந்து சமய மரபிலே தெய்வங்களுக்குரிய அணிகலன்கள்

**முன்னுரை:**

தெய்வங்களின் திருவுருவங்களை அழகூட்டுவதற்கு தெய்வங்களுக்கு அணியப்பெறும் அணிகலன்கள் முக்கியத் துவம் பெறுகின்றன. ஆரம்பகாலம் முதல் மங்களத்தின் அடையாளமாக விளங்கும் ஆபரணங்களைத் தெய்வங்களுக்கு அணிவித்து அத்தெய்வங்களின் அழகைப் பாடுவதில் அடியவர்களுக்கு விருப்பம் அதிகமாக இருந்தது. இத்தகைய அணிகலன்கள் தெய்வங்களோடு தொடர்புடைய நிலை சிந்துவெளி காலந்தொட்டே காணப்பட்டது. இதற்கான ஆதாரங்கள் சிந்துவெளிகால முத்தி ரைகளில் காணப்படுகின்றன. குறிப்பாகக நடனமாது ஒன்றின் உருவத்திலே பல்வேறு வகையான அணிகலன்கள காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். இருக்கு வேத காலத்திலும் மக்களுடைய அழகியல் ரசனை உணர்வில் அணிகலன்களுக்கு முக்கிய இடம் இருந்து வந்தது. இந்து விக்கிரகவியலிலே இடம்பெறும் ஆண் தெய்வங்களுக்கும், பெண் தெய்வங் களுக்கும் அணிகலன்கள் சிறந்த வனப் பையும், அழகையும் அளிக்கின்றன. தலையிலிருந்து கால்வரை பல்வேறு அங்கங்களுக்கும் பல்வேறு வகையான அணிகலன்கள் குறிப்பிடப்படுகின்றன. தலை, காது, மூக்கு, கழுத்து, மார்பு, கைமேற்பகுதி, கீழ்ப்பகுதி, விரல்கள், இடுப்பு, கணைக்கால், பாதங்கள் ஆகிய இடங்களுக்குரிய அணிகலன்கள் ஆகமத்திலும், சிற்ப நூல்களிலும் எடுத்துக் கூறப்படுகின்றன. இன்றைய கலை வரலாற்றில் தெய்வங் களுக்குரிய ஆபரணங்கள் தனியாகவும், சிறப்பாகவும் விபரித்துக் கூறப்படுமள விற்கு அவை சிறப்புப் பெறுகின்றன. ஒரு தெய்வ விக்கிரகத்தின் தெய்வீக அழகையும், கவர்ச்சியையும் எடுத்துக் காட்ட அணிகலன்கள் பயன்பட்டன. ஒருதாய் தனது குழந்தைக்கு அழகிய ஆபரணங்களை அணிந்து அழகூட்டி மசிழ்வது போல் தெய்வங் களுக்குரிய அணிகலன்களை அணிவித்து மகிழ் வதிலே அடியவர்கள் ஆர்வம் காட்டு கின்றார்கள்.

**தலைஅணிகலன்கள்**

தெய்வங்களுக்குரிய தலையலங்காரங்கள் கூட அணிகலன் களின் பல்வேறு வெளிப்பாடுகளுக்கு நிலைக்களனாக விளங்கின. தெய்வத்தின் தலையிலே அணியப்படும் மௌலி பல்வேறுவகையிலே பிரித்துக் கூறப்படும்.

காண்டமகுடம், சிரச்சக்கரம், அழக சூடகம் போன்றவைகள் குறிப்பிடத்தக் கவையாகும். இவற்றில் ஒருசில கிரீடங்களாக அமைய ஏனையவை தலையலங்காரங்களாக விளங்குகின்றன. பிரமன், உருத்திரன் ஆகியோருக்கு ஜடாமகுடம் சிறப்பாக அமைகின்றது. நாராயணனுக்குக் கிரீடமகுடம் முக்கியமானதாகக் கொள்ளப்படுகின்றது. அக் கிரீடமகுடத்தில் பல வேலைப்பாடுகள் மேலும் அழகூட்டுகின்றன. சிவனுடைய வடிவங்களில் சில தலப்பாகை அணிந்து காணப்படுவதும் தலையலங் காரங் களோடு தொடர்புபடுத்திக் கூறப்படுகின்றது. இவ் வகையில் இந்து சமய மரபிலேஒவ்வொரு தெய்வங் களுக்கும் ஏற்ற வகையில் அணி கலன்கள் அமையும் முறை பற்றிச் சிற்பநூல்கள் எடுத்துக் கூறப்படுகின்றன.

**காதணிகள்:**

தெய்வங்களுக்குரியதாக ஆரம்ப காலங்களில் போற்றப்பட்டு வந்த அணி கலன்கள் பிற்பட்ட காலங்களில் பெண்களோடு மிக நெருங்கியதாக அமைந்தன. இவ்வகையில் தெய்வங்களின் காதுகளை அலங்கரிக்க பல்வேறுவகையான அணி கலன்கள் பயன் முறையிலே இடம்பெறும் முக்கியமான கிரியைகளில் காதுகுத்துதல் என்னும் கிரியையும் ஒன்றாகும். இதனை வடமொழியில் கர்னவேதனம் என்று கூறுவர். பிரம்மச்சாரிகள் கூட காதுகளிலே குண்டாலங்கள் அணிவது இந்து மரபாகும்.

பௌத்த சமயத்தில் புத்தரின் உருவச்சிலைகள் பல்வேறு காலப் பகுதியிலே உருவாக்கப்பட்டாலும் அந்த உருவங்களுக்குக் காதணிகள் பொருத்தப் பட்டுள்ளமை சிறப்பான அம்சமாகும். பத்திரகுண்டலம், சங்கபத்திர குண்டலம், ரத்னகுண்டலம், சர்ப்ப குண்டலம், நக்கிர குண்டலம் போன்றபல வகையான குண்டலங்கள் பல்வேறு தெய்வங்களுக்குப் பொருத்தமாகக் கூறப்பட்டுள்ளன. இத்தகைய குண்டலங்களைச் செய்வதற்குப் பனை யோலைகளும், மற்றும் இரத்தினம் போன்ற பொருட்களும் பயன்படுத்தப் படும். சங்குகளினாலும் இத்தகைய குண்டலங்கள் செய்யப்பட்டுள்ளன. சிவனும், கணபதியும் சர்ப்ப குண்டலத்தையும், உமையவள் பத்திரகுண்டலத்தையும்,சங்கபத்திர குண்டலத்தையும், விஸ்ணு, சூரியன் ஆகியோர் கிரீடகுண்டலத்தையும், குண்டல பூசணத்தையும் அணிந்து விளங்குவார்கள். பொதுவாக ஆண், பெண் தெய்வங்களின் காதுகளில் நக்கிர குண்டலமும் காணப்படுகின்றது.

**மூக்கு அணிகள்:**

இத்தகைய அணிகலன்கள் வேசரே என்ற பெயரால் அழைக்கப்படும். இத்தகைய சிறப்பு வாய்ந்த அணிகலன்களை விஷ்ணுவோடு தொடர்புடைய கோபிகைகள் அணிந்து கொண்டதாகக் கூறப்படுகின்றது. இன்றைய நவீன யுகத்திலும் இத்தகைய மூக்கணிகலன்கள் பல்வேறு வடிவங்களில் பெண்களால் அணியப்பட்டு வருகின்றது.

**கழுத்தணிகள்:**

இத்தகைய கழுத்தணிகள் ஆரம்ப காலங்களில் மொஹஞ்சதாரோ வடிவங்களில் காணப்பட்டன. விக்கிரகநூல்களிலே இந்த ஆபரணங்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. நிஸ்கம், ஆரம் போன்ற பெயர்களால் இவை குறிப்பிடப் படுகின்றன. இருக்கு வேதப்பாடங்களில் நிஸ்கம் பற்றிய குறிப்புகள் காணப் படுகின்றன. தற்போது பெண்களால் அணியப்பட்டு வரும் நெக்லஸ் என்ற ஆபரணத்தையே நிஸ்கம் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

சிவபெருமான் பல மாலைகளின் பாரத்தைத் தாங்கியவனாக விக்கிரக நூல்களிலே குறிப்பிடப்படுகின்றான். தெய்வங்கள் அனைத்திற்கும் பூணூல் முக்கியமானதாகும். கழுத்தைச் சுற்றி மார்பிலே அணியப்படுவது சன்னவீரம் என்ற ஆபரணமாகும். இதன் நடுவே நாணய வடிவமொன்று காணப்படுகின்றது. விஷ்ணு புராணத்தின் படி பல்வேறு


வகையான இரத்தினக்கற்களைக் கொண்டு இந்த ஆபரணம் செய்யப் படுவதாகக் கூறப்படுகின்றது. சில நூல்களில் புஜபந்தம், உதரபந்தம் போன்றவைகளும் குறிப்பிடத்தக்கதாகும். புஜபந்தம், மார்பு, வயிற்றைச் சுற்றி அணியப்பபட்டடன. புஜபந்தம் பெண் விக்கிரகத்திற்கும், உதரபந்தம் ஆண் தெய்வத்திற்கும் அணியப்படுவது. இடையைச் சுற்றி அணிவது மேகலா என்றும் காந்தி தாமம் என்றும் கூறப்படும்.

**கையணிகள்:**

கையிலே அணியப்படும் அணிகலன் கேயூரம் எனப்படும். கையின் கீழ்ப் பகுதியிலே அணியப்படுவது கங்கணம் என்ற பெயரால் அழைக்கப்படும். இது பல நுட்ப வேலைப்பாடுகளால் ஆனது. சிந்து வெளி கால முத்தரைகளிலே கைகள் இரண்டிலும் பல வளையங்கள் அணிந்த பெண்களின் தோற்றத்தைக் காண முடிகின்றது. இன்றைய கால கட்டத்திலும் தங்கம் வெள்ளியிலான வளையங்களைப் பெண்கள் சிறப்பாக அணிவது குறிப் பிடத்தக்கதாகும்.

அரையிலே அணியப்படும் அரை ஞாணும் தெய்வங்களோடு தொடர்பு படுகின்றது. பாதத்தின் மேல் பகுதியை அலங்கரிக்கும் அணிகலனும் பெண் தெய்வங்களோடு தொடர்பு படுகின்றது. இது மஞ்சீர என அழைக்கப்பட்டது. இதனைவிட உள்ளங்கைகள் விரல்கள் போன்றவையும் அணிகலன்களாய் அலங் கரிக்கப்படுகின்றன. விரல்கள் மோதிரத் தால் நுட்பமான வேலைப் பாடுகளோடு அமைந்திருந்தன. இவ்வகையில் சிந்து வெளி மொஹஞ்சதாரோ அகழ்வுகளில் தெய்வங்களை அலங் கரிக்கும் வகையில் அணிகலன்கள் அணியப்படும் வழக்கம் இருந்து வந்தமையை ஊகிக்க முடிகின்றது. இத்தகைய அணிகலன்கள் சில தட்டையானதாகவும் வட்டமான தாகவும் நிறமானதாகவும் நுட்ப வேலைப் பாடுகளுடன் கூடியதாகவும் அமைந் துள்ளன. தெய்வங்களுக்கு அணிந்து அதன் அழகை ரசித்த மக்கள் பின்பு அவ்வணிகலன்களைத் தமக்கு அணிந்து அழகு பார்த்தனர். இன்றைய நிலையில் ஒருவரை அழகு செய்வதற்கு மட்டு மல்லாமல் இத்தகைய அணிகலன்கள் ஒருவருடைய சமூக மதிப்பையும் உயர்த்தி விடுகின்றன.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்



# ஈழத்தில் சைவ ஆலயங்களும் அறப்போதனைகளும்

ஈழத்திருநாட்டில் சைவசமய ஆலயங்களில் அறச்சிந்தனைகளை மக்களுக்கு எடுத்துரைப்பதில் ஆர்வம் காட்டாத சூழ்நிலை இன்று வளர்ந்து கொண்டிருக்கின்றது. எல்லா மத ஸ்தலங் களிலும் பூசை வழிபாட்டில் நல்ல சிந்த னைகளை போதனை செய்வது முக்கியத் துவம் பெற்றுள்ளது. ஆனால் எமது சைவ ஆலயங்களில் கிரியைகளும் வழிபா டுகளும் பெறும் முக்கியத்துவம் ஆன்ம ஞான உபதேசங்களுக்கு வழங்கப்படு வதில்லை. இது மிகவும் பிரச்சினை களுக்குரிய விடயங்களாக பல அறிஞர் களும் சுட்டிக்காட்டி இருக்கின்றனர். வெறும் சடங்குகளோடு சமய விழாக்கள் முடிவடைந்து விடுமேயானால் சமய உண்மைகளும் சமய தத்துவங்களும் மக்களிடையே வளர்த்தெடுக்கப்பட முடியா மல் போய்விடும். இந்நிலை மாறவேண்டும் எமது நாட்டிலும் இந்தியாவிலும் ஆலயங்களில் சமயப் போதனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தன்மை அருகிக் கொண்டு போகின்றது. இந் நிலையும் மாறவேண்டும்.

ஈழத்திருநாட்டில் ஆலயங்கள் அறப்போதனைக்கு முதன்மை கொடுத்த வரலாறு உண்டு குறிப்பாக ஆலயங்களில் நடாத்தப்பட்ட புராணப்படிப்புப் பாரம் பரியம் வழிபாட்டிற்காக வரும் மக்களி டையே வாழ்வாங்கு வாழ்வதற்கான சிந்தனைகளை புராணப்படிப்பினூடாக எடுத்துரைத்தது. புராணப்படிப்புப் பாரம் பரியம் ஆலயங்களில், மடங்களில், சத்திரங்களில், பெரிய மரவிருட்சங்களின் அடியில், வீட்டுத் திண்ணைகளில் வளர்த் தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அந்நியர்கள் ஈழத்திருநாட்டைக் கைப்பற்றி சைவத்திருக்கோவில்கள் அனைத்தையும் அழித்தொழித்த போதிலும் சைவ சமய வழிபாட்டு நெறிமுறை மறைமுகமாக பின்பற்றப் பட்டது. சைவ சமயப் போதனைகள் வீட்டுத்திண்ணைகளிலும் நிலாமுற்றத்துப் போதனைகளிலும் காப்பாற்றப்பட்டுள்ளன. ஆனால் இன்று ஆலயங்கள் பிரமாண் டமாக கட்டி எழுப்பப்பட்டு பல்வேறு வசதிகளோடு ஆலயச் சூழல் அமைக்கப் பட்டுள்ள போதிலும் நித்திய நைமித்திய வழிபாடுகளில் ஞான உபதேசங் களுக்கான முக்கியத்துவம் சீராக்கம் பெறவில்லை. நல்லை நகர் நாவலர் பெருமான் ஈழத்துச் சைவசமய வரலாற்றில் பெரும் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய வரலாற்றாளர் என்பதை அனைவரும்

ஒப்புக் கொள்வர். ஆலயங்களில் வழி பாட்டோடு நல்ல சிந்தனைகள் போதிக்கப் படவேண்டும் என்ற கருத்தினை முன் வைத்து பிரசங்க மரபினை அறிமுகம் செய்து வைத்தார்.

**ஆலயங்களில் பிரசங்க மரபு**

நல்லை நகர் நாவலர் பெருமான் வண்ணார்பண்ணைச் சிவன்கோயிலில் சமயப்பிரசங்க மரபினைத் தோற்று வித்தார். அவர் ஆற்றிய பிரசங்கம் மக்களை ஆற்றுப்படுத்தியதுடன் சமய உண்மைகளை மக்கள் அறியும் வாய்ப் பினை ஏற்படுத்தியது. நாவலர் பெருமான் குடாநாட்டில் உள்ள பல சைவ ஆலயங் களில் தனது பிரசங்கத்தினூடாக மக்களைக் கவர்ந்தவர். நல்ல ஒழுக்கவியற் கருத்துக்களை பிரசங்கத்தினூடாக எடுத்துரைத்து மக்களை புனிதவழிக்கு திசை திருப்பினார். ஆலயங்களில் நடைபெற்ற கேளிக்கைகளை நிறத்து வதங்கும் பலியிடல் போன்ற வேள்வி முறைகளைத் தடுப்பதற்கும் நாவலர் பெருமானது பிரசங்கம் பெரிதும் பயன் பட்டது. இவை மட்டுமன்றி மதமாற்றங் களுக்கு உட்பட்டவர்களை மீளச் சைவசம யத்திற்கு ஈர்ப்பதற்கும் மதம் மாறுவதைத் தடுப்பதற்கும் பிரசங்கத்தை பெரிதும் பயன்படுத்தியவர் நாவலர் பெருமான். அவர் ஏற்படுத்திய பிரசங்கத்தின் தொடரினால் அவரைத்தொடர்ந்து பலர் ஆலயங்களில் சமயப் பிரசங்கங்களை ஆற்றி மக்களை நெறிப்படுத்தியதோடு கோயில்களையும் புனிதபிரதேசமாகப் பேணுவதற்கு உதவினர். நாவலர் வழியில் பிரசங்க மரபைப் பேணியவர்கள் செய்த தொண்டுகள் ஈழத்தின் சைவ மறு மலர்ச்சிக்கு பெரிதும் துணை செய்தன. காலத்திற்குக் காலம் பல பிரசங்க வித்தகர்கள் தோன்றி பாமர மக்களையும் பக்தி நெறியில், பண்பாட்டு நெறியில் வாழ வழிகாட்டினர். திருக்கோவில்கள் பல பிரசங்கத்திற்கு பெருமதிப்புப் கொடுத்தன.

**கதாப்பிரசங்க மரபு**

ஆலயங்களில் சமய வரலாறு களையும் புராண இதிகாசத் தத்துவங் களையும் இசையோடு கூடி எடுத்துரைக் கின்ற மரபே கதாப்பிரசங்க மரபாகும். ஈழத்தில் கதாப்பிரசங்க விற்பன்னர்கள் ஆலய விழாக்களில் தமது இசைஞானத் திறமையினாலும் சொல் வன்மையாலும் மக்களை நெறிப்படுத்தினர். காலத்திற்குக் காலம் அற்புதமான கதாப்பிரசங்கர்கள் தோன்றிப் பணியாற்றியுள்ளனர்.

**வில்லிசை**

கதாப்பிரசங்க மரபு தழுவிய இசையோடு கூடிய ஒருநிகழ்ச்சியாக இக்கலைவடிவம் 20ஆம் நூற்றாண்டில் சைவ சமய வழிபாட்டில் இடம் பெற்றுள்ளது. ஆலயங்களில் சமயச் செய்திகளை இக்கலை வடிவத்தினூடாக மக்களிடையே எதுத்துரைக்கின்ற பண்பாடு சிறப்புப்பெற்று விளங்கியுள்ளது. 1950கள் முதல் 20ஆம் நூற்றாண்டின் நிறைவு வரை இத்துறையில் சமயச் செய்திகளைச் சொல்லுகின்ற கலைஞர்கள் சிறந்த பணியாற்றியுள்ளனர். திருப்பூங்குடி ஆறுமுகம், கலாவிநோதன் கணபதிப்பிள்ளை (சின்னமணி), லடீஸ் வீரமணி, மாஸ்டர் சிவலிங்கம், சதாசிவம் போன்ற கலைஞர்கள் வில்லிசைக் கலை மூலமாக ஆலயங்களில் சமயக்கருத் துக்களை நீண்ட காலமாக எடுத்துரைத்து வந்துள்ளனர். இக்கலைவடிவமும் இன்று அருகி வருகிறது. திருக்கோவில்களில் வில்லிசை மூலம் சமயச் செய்திகளைச் சொல்லுகின்ற வழக்கம் மிகவும் குறைந்து விட்டது.

**நடன, நாடக, கூத்துக்கலைகள்**

மேற்குறித்த கலைவடிவங் களினூடாக சமய காப்பியச் செய்திகள் ஆலயங்களில் மக்களுக்கு எடுத்துரைக்கப் பட்டு வந்தன. இக்கலை வடிவங்க ளினூடாக மக்களுக்கு நல்ல செய்தி சொல்லுகின்ற தன்மை இன்று அருகிப் போய்விட்டது

**புராணபடன மரபு**

ஆலயங்களில் கந்தபுராணம் பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், விநாயகபுராணம், திருவாதவூரடிகள் புராணம் போன்றவற்றை ஒருவர் படிக்க மற்றவர் விளக்க உரை சொல்ல மக்கள் ஆர்வமாகக் கேட்கின்ற மரபு ஈழத்துச் சமய மரபில் மிகவும் முதன்மை பெற்றது. யாழ்ப்பாணம் கந்தபுராணக் கலாசாரம் பேணுகின்ற பூமி என பாரத நாட்டவர்கள் சிறப்பித்துக் கூறும் அளவிற்கு புராண பாரம்பரியம் இங்கு மதிப்புப் பெற்றது. புராணப்படிப்புப் பாரம்பரியத்தை கோவில் பூசகர்கள், அறங்காவலர்கள், பக்தர்கள் இணைந்து நடாத்தி வந்தனர். அன்றைய சூழலில் மணித்தியாலக்கணக்காக மக்கள் புராணப்படிப்பை ஏற்றனர். அன்று பெரும்பாலான மக்கள் விவசாயிகளக விளங்கிய காரணத்தினால் அவர்களுக்குப் போதிய அளவு நேரம் புராணப்படிப்பைக் கேட்கக் கூடியதாக வாழ்வியல் சூழல் அமைந்தது. இன்று புராணப்படிப்பு நிகழ்கின்ற போது ஒரு சிலரே பங்கு பற்றுகின்றனர். இன்று புராணப்படிப்புப் பாரம்பரியமும் அருகிக்கொண்டிக்கின்றது.

**ஆலயங்களில் பூசை வழிபாட்டுடன் நற்சிந்தனைக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.**

ஆலய வழிபாட்டில் நற்சிற்தனை, கூட்டுப்பிரார்த்தனை மிகவும் முக்கியம் பெற வேண்டும் என்ற கருத்தினை ஈழத்துச் சமய வரலாற்றில் நாவலருக்குப் பின் நெறிப்படுத்தியவராக அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் விளங்குகினார். 1950 களுக்குப் பின் சமயச் சொற்பொழிவு களினூடக மக்களை ஆற்றுப்படுத்தி வந்த இவர் பலரை நெறிப்படுத்தியுள்ளார். குறிப்பாக, தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் பூசை வழிபாட்டோடு நற்சிந்தனைக்கும் கூட்டுப் பிர்ரார்த்த னைக்கும் நேரம் ஒதுக்கி அம்மரபு சிதைந்து விடாமல் காப்பாற்றி வந்தார். இவரது முன்னுதாரணத்தைப் பின்பற்றிச் சில ஆலயங்களில் நித்திய, நைமித்திய வழிபாட்டு நிகழ்ச்சிகளில் சமய சொற் பொழிவுகள் நற்சிந்தனைகளுக்கு இடம் ஒதுக்கப்பட்டது. பல ஆலயங்களில் திருவிழாக்காலங்களில் சமயச் சொற் பொழிவைக் கேட்கின்ற வாய்ப்பு வளர்ச்சி பெற்று வந்தது எனினும் துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நற்சிந்தனை நடை பெற்றுவந்த ஒழுங்கு ஏனைய ஆலயங் களில் பேசப்பட முடியாமல் போய் விட்டது.

**இன்று சைவ ஆலயங்கள் அறப் போதனைகளை வளர்ப்பதற்குச் செய்ய வேண்டிய அடிப்படைக் கடமைகள்.**

சைவ ஆலயங்களை வழிநடத்து கின்ற அறங்காவலர்கள் ஆலய வழிபாட்டு நிகழ்ச்சிகளில் வாரத்தில் ஒரு நாளாவது மக்களை நல்வழிப்படுத்துகின்ற நற்சிந் தனைகளை வளர்ப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும். பிரசங்கத்துறையில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களை அழைத் துத்தான் நற்சிந்தனை சொல்லுகின்ற முறையை ஏற்பாடு செய்யத்தேவை யில்லை ஆலயத்தில் பூசை செய்கின்ற குருவோ அல்லது அறங்காவலரோ அல்லது அடியவரோ யாரோ ஒருவர் அறங்கூறுகின்ற நூல்களைக்கொண்டு வந்து வழிபாட்டிற்குவரும் மக்களுக்கு வாசித்துக்காட்டி மக்களுடைய மனதில் நல்லறிவைப் போதிக்கவேண்டும். அறப் போதனை என்பது அருமருந்தாக ஒவ் வொரு சந்தர்ப்பத்திலும் இருநேரமாக மக்கள் கேட்பதற்கு வழிசெய்யவேண்டும். ஆலய அறங்காவலர்கள் ஆலயப்பூச கர்கள் இவ் விடயத்தில் அக்கறை காட்டாது இருப்பார்களானால் எமது சமய உண்மை களை எதிர்காலச் சந்ததி சீராக அறிய வாய்ப்பில்லாமல் போய்விடும். அறச்சிந் தனைகள் சொல்வதற்குப் பணச்செலவு இல்லை. இன்று எல்லோரும் எழுத்தறிவு உடையவர்கள், எம் முன்னோர்கள் சொல்லிவைத்த நல்ல செய்திகளை மீளவாசித்து விட்டால் பலரது எண்ணங் களில் நல்ல கருத்துக்களை பதிய

வாய்ப்பிருக்கும். இன்று சைவர்களாகிய நாம் இவ்விடயத்தில் அக்கறைகாட்டாது விடுவோமானால் நாம் அடுத்த தலை முறைக்கு பெரிய துரோகம் செய்தவர்களா வோம் ஆலயங்களில் நற்சிந்தனை ஊடாக அறம் போதிக்கப்படுவதோடு அன்பு, ஜீவகாருண்யம், இரக்கம், பிறருக்கு உதவும் மனப்பாங்கு, நன்றி மறவாமை போன்ற நல்லன மக்களிடையே எடுத்து ரைக்கப்பட முடியும். வேறும் கிரியைக ளாலும் சடங்குகளாலும் மக்களை முழு மையாக ஆற்றுப்படுத்த முடியாது. இன்று கோவில்களில் பெரும் மாடமண்டபங்கள் கட்டப்படுகின்றன. ஆனால் அம்மண்ட பங்களை அறப்போதனைக்காக, ஞான உபதேசங்களுக்காக பயன்படுத்துவ தில்லை இறைவனின் பெயரால் நாம் செய்யும் திருப்பணிகள் எல்லாம் இறை அடியவர்களுக்குப் பயன்படும் என்ற உண்மையைப் பலரும் இன்று அறிந்து கொள்வதில்லை.

**ஆலய அறங்காவலர்கள் பூசகர்கள் போன்றோருக்கான தொழிற்பயிற்சிகள்**

இன்று ஆலயங்களை வழிநடத்து கின்றவர்கள் ஆலய மரபுகளை, சமய தத்து வங்களை, வரலாற்று மேன்மைகளைக் கற்றுக்கொள்வதில் அக்கறை கட்டுவ தில்லை. இதுவும் எமது சமயத்திற்கு உகந்தது அல்ல. அரசர்களது ஆட்சிக் காலங்களில் அரசர்கள் கோவில்களைக் கட்டியபோதும் சமயமேன்மைகளைக் கற்பதற்காக காலம் ஒதுக்கிக் கற்றுக் கொண்டனர். அரசன் போர்ப்பயிற்சி பெற்ற தோடு நின்று விடாது ஆத்ம விசாரணை களைத் தொடர்ந்து அத்துறை சார்ந்த ஞானிகளிடத்தும் அறிவை வளப்படுத்திக் கொண்டான். இவ்வரலாற்று உண்மையை நாம் அனைவரும் உணரவேண்டும். இராஜஇராஜ சோழன் முதல் ஈழத்து ஆட்சிப் பீடத்தை அலங்கரித்த பரராஜ சேகரன் வரை ஆன்மீகத்தை, அற இலக்கி யங்களை, வைத்தியத்தை எத்தனை தூரம் கற்றனர் என்பதற்கு வரலாற்று நூல்கள் சான்றுபகர்கின்றன. இன்று கோவில்களை வழிநடத்துகின்ற அறங்காவலர்களில் பெரும்பாலானவர்கள் சமய உண்மை களைக் கற்றுக்கொள்வதில்லை; அறிவதும் இல்லை. விதிவலக்காகச் சிலர் சமய மேன்மைகளைக் கற்று ஆலயங்களைப் பேணி வருகின்றனர். எனினும், எதிர் காலத்தில் ஈழத்திருநாட்டில் ஆலய அறங் காவலர்களுக்கு பயிற்சி வழங்கல் இடம்பெறுவது அவசியமாகும். ஆலய நிர்வாகக் கட்டமைப்பை சீராகக் கட்ட மைப்பதற்குக் கொடுக்க வேண்டிய பயிற் சியோடு ஆலயங்களில் அறக்காவலர்கள் அறப்போதனை செய்வதற்கு திட்டமிட்ட பயிற்சி வழங்குவது அவசியமாகும் என்பது எனது தாழ்மையான கருத்து ஆகும்.

**ஆலயச் சிவாச்சாரியர்களுக்கான ஆன்மீகப் பயிற்சி**

ஆலய பூசகர்களுக்கான கிரியைப் பயிற்சிகளை அவர்கள் தத்தம் குருவை நாடிப் பெற்றுக் கொள்வர். அவர்களுக்கான கிரியை நிறுவனங்களிலும் பயிற்சி பெறுவர். எனினும், ஆலயக் குருமார்கள் அறப்போதனை செய்யக்கூடிய ஆற்றலு டையவர்களாக எதிர் காலத்தில் விளங்கு வதற்கு அவர்களுக்கான பயிற்சிகள் எதிர்காலத்தில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். சில ஆலயங்களில் சிவாச் சாரியார்கள் அறப்போதனை செய்யக் கூடியவர்களாக விளங்குகின்றார்கள். எனினும் பெரும்பாலான ஆலயங்களில் இருக்கின்ற சிவாச்சாரியார்கள் அறப் போதனைகளில் ஆர்வம் காட்டாதவர் களாகக் காணப்படுகின்றனர். இந் நிலை மாறவேண்டும். அவர்கள் செய்யும் கிரியை களின் விளக்கங்கள்,அவற்றினால் ஏற்படும் பலா பலன்கள் ஆகியன மக்களுக்கு எடுத் துரைக்கப்படாவிடின் மக்கள் பெறுகின்ற பலாபலன்கள் ஒன்றுமில்லை. ஆலய விழாக்கள் தொடர்பான விளக்கங்களை அறியாத மக்கள் இன்று பலர் உள்ளனர். அன்று எழுத்தறிவு இல்லாத மக்கள் பெற்ற ஆன்மீக அனுபவங்களை இன்று எழுத்த வுள்ள சமுதாயம் பெறவில்லை என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர். பிற மதத்து

சமய குருமார்கள் தமது வழிபாடுகளில் அறப்போதனைக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை எமது சமய குருமார்கள் கருத்தில் கொள்ள வேண்டும். சமயத்தை, சமூகத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நாம் தலைவணங்கும் குருமார்களுக்கும் உரியதே.

**ஆலயங்களில் அறநெறிப்பாடசாலை**

இலங்கையிலுள்ள ஏனைய மதத்தவர்கள் தமது சிறார்களுக்கு வாரத்தில் இருநாள் சமய அறப்போதனைகளுக்கான வகுப்புக்களை நீண்டகாலமாக நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் 1977களுக்குப்பின் இலங்கை அரசாங்கம் இந்து சமயத்துறை சார்ந்த ஓர் அமைச்சினை நிறுவி அவர்களுக்கான கடமைகளையும் வகுத்துக் கொடுத்தது இந்து கலாச்சார அமைச்சு தமது திட்டங்களில் ஒன்றாக அறநெறிப் பாடசாலைத் திட்டத்தை அறிமுகம் செய்தது. கொழும்பு இராம கிருஸ்ண மிசன் கொழும்பு சைவ முன்னேற்ற சங்கம் போன்ற நிறுவனங்கள் அறநெறிப் பாடசாலையை முதலில் ஆரம்பித்தன. பின்பு மலையகத்திலும் கிழக்கிலங்கையிலும் அறநெறிப்பாடசாலைகள் தோற்றம் பெற்றன. ஈழத்தின் வடபால் அறநெறிப்பாடசாலைகள் பற்றிய ஆர்வம் இருக்கவில்லை. எனினும் கடந்த 10 ஆண்டுகளாக அறநெறிப்பாடசாலை தொடர்பான ஆர்வம் வளர்ச்சி பெற்றுள்ளது. வன்னி பெருநிலப்பரப்பிலும் மன்னாரிலும் திருகோணமலையிலும் பல அறநெறிப்பாடசாலைகள் தோற்றம் பெற்றுள்ளன. எனினும் பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்புவதில் அதிக ஆர்வமின்மை காணப்படுகின்றது குறிப்பாக ஏனைய மதத்தவர்களுடன் ஒப்பிடுகையில் சிறுவர்களை ஆன்மீக வகுப்புகளுக்கு அனுப்பும் வழக்கம் எம்மவர்களிடம் போதாமல் இருக்கின்றது. இது எமது சந்ததி செய்த தவறோ தெரியவில்லை. இந்நிலை மாறவேண்டும். குறிப்பாக. மிக வசதியுடைய ஆலயங்கள் அறநெறிப் பாடசாலையை உருவாக்குவதில் அக்கறை இல்லாது இருக்கின்றன. அறநெறிப் பாடசாலை வளர்ச்சிக்கு ஈழத்து ஆலயங்கள் கொண்டுள்ள அக்கறை மிகவும் குறைவு. ஆலய வருவாயில் அறநெறிப் பாடசாலையை அமைக்கப் பல ஆலயங்கள் பின்நிற்கின்றன. "அறம் போதிப்பது ஆலயம்" என்பதை அறங்காவலார்கள் உணரவேண்டும். அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு சீருடை, உபகரண உதவி என சில திட்டங்களை திணைக்களங்கள் கண்துடைப்புக்காக அறிமுகம் செய்வதும் வழக்கமாகி விட்டது. இந்நிலை மாறி, முழுமையாக அறநெறிப் பாடசாலைகளை எல்லா ஆலயங்களும் சீரான திட்டமிடலுடன் வழிநடத்த வேண்டும். இவர்களுக்குரிய பாடத்திட்டங்கள் இவர்களது வயதிற்குரியவையாக அமைதல் வேண்டும் அன்பு, இரக்கம், கருணை, தயவு போன்றவற்றை அறநெறிப்பாடசாலைகள் முழுமையாகப் போதிப்பதற்கு வழி செய்ய வேண்டும்.

சைவ ஆலயங்கள் இன்று அவசியமாகச் செய்ய வேண்டிய உன்னத பணிகளில் அறப்போதனைகளின் அவசியம் பற்றியும் அவற்றை ஓரளவேனும் பேணவேண்டிய வழிமுறைகளையும் அறிவுக்கு எட்டியவாறு தந்துள்ளேன். இவ் அறிவைக் கருவாகக் கொண்டு ஆலயங்கள் செயற்படவேண்டும் எனக் கூறி நிறைவு செய்கிறேன்.

ஓம் சக்திமயம்

# பால கணபதி
## தேர்த்திருப்பணிக்கு நிதியுதவி வழங்கியுள்ளோர்

| இல | பெயர் | ரூபா சத |
|---|---|---|
| 01 | கிருஷ்ணபிள்ளை நல்லம்மா கதிர்காமநாதன் - உ | 105,011.00 |
| 02 | பொ.ஐயாத்துரை - இரத்தினேஸ்வரி | 5,000 00 |
| 03 | ஐயாத்துரை உதயரத்தினம் ஜீவதேவி | 5,000.00 |
| 04 | பாலேந்திரம் பிரசன்னா அனோஜா | 5,000.00 |
| 05 | பொ.துரைராசா திரவியமலர் | 6,000.00 |
| 06 | த.கிருஷ்ணா லீலா | 100,005.00 |
| 07 | தங்கவடிவேல் சிவபதியம்மா | 35,000.00 |
| 08 | சிங்கராசா அமிர்தகுமாரி | 2,500.00 |
| 09 | செ.அட்ஜெயலிங்கம் - சீதா | 51,433.00 |
| 10 | ம.சின்னராசா (ஸ்தபதி, மல்லாகம்) | 1,001.00 |
| 11 | ஸ்ரீஸ்கந்தராசா சிவசங்கர் | 10,000.00 |
| 12 | க.தர்மகுலசிங்கம் | 2,005.00 |
| 13 | க.தங்கவேல் - சிவமலர் | 100,000.00 |
| 14 | ம.கணேசலிங்கம் | 1,100.00 |
| 15 | சு.குலசேகரம் (வதிரி) | 1,000.00 |
| 16 | ந.ஆதவன் - துஷியந்தி | 5,002.00 |
| 17 | இரத்தினராசா பாரதி | 1,000.00 |
| 18 | தி.ஸ்ரீரங்கநாதன் | 1,000.00 |
| 19 | அ.சௌந்தரதாசன் | 500.00 |
| 20 | வெ.ஸ்ரீதர் (தேவரையாளி) | 1,000.00 |
| 21 | சி.செல்வநாதன் | 1,100.00 |
| 22 | சீ.இராசநாயகம் | 1,000.00 |
| 23 | மா.அனந்தராசன் | 1,000.00 |
| 24 | செ.கணேசன் | 1,000.00 |
| 25 | க.தர்மதேவன் | 1,000.00 |
| 26 | த.கலாமணி | 1,000.00 |
| 27 | இ.சிவபாதம் | 1,000.00 |
| 28 | யோ.ரஜினிகாந் | 1,000.00 |
| 29 | பொ.பார்த்திபன் - கவிதா | 11,000.00 |
| 30 | ப.நவரத்தினம் - தவமணி | 100,000.00 |
| 31 | ந.சர்வநிதி | 2,000.00 |
| 32 | நிமலராஜா சசிகலா (லண்டன்) | 50,000.00 |
| 33 | ஸ்ரீரங்கநேசன் - ஜெயந்தினி | 50,000.00 |
| 34 | நவரட்ணம் நவராஜா (லண்டன்) | 200,000.00 |
| 35 | கலாநிதி லதா (நெதர்லாண்ட்) | 50,000.00 |
| 36 | இன்பவடிவேல் - மாலா (ஜேர்மனி) | 30,000.00 |
| 37 | ஆனந்தராஜா கேமா (லண்டன்) | 25,000.00 |
| 38 | க.வாசுதேவன் | 2,000.00 |
| 39 | தர்மரத்தினம் - கலாவதி | 5,000.00 |
| 40 | பொன்னையா - தர்மசோதி (கனடா) | 50,000.00 |
| 41 | வரதராஜா தவமலர் (கனடா) | 50,000.00 |
| 42 | தவநேசன் - தர்மஸ்ரீ | 1,000.00 |
| 43 | சின்னையா கிருஷ்ணராஜா (கனடா) | 20,000.00 |

| | | |
|---|---|---|
| 44 | ச.நாகேந்திரன், ச.நவரட்ணம், ச.புஸ்பமலர் (கனடா) | 27,000.00 |
| 45 | பாக்கியநாதன் - தவமலர் (கனடா) | 40,000.00 |
| 46 | மாணிக்கம் - சின்னராசா | 5,000.00 |
| 47 | சின்னராசா - கௌசிகன் | 5000.00 |
| 48 | சின்னராசா கபிலன் | 5,000.00 |
| 49 | சபாமணி கௌதமன் - சாந்தினி (டென்மார்க்) | 25,000.00 |
| 50 | தில்லைநாதன் இரத்தினகுமாரி | 10,000.00 |
| 51 | சிவகுருநாதன் - பாக்கியமலர் | 10,000.00 |
| 52 | விஜயநாதன் - செந்தூரன் | 10,000.00 |
| 53 | சின்னவன் - ஸ்ரீரங்கன் (கனடா) | 10,000.00 |
| 54 | ஆழ்வாப்பிள்ளை ஜெயச்சந்திரன் | 5,010.00 |
| 55 | பொன்தலன் - மகாசாயிராம் (நோர்வே) | 2,000.00 |
| 56 | மா.கிருஷ்ணகாந்தன் (வதிரி) | 1,000.00 |
| 57 | ஸ்ரீதரன் - தாரணி | 1,000.00 |
| 58 | குகேந்திரன் - கலைவாணி | 1,000.00 |
| 59 | செல்வராசா சிவனேஸ்வரி | 1,000.00 |
| 60 | ரவீந்திரராசா ரஞ்சனா (கனடா) | 50,000.00 |
| 61 | செல்வராசா சரஸ்வதி (கனடா) | 103,000.00 |
| 62 | சின்னராசா விமலன் | 5,000.00 |
| 63 | அமுதன் - சிவாஜினி | 10,000.00 |
| 64 | தம்பு - இராசதுரை - இராசலட்சுமி | 5,000.00 |
| 65 | புஸ்பேந்திரன் - சிவதேவி (சுவிஸ்) | 10,000.00 |
| 66 | ரவிரதன் - இதயதேவி | 1,000.00 |
| 67 | செ.சோதிலிங்கம் - வாசுகி (கொழும்பு) | 2,000.00 |
| 68 | ஸ்ரீபாஸ்கரன் - கலையரசி (சுவிஸ்) | 5,000.00 |
| 69 | சி.பாரதிதாசன் - வசந்தமதி | 1,000.00 |
| 70 | சபாநாயகம் - இந்திராதேவி (வதிரி, தாரிக்கப்பற்று) | 1,000.00 |
| 71 | திருவேல்மணி - நவமதி | 5,000.00 |
| 72 | கருணைவேல் - கௌரி | 50,001.00 |
| 73 | விசுவலிங்கம் - விஜயநாதன் | 1,000.00 |
| 74 | சிவபாதம் - மகாதேவி | 3,000.00 |
| 75 | மாதுஜன் கேபிள் இணைப்பு வழங்குனர் | 10,000.00 |
| 76 | ஸ்ரீஸ்கந்தராஜா றஜனி (கனடா) | 107,100.00 |
| 77 | இராஜேஸ்வரன் - பொன்மதி | 5,000.00 |
| 78 | சிவதாசன் - சந்திரமேனன் | 2,000.00 |
| 79 | சச்சிதானந்தம் - பிரபாகரன் (லண்டன்) | 25,000.00 |
| 80 | நவநீதன் - திருமலர் | 15,000.00 |
| 81 | நடராசலிங்கம் - இரத்தினமாலா | 6,000.00 |
| 82 | செல்வராசா ஆனந்தலிங்கம் (கனடா) | 106,540.00 |
| 83 | பரஞ்சோதி நீற்றாசெல்வம் | 1,000.00 |
| 84 | தஜேந்திரன் - சர்மிளா | 5,000.00 |
| 85 | சிவாநந்தன் - செல்வமலர் | 2,000.00 |
| 86 | தெய்வீகன் - வித்யா | 1,000.00 |
| 87 | மணிவண்ணன் - சுசிகலா | 5,000.00 |
| 88 | இராசரத்தினம் - பிறேமாவதி (கனடா) | 50,000.00 |
| 89 | ஜெயக்கொடி ஜெயகாந்தன் | 2,500.00 |
| 90 | ஜெயக்கொடி காண்டீபன் | 2,500.00 |
| 91 | உதயமாலா நிசான் (கனடா) | 109,500.00 |
| 92 | ஸ்ரீதரன் - மல்லிகா | 5,000.00 |

| | | |
|---|---|---|
| 93 | சிவசுப்பிரமணியம் - குணரஞ்சிதம் | 5,000.00 |
| 94 | செல்வானந்தன் - மாலாவதி | 5,000.00 |
| 95 | ஜீவானந்தன் - நளினி | 1,000.00 |
| 96 | சந்திரலிங்கம் - மாலினி (கனடா) | 110,663.00 |
| 97 | மகேஸ்வரன் - திருமகள் (சுவிஸ்) | 60,000.00 |
| 98 | சதாசிவம் - ஈஸ்வரன் (சுவிஸ்) | 25,000.00 |
| 99 | பொன்னரசன் - மீரா (கனடா) | 35,000.00 |
| 100 | இரத்தினசிங்கம் - செல்வரூபி (லண்டன்) | 5,000.00 |
| 101 | பிரபாகரன் - றஜீனா | 1,000.00 |
| 102 | பார்த்தசாரதி மலரினி | 1,000.00 |
| 103 | கிருஷ்ணகாந்தன் - சத்தியேந்திரா | 2,000.00 |
| 104 | சூலராசா செல்வமலர் | 5,000.00 |
| 105 | குகதாசன் - கிருபாகரன் (இத்தாலி) | 25,000.00 |
| 106 | விஜயராசா விஜேந்திரா (இத்தாலி) | 5,000.00 |
| 107 | யோகலிங்கம் - கீதா | 50,000.00 |
| 108 | பரம்சோதி சசிவண்ணன் | 3,000.00 |
| 109 | நவரட்ணராஜா சத்யவதி (அமெரிக்கா) | 25,101.00 |
| 110 | பஞ்சலிங்கம் - தயாவதி | 1,000.00 |
| 111 | இராசவரோதயன் - சந்திரிக்கா (லண்டன்) | 5,000.00 |
| 112 | ஆனந்தராசா சிவமலர் | 2,000.00 |
| 113 | கமலேந்திரன் - கீதாமணி | 1,000.00 |
| 114 | பி.கிருஷ்ணானந்தன் (கொற்றாவத்தை) | 1,000.00 |
| 115 | பராக்கிரமன் - அதிஸ்ரா | 2,000.00 |
| 116 | இரத்தினேஸ்வரன் - உதயா | 2,000.00 |
| 117 | சதானந்தன் - வள்ளிநாயகி | 10,000.00 |
| 118 | குணதீசன் - ஆனந்தி (லண்டன்) | 10,000.00 |
| 119 | செல்வகுமார் - உமா (கனடா) | 25,000.00 |
| 120 | மலர்ராசா செல்வராணி | 2,000.00 |
| 121 | அரியநாயகம் - வனமலர் | 1,000.00 |
| 122 | தர்மராசா கவிதா (கனடா) | 100,000.00 |
| 123 | கமலேஸ்வரன் - சந்திரவதனா | 5,000.00 |
| 124 | யோகராசா சிவகாந் | 2,000.00 |
| 125 | சுதாகரன் - ரசீதா | 5,001.00 |
| 126 | யோகராசா சிவகரன் | 1,000.00 |
| 127 | கிருஷ்ணபிள்ளை விக்னேஸ்வரன் (லண்டன்) | 25,000.00 |
| 128 | வெற்றிவேல் - ரதி | 2,000.00 |
| 129 | சிவபாக்கியம் - சிவகரன் (லண்டன்) | 25,000.00 |
| 130 | சபாநாயகம் - சகிந்தன் (லண்டன்) | 25,000.00 |
| 131 | வல்லிபுரமம் - சிதம்பரேஸ்வரி | 50,000.00 |
| 132 | பழனிப்பழம் - சந்திரிக்கா | 2,000.00 |
| 133 | சர்வேஸ்வரன் - கிருஷிகன் | 2,000.00 |
| 134 | பஞ்சலிங்கம் - அஜந்தன் | 1,000.00 |
| 135 | செல்வநேசன் - ஜெயஸ்ரீ | 2,002.00 |
| 136 | இரவீந்திரன் - செல்வராணி | 500.0 |
| 137 | பத்மராஜன் - மேகலா | 1,000.00 |
| 138 | கமலநாதன் - பார்த்திபன் (லண்டன்) | 25,000.00 |
| 139 | விவேகானந்தன் - மகேந்திரமலர் | 2,000.00 |
| 140 | பராக்கிரமன் - தனுஷன் | 3,000.00 |

| | | |
|---|---|---|
| 141 | சிவராசா தவராணி | 2,000.00 |
| 142 | சண்முகதாசன் - சத்தியவாணி (சுவிஸ்) | 25,000.00 |
| 143 | பவானந்தன் - சர்மிளா | 1,000.00 |
| 144 | கிருஷ்ணானந்தன் - பவி | 10,000.00 |
| 145 | பவிகரன் - சங்கீதா | 2,500.00 |
| 146 | ஜீவகரன் - வேணுகா | 2,500.00 |
| 147 | சுரேந்திரா சோபனா | 1,000.00 |
| 148 | யோகநாதன் - சந்திரோதயம் | 1,000.00 |
| 149 | சத்தியதாசன் - ஜனகராணி | 5,000.00 |
| 150 | சர்வானந்தன் - சுஜாதா | 5,000.00 |
| 151 | கோபாலச்சந்திரன் - தேவகி | 5,000.00 |
| 152 | றிச்சாட் - ரஞ்சிதா | 5,000.00 |
| 153 | சத்தியலிங்கம் - கௌசல்யா (லண்டன்) | 5,000.00 |
| 154 | குமரகுரு சாந்தினி (சுவிஸ்') | 5,000.00 |
| 155 | அசோகலிங்கம் - மலர்விழி | 10,000.00 |
| 156 | வீரசிங்கம் - தெய்வநாயகி | 2,000.00 |
| 157 | சுரேஸ்பாலன் - கஸ்தூரி | 2,000.00 |
| 158 | செல்வநாதன் - ஸ்சபெல் | 2,000.00 |
| 159 | ரங்கநாதன் - சுஜீவா | 2,000.00 |
| 160 | திவ்வியநாதன் - தேனுகா | 2,000.00 |
| 161 | கயேந்திரன் - மஞ்சுளா (கனடா) | 25,000.00 |
| 162 | வித்தியாபதி சித்திரகலா | 1,000.00 |
| 163 | யோகரத்தினம் - இரஞ்சினிதேவி | 5,000.00 |
| 164 | தணிகாசலம் - இராயேஸ்வரி | 1,000.00 |
| 165 | தெய்வேந்திரம் - திருவளர்செல்வி (ஜேர்மனி) | 5,000.00 |
| 166 | திருமாறன் - கல்யாணி (சுவிஸ்) | 5,000.00 |
| 167 | மகிழ்ருபன் - திருமகள் (ஜேர்மனி) | 5,000.00 |
| 168 | திருமாவளவன் - சர்மிளா (சுவிஸ்) | 5,000.00 |
| 169 | தயாமணி - இராசவதி | 1,000.00 |
| 170 | வரதவேல் - ஜெயவதி | 2,000.00 |
| 171 | கமலநாதன் - செல்வமலர் | 5,000.00 |
| 172 | செ.வீரராசா | 2,000.00 |
| 173 | விவேகானந்தன் - கவிச்செல்வன் | 1,000.00 |
| 174 | மகேந்திரராசா - ஸ்ரீநந்தனா | 5,000.00 |
| 175 | தர்மலிங்கம் - தர்மிதன் | 1,000.00 |
| 176 | செல்வராசா லக்சுதன் | 1 000.00 |
| 177 | நேசலிங்கம் சோபிதா | 1 000.00 |
| 178 | தம்பிமுத்து சிவமணிதேவி | 1 000.00 |
| 179 | பாக்கியநாதன் சுகந்தினி | 2 000.00 |
| 180 | செல்லக்குட்டி இரத்தினம் | 1 000.00 |
| 181 | செய்வரத்தினம் தவமலர் | 4 000.00 |
| 182 | செல்வநாதன் யோகமாலா | 10 000.00 |
| 183 | மதிவாணன் சிவச்செல்வி (லண்டன்) | 10 000.00 |
| 184 | சிவதாசன் வேல்முருகா (பிரசாந் சுவிஸ்) | 10 000.00 |
| 185 | ஜெயரத்தினம் இராஜேஸ்வரி | 10 000.00 |
| 186 | திரவியராசா ரஞ்சினிதேவி | 5 000.00 |
| 187 | தர்மசாசா பாலபரமேஸ்வரி( கனடா) | 50 000.00 |
| 188 | சுந்தரவேல் சகிலா (ஜெர்மனி) | 25 000.00 |
| 189 | இராசநாயகம் சரோஜினிதேவி | 5 000.00 |

| | | |
|---|---|---|
| 190 | நாகேஸ்வரன் செல்வரஞ்சினி (கனடா) | 50 000.00 |
| 191 | கண்ணதாசன் பாமினி (கனடா) | 25 000.00 |
| 192 | சிவபாதம் சண்முகதான் சுகிர்தா (கனடா) | 25 000.00 |
| 193 | ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீராம் | 5 000.00 |
| 194 | நிவேதனன் வித்தியா (சுவிஸ்) | 20 000.00 |
| 195 | வேலாயுதம் விமலேஸ்வரன் (பிரான்ஸ்) | 25 000.00 |
| 196 | பாலேந்திரன் தவமணி | 2 000.00 |
| 197 | ஜெயவீரசிங்கம் இரத்தினகுமாரி(லண்டன்) | 10 000.00 |
| 198 | சதீஸ் துவாரகா (கனடா) | 10 000.00 |
| 200 | ரவிநேசன் மணிமேகலை | 5 000.00 |
| 201 | செல்வரட்ணம் சதீஸ்குமார் (கண்ணன்) | 5 000.00 |
| 202 | இரவீந்திரன் ராதா | 5 000.00 |
| 203 | ஜெகதீசன் ஆனந்தசோதி | 2 500.00 |
| 204 | சின்னப்பு இரத்தினேஸ்வரி (கரவெட்டி) | 1 000.00 |
| 205 | கந்ததாசன் சங்கீதா (ஜேர்மனி) | 10 000.00 |
| 206 | செல்வராசா ஜெயதேவி | 1 000.00 |
| 207 | விஜயசோதி விதீசன் | 1 000.00 |
| 208 | பாக்கியராசா மீனாட்சியம்மா | 5 000.00 |
| 209 | வஞ்ஜீஸ்வரன் வதனி (லண்டன்) | 25 000.00 |
| 210 | வேலாயுதம் கிருஷ்ணேஸ்வரன் (பாலு, லண்டன்) | 25 000.00 |
| 211 | அழகரத்தினம் ரஞ்சினி | 2 000.00 |
| 212 | யோகேந்திரா ஜெயந்தி (வதிரி) | 2 000.00 |
| 213 | பாலசுந்தரம் நிரஞ்சன் | 5 000.00 |
| 214 | வதிராசா கெங்கா | 1 000.00 |
| 215 | தம்பிராசா திலகராசா | 1 000.00 |
| 216 | அன்ரன் யசோ | 1 000.00 |
| 217 | பிறேமதாசன் மங்கையற்கரசி | 5 000.00 |
| 218 | குணரத்தினம் விநாயகதாசன் | 1 000.00 |
| 219 | சுதர்சன் சுதர்சினி | 1 000.00 |
| 220 | மாணிக்கம் அம்பிகைபாகன் | 5 000.00 |
| 221 | செல்லத்தம்பி தவநாயகி | 1 000.00 |
| 222 | ராஜ்குமார் சுபாசினி (ஜெர்மனி) | 10 000.00 |
| 223 | குமணதாசன் குகவதி | 1 000.00 |
| 224 | காண்டீபன் அனுசா (லண்டன்) | 5 000.00 |
| 225 | செல்வலிங்கம் தர்மதேவி | 1 000.00 |
| 226 | இந்திரலிங்கம் கீர்த்திகா | 2 000.00 |
| 227 | இராஜலிங்கம் இராஜேந்திரலிங்கம் (பிரான்ஸ்) | 1 000.00 |
| 228 | யோகராசா பொற்செல்வி | 1 000.00 |
| 229 | தவராசா சசிரேகா | 1 000.00 |
| 230 | குமாரதாசன் விஜயா | 2 000.00 |
| 231 | தங்கநிதி மலர்மகள் | 1 000.00 |
| 232 | செல்வநேசன் வர்மா, விது, பரதன் | 1 000.00 |
| 233 | கருணாநிதி சகுந்தலா | 5 000.00 |
| 234 | தர்மேந்திரா சுதர்மா (லண்டன்) | 2 000.00 |
| 235 | சிவனேஸ்வரன் தயாளினி | 1 000.00 |
| 236 | முருகேசு நவநேசன் | 1 000.00 |
| 237 | செல்வதாஸ் கிருஷ்ணா (லண்டன்) | 2 000.00 |

| | | |
|---|---|---|
| 238 | அரசரத்தினம் வசந்தாதேவி | 1 000.00 |
| 239 | கமலநாதன் கௌசல்யா | 2 500.00 |
| 240 | ஜெயந்தன் நந்தினிதேவி | 2 000.00 |
| 241 | முகுந்தன் மதுராந்தகி | 2 000.00 |
| 242 | பாலசுப்பிரமணியம் அனுசியா | 2 000.00 |
| 243 | சந்திரராசா யோகராணி | 1 000.00 |
| 244 | பூரணானந்தன் வாசுகி | 2 000.00 |
| 245 | தம்பிஜயா பார்த்தீபன் | 5 000.00 |
| 246 | கணேசலிங்கம் ஜெயந்தி | 2 000.00 |
| 247 | ஸ்ரீதரன் சத்தியகலா | 1 000.00 |
| 248 | துரைராசா மகேந்திரராணி | 10 000.00 |
| 249 | யோகதாசன் சுஜீவா (லண்டன்) | 10 000.00 |
| 250 | சபேசன் தர்சினி | 1 000.00 |

## நன்றி நவில்கிறோம்

சித்திரத் தேர் சிற்பக் கலைஞர்கள் ,

கட்டடக் கலைஞர்கள்,

நிதியுதவி செய்தோர்,

பொருட்கள் அன்பளிப்புச் செய்தோர்,

தேரோடும் வீதியைச் செப்பனிட்டோர்,

ஆலோசனைக்குழுவினர்,

பரிபாலன சபையினர்,

ஆசிச்செய்திகள், வாழ்த்துச்செய்திகள் வழங்கியோர்,

சிறப்புக்கட்டுரைகள் எழுதியோர்,

முதன்மை – சிறப்புப்பிரதிகள் பெற்றோர்,

கக்ஸ்ரொன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினர்,

அனைத்து வழிகளிலும் உதவி செய்தோர்

அனைவருக்கும் எம் இதயபூர்வமான நன்றிகள்.



Caxton Printers
KALVIJANKADU
021 4900411